விலை ரூபா: 15.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

Valampurii

பக்கங்கள்: பதினாறு

சங்கு 11 வள்ளுவர் ஆண்டு 2041 ஐப்பசி 27 சனிக்கிழமை (13.11.2010) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 329

ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
RAMCO
SLS 107 தரம் கொண்டதும்
100 வீத சாதாரண போட்லான்
சீமெந்து (O.P.C.) ராம்கோ சீமெந்து

# தமிழரின் அரசியல் அபிலாசைக்கு இன்னும் தீர்வு காணப்படவில்லை!

## புத்திஜீவிகள் ஆணைக்குழு முன் சாட்சியம்

(யாழ்ப்பாணம்)

கடந்த காலங்களில் மிதவாதத் தலைவர்கள் தொடக்கம் விடுதலைப்புலிகள் வரையில்' தென்பகுதி அரசியல் தலைவர்கள், அரசாங்கங்களுடன் நடத்தப்பட்ட சமாதானப் பேச்சுவார்த்தைகள் தொடர்ச்சியாக தோல்வியிலேயே முடிபடைந்தன. ஆயினும் தமிழ் மக்களின் அரசியல் அபிலாசைகளுக்கு எந்த முடிபும் காணப்படவில்லை என்றும் நல்லிணக்க ஆணைக்குழுவிடம் நேற்று சாட்சியமளித்த புத்திஜீவிகள் சுட்டிக்காட்டினர். (16ஆம் பக்கம் பார்க்க)

## விடுதலைப்புலிகளால் அச்சுறுத்தல் தடையை நீடித்தது இந்திய அரசு!

(புதுடில்லி)

விடுதலைப்புலிகளால் இந்தியாவுக்கு தொடர்ந்து அச்சுறுத்தல் இருந்து வருவதால் அவர்கள் மீதான தடை மேலும் இரண்டாண்டுகளுக்கு நீடிக்கப்பட்டது என்று டில்லி உயர் நீதிமன்ற நீதிபதி தலைமையிலான தீர்ப்பாயம் நேற்று வெள்ளிக்கிழமை தீர்ப்பளித்தது.

விடுதலைப் புலிகள் இயக்கத்துக்கு இந்தியாவில் விதிக்கப்பட்ட தடை நீடிக்கப்பட்டதை இரத்து செய்யக் கோரி தொடரப்பட்ட வழக்கு விசாரணை டில்லி, சென்னை மற்றும் ஊட்டி ஆகிய நகரங்களில் நடைபெற்றன.

இந்த வழக்கு விசாரணை மீண்டும் டில்லியில் உயர் நீதிமன்ற நீதிபதி விக்கிரம்ஜித் சென் தலைமையிலான தீர்பாயத்தில் நடைபெற்றது.

இந்த (16ஆம் பக்கம் பார்க்க)

## சரணடைந்த முக்கிய புலி உறுப்பினர்களை அரசாங்கம் சுட்டுக்கொன்று விட்டது!



### துணை அரசியல்துறை பொறுப்பாளரின் மனைவி சாட்சியம்

(வட்டுக்கோட்டை)

விடுதலைப்புலிகள் அமைப்பில் துணை அரசியல் பொறுப்பாளராக இருந்த விஜிதரன் என்று அழைக்கப்படும் சிவசிதம்பரப்பிள்ளை ரவிச்சந்திரன் ஆகிய எனது கணவர் 2009 ஆம் ஆண்டு யூன் மாதம் ஓமந்தையில் இராணுவத்தினரிடம் சரணடைந்தார்.

எனினும் சரணடைந்ததற்குப்பின் அவர் தொடர்பில் எதுவித தகவல்களும் இல்லை. ஆனால் விடுதலைப்புலிகள் அமைப்பில் முக்கிய பொறுப்புகளில் இருந்தவர்களை அரசு சுட்டுக்கொலை செய்து விட்டதாக எனக்கு தகவல் கிடைத்துள்ளது.

இவ்வாறு ரவிச்சந்திரன் அறிவொளி கற்றுக் கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் முன் நேற்று சாட்சியமளித்தார். (16ஆம் பக்கம் பார்க்க)

## அரச அலுவலகங்களுக்கு 19ஆம் திகதி விடுமுறை

(கொழும்பு)

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் இரண்டாவது தவணைக் கால பதவி பிரமாணத்தை முன்னிட்டு எதிர்வரும் 19ஆம் திகதி கொழும்பு 1,2,3,4 ஆகிய பகுதிகளிலுள்ள அரச காரியாலயங்கள் அனைத்தையும் மூடுவதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

அப்பகுதியில் உள்ள தனியார்நிறுவன ஊழியர்களுக்கு எதிர்வரும் 19ஆம் திகதி சம்பளத்துடன் கூடிய விடுமுறை வழங்குமாறு தொழில் அமைச்சர் காமினி லொக்குகே தனியார் நிறுவனங்களிடம் கோரிக்கை விடுத்துள்ளார். (ச-5)

## ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் அரசுக்கு ஆதரவளிக்க முடிபு

(கொழும்பு)

எதிர்க் கட்சியில் அங்கம் வகித்து வந்த முக்கிய கட்சிகளில் ஒன்றான ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பில் இணைந்து கொள்வதென கட்சியின் அதியுயர் பீடம் தீர்மானித்துள்ளது.

ஸ்ரீலங்கா முஸ் லிம் காங்கிரஸின் தலைவர் ரவூப் ஹக்கீமின் தலைமையில் கூடிய கட்சியின் அதியுயர் பீடமே இத் தீர்மானத்தை எடுத்தது.

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் தலைமையிலான ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பிற்கு ஆதரவளிக்கப் போவதாக அந்தக் கட்சியின் பொதுச் செயலாளர் ஹசன் அலி தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி இரண்டாம் தவணைக்காக பதவிப் பிரமாணம் (16ஆம் பக்கம் பார்க்க)



உறவுகளைத் தேட விண்ணப்பம் (வட்டுக்கோட்டையில் இடம்பெற்ற சாட்சியத்தில்...)

## அல் ஜெஸீராவுக்கு விசா மறுப்பு!

(கொழும்பு)

அல் ஜெஸீரா செய்தி வலையமைப்பின் புதிய ஊழியர்களுக்கான விசா விண்ணப்பத்தை இலங்கை அரசாங்கம் நிராகரித்துள்ளதை வெளிவிவகார அமைச்சு உறுதிப்படுத்தி உள்ளது.

எனினும் இதற்கான காரணம் கூறப்படவில்லை. செய்திப்பிரிவு ஊழியர்களுக்கான விசா விண்ணப்பத்தை அரசாங்கம் நிராகரித்துள்ளதாக வெளிவிவகார அமைச்சின் பொதுமக்கள் தொடர்பாடல் அதிகாரியும் அமைச்சின் (16ஆம் பக்கம் பார்க்க)

## சிங்கள மக்களை குடியமர்த்தும் அரசு எங்களை ஏன் குடியமர்த்தவில்லை

### ஆணைக்குழுவில் சாட்சியம் அளித்தவர் கேள்வி

(யாழ்ப்பாணம்)

உயர்பாதுகாப்பு வலயங்களில் தமிழர்களை குடியமர்த்த உயர்நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பு அமுல் செய்யப்படவில்லை. ஆனால் வடக்கு கிழக்கை பிரிக்கும் உத்தரவு உடனடியாக செயற்படுத்தப்பட்டது. இவ்வாறு நல்லிணக்க ஆணைக் குழுவின் முன் சாட்சியம் அளிக்கப்பட்டுள்ளது.

நேற்று சங்கானை மற்றும் சித்தன்கேணியில் நடைபெற்ற சாட்சியமளிப்பின்போது, சிங்கள மக்கள் இரவோடிரவாக நாவற்குழியில் குடியமர்த்தப்படுகின்றபோதும் 20 வருடங்களாக அதியுயர் பாதுகாப்பு வலயங்களில் இருந்து வெளியேறியுள்ள மக்கள் இதுவரை குடியமர்த்தப்படவில்லை என்று ஒருவர் சாட்சியமளித்தார். (16ஆம் பக்கம் பார்க்க)

**நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்**

# காணாமல் போனவர்களை மீட்பதற்காக இலட்சக்கணக்கில் பணம் கொடுத்தோம்

## ஆணைக்குழு முன் சாட்சியமளிப்பு

யாழ் குடாநாட்டில் காணாமல் போனகணவன்மார் மற்றும்பிள்ளைகளை இதுவரை கண்டறிய முடியாத நிலையில் அவர்களது பெயர்களைக் கூறி திட்டமிட்ட வகையில் கட்டணங்கள் அறவிடப்படுவதாக முறைப்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

அளவெட்டி மகாசபையில் நேற்று நல்லிணக்க ஆணைக்குழு வாக்குமூலங்களை பதிவு செய்யும் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளது. அங்கு பிரசன்னமாகியிருந்த 4க்கும் அதிகமான பெண்மணிகள் இந்த வாக்குமூலத்தினை தெரிவித்திருந்தனர்.

அப்பகுதியில்உள்ளகிராமசேவையாளர் ஒருவர் ஊடாக தொலைபேசி இலக்கங்கள் வழங்கப்பட்டு குறித்த நபரை தொடர்பு கொள்ளுமாறு தமக்கு தெரிவிக்கப்பட்டுள்ளதாவும் அந்த தொலைபேசி இலக்க நபர் தனது மகன்மார் தொடர்பான முழுமையான விபரங்களைக் கூறி அவர்களை விடுவிப்பதற்கு லட்சக் கணக்கில் பணம் கேட்டதாகவும் கூறியுள்ளனர்.

இந்த நடைமுறைகளின் கீழ் யாழ்ப்பாண நகரப் பகுதியிலுள்ள 512 வது படைத்தளத்திற்கு தம்மை வருமாறு அழைத்ததாகவும் அதன் பின்னர் சிறைச்சாலைக்கு அழைத்து அங்கு மோட்டார் சைக்கிளில் வந்த இருவர் சுமார் 20லட்சம் ரூபாய் பணத்தினைதம்மிடம்பெற்றுச்சென்றதாகவும் அவர்கள் கூறினர்.

எனினும் படையினரோ இவ்வாறு எவரும் தம்மால் நியமிக்கப்படவில்லை எனத் தெரிவித்ததாகவும், தாங்கள் ஏமாற்றப்பட்டிருப்பதாகவும் அவர்கள் வாக்குமூலத்தில் தெரிவித்துள்ளனர்.

இதனையடுத்து தெல்லிப்பளைப் பிரதேச செயலாளர் மற்றும் கிராம சேவையாளர் ஆகியோர் வாக்குமூலம் அளிப்பதற்காக அழைக்கப்பட்டனர். அவர்களிடம்குறித்ததொலைபேசிப் பரிமாற்றங்கள் தொடர்பாக வாக்குமூலங்கள் பெறப்பட்டன.

இந்தச் சம்பவம் தொடர்பாக பாதிக்கப்பட்ட மேலும் பலர் இருப்பதாக அங்கு சுட்டிக்காட்டப்பட்டது. அதனையடுத்து இது தொடர்பாகவும் ஆணைக்குழு தீவிரமாக முழுமையான விசாரணைகளை மேற்கொள்ளும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ந-5)

## வன்னியில் தொடரும் காடழிப்பு இலட்சக்கணக்கில் வருமானம்

யுத்தம் ஓய்வு பெற்ற சூழ்நிலையிலும் வன்னியில் காடுகள் அழிக்கப்பட்டு இயற்கைச் சூழலுக்கு பெரும் பாதிப்பு ஏற்படுத்தும் நடவடிக்கைகள் தடையின்றித் தொடர்வதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

விசேட அதிரடிப்படைக்கு கிடைத்த இரகசிய தகவலொன்றையடுத்து அண்மையில்சுவட வன்னிக் காட்டில் சட்டவிரோதமாக வெட்டப்பட்டிருந்த பெறுமதியான 70 முதிரை மரக்குற்றிகளை அவர்கள் கைப்பற்றியிருந்தனர்.

அரசியல்வாதிகள் மற்றும் அரச ஆதரவு பெற்ற குழுக்கள் மட்டுமன்றி பிரதேசத்தின் பலம் வாய்ந்த நபர்களும் குறித்த சட்டவிரோத நடவடிக்கையில் பங்குகொண்டிருப்பதாகவும் சுட்டிக்காட்டுகின்றன.

பணம் சம்பாதிக்கும் நோக்கில் மேற்கொள்ளப்பட்டுவரும் இவ்வாறான காடழிப்பு நடவடிக்கைகள் காரணமாக காட்டு விலங்குகளின் தொல்லையை கிராமப்புற மக்கள் எதிர்கொள்வது மாத்திரமின்றி அரசாங்கத்துக்கு கிடைக்கவேண்டிய பெருந்தொகை வருமானமும் இழக்கப்பட்டு வருவதாகவும் சுட்டிக்காட்டப்படுகிறது. (ச-5)

## உதுல் பிரேமரத்தினவுக்கு மேலும் 14 நாள் விளக்கமறியல்

(கொழும்பு)

கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ள அனைத்துப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் இணைப்பாளர் உதுல் பிரேமரத்தினவை மேலும் 14 நாட்கள் விளக்கமறியலில் வைக்குமாறு பிரதான நீதவான் நீதிமன்றம் நேற்று உத்தரவு பிறப்பித்துள்ளது.

பிரதான நீதவான் நீதிமன்றத்தில் நேற்றுக் காலை 10 மணியளவில் உதுல் பிரேமரத்தினவின் வழக்கு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோதே இந்த விளக்கமறியல் உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

கடந்த மாதம் 14ஆம் திகதி மாணவர் ஒன்றியத்தினால் நடத்தப்பட்ட ஆர்ப்பாட்டத்தின் போது மாணவர்களும் ஊடகவியலாளர்களும் பொலிஸாரினால் தாக்கப்பட்டதுடன் மாணவர்களினால் உயர்கல்வி அமைச்சின் சொத்துக்களும் சேதமாக்கப்பட்டன.

அமைச்சின் சொத்துக்களுக்கு சேதம் விளைவித்த குற்றச்சாட்டிற்கு அமையவே அனைத்து பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் இணைப்பாளர் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ள நிலையில் வழக்கு நேற்று விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ந-5)


## கட்டைவேலி - நெல்லியடி ப.நோ.கூ.சங்கம்

### அறிவித்தல்

**கணக்காய்விற்கான மீதிகளை உறுதிப்படுத்தல் (கிராமிய வங்கி நிலையான வைப்பு, ஏனைய வைப்பு சங்க வருமதி செல்மதி)**

கட்டைவேலி – நெல்லியடி ப.நோ.கூ.சங்கத்தின் 31.05.2010 காலப் பகுதிக்கான கணக்காய்வு நடைபெற்றுக் கொண்டிருப்பதனால் சங்க கிராமிய வங்கியில் கணக்கு வைத்திருக்கும் சகல வாடிக்கையாளர்களும் எதிர்வரும் 15.11.2010, 16.11.2010, 18.11.2010, 19.11.2010 ஆகிய நாட்களில் சமுகமளித்து தங்கள் புத்தகப்படியான மீதிகளை கிராமிய வங்கிப் புத்தகங்களுடன் ஒப்பிட்டு உறுதிசெய்யும்படி கேட்டுக்கொள்ளப்படுகிறீர்கள்.

சங்கத்துடன் கொடுக்கல் வாங்கல்களை வைத்திருக்கும் சகல வாடிக்கையாளர்களும் மேற்படி கணக்காய்விற்காக 19.11.2010 ந் திகதிக்கு முன்னர் சங்க காரியாலயத்தில் கடமை நாட்களில் சமுகளித்து 31.05.2010 –ல் தங்கள் மீதிகளை உறுதிப்படுத்தும்படி கேட்டுக்கொள்ளப்படுகிறீர்கள்.

பொது முகாமையாளர்
கட்டைவேலி – நெல்லியடி ப.நோ.கூ.சங்கம்

(C-1621)


## விளையாட்டுப் போட்டியும் இசை நிகழ்வும்

(யாழ்ப்பாணம்)

513 ஆவது படைப்பிரிவுடன் சிமிக்கும் மஞ்சியும் இணைந்து நடத்தும் மாபெரும் விளையாட்டு உற்சவம் இன்றுகாலை8மணிக்கு மாணிப்பாய் செல்லமுத்து விளையாட்டுத் திடலில் நடைபெறும்.

இதில் துடுப்பாட்டம், உதைபந்தாட்டம் மற்றும் கரப்பந்தாட்டப் போட்டிகள் நடைபெறும்.

இதேவேளை மாலை 6.30 மணி முதல் 11.30 மணிவரை பரந்த இசைஅரங்கம் நிகழ்வும் இடம்பெறும். (ச)

## சிறுவர் கழகங்களின் சிறுவர் குரல் அலைகள்

(யாழ்ப்பாணம்)

யாழ்.சமூக செயற்பாட்டு மையத்தின் சிறுவர் கழகங்கள் இணைந்து கொள்ளும் சிறுவர் குரல் அலைதள் நிகழ்வுகள் இன்று காலை 10 மணிக்கு யாழ்.இந்து மகளிர் கல்லூரி மண்டபத்தில் நடைபெறும்.

இதில் பிரதம விருந்தினராக நாடாளுமன்ற உறுப்பினர் சில்வேஸ்திரி அலன்ரின் (உதயன்) கலந்து கொள்கிறார்.

சிறப்பு விருந்தினராக யாழ்.அரச அதிபர் இமெல்டா சுகுமார், கௌரவ விருந்தினர்களாக வடமாகாண சிறுவர் நன்நடத்தை சேவைகள் திணைக்கள ஆணையாளர் ரி.விஸ்வரூபன், தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபையின் யாழ். மாவட்ட இணைப்பாளர் ச.கோதை, யுனிசெப் நிறுவன யாழ்.மாவட்ட தலைமை அதிகாரி டமஸ்கஸ் மாச்சேரி ஆகியோர் கலந்து கொள்கின்றனர். (ச)


செல்லா சினிமா(நாதன்ஸ்)




காட்சி நேரம்:- 10.30,2.30,6.30,9.30


## பல்கலைக்கழக மாணவி தேசிய ரீதியில் முதலிடம்

தேசிய ரீதியிலான நாடக எழுத்துருவாக்கல் போட்டியில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக நாடகமும் அரங்கியலும் 3 ஆம் வருட மாணவி ஜி.தமிழரசி முதலிடத்தைப் பெற்றார்.

பெர்னாடீன் ஞாபகார்த்தமாக தேசிய ரீதியில் பொரளை நாமேல் பாமினி புஞ்சி தியேட்டரில் நடத்தப்பட்ட நாடக எழுத்துருவாக்கல் போட்டியில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவி தமிழரசியின் நாடகமும் பங்குபற்றியது.

நியதிகள் மாறுவதில்லை எனும் தலைப்பில் முதியவள் ஒருவரின் தனிமையும் அதன் வலியும் குழந்தைகள் மூலம் அத்தனிமை எவ்வாறு போக்கப்படுகின்றது என்பது பற்றி சித்திரிக்கப்பட்ட தமிழரசியின் நாடகம் முதலிடத்தைத் தட்டிச் சென்றது. (ச-5)

## பரிசளிப்பு விழா

காரைநகர் கோவளம் விளையாட்டுக்கழகம் தீபாவளி தினத்தை முன்னிட்டு நடத்திய மாபெரும் விளையாட்டுப் போட்டியின் பரிசளிப்பு விழா இன்று மாலை 4.00 மணிக்கு கோவளம் விளையாட்டு மைதானத்தில் தலைவர் ந.நவகிருஸ்ணராஜா தலைமையில் இடம் பெறும்.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமாகாண விளையாட்டுத் துறை உதவிக் கல்விப் பணிப்பாளர் க.சத்தியபாலன் கலந்து சிறப்பிக்கவுள்ளார்.

பரிசில் வழங்கும் நிகழ்வுகளைத் தொடர்ந்து சப்தஸ்வரா இசைக்குழுவின் இன்னிசை நிகழ்ச்சியும் இடம்பெறவுள்ளது. இவ் இசை நிகழ்ச்சியில் ஈழத்தின் முன்னணி நட்சத்திர பாடகரான சாந்தன் கலந்துகொள்ளவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (ச-7)

## மற்றுமொரு இலங்கைப் பணிப்பெண்ணின் உடலிலிருந்து 14 ஊசிகள் எடுக்கப்பட்டன

(கொழும்பு)

குவைத் நாட்டில் கடமையாற்றிய இலங்கைப் பணிப்பெண் ஒருவரது உடலில் இருந்து 14 ஊசிகள் சத்திரசிகிச்சையின் மூலம் வெளியேற்றப்பட்ட சம்பவமொன்று குருநாகல் பிரதேசத்தில் இடம்பெற்றுள்ளது.

இந்தப் பெண்ணுக்கான சத்திரசிகிச்சை குருநாகல் பிரதேசத்தில் இடம்பெற்றதாக மேற்படி வைத்தியசாலையின் சத்திரசிகிச்சைப் பிரிவுக்குப் பொறுப்பான மருத்துவர் ஏ.ஜே.சூரவீர தெரிவித்தார்.

குவைத்தில் பணியாற்றிய மேற்படி பணிப்பெண் 45 வயதுடையவர் என விசாரணைகளிலிருந்து தெரியவந்துள்ளது. (ந-5)

## மாகாண மட்ட கணித புதிர் போட்டி

## நெல்லியடி ம.ம. மாணவர்கள் அதிக இடங்களைப் பெற்றனர்

(யாழ்ப்பாணம்)

வவுனியாவில் கடந்த 9 ஆம் திகதி நடைபெற்ற மாகாண மட்டக் கணிதப் புதிர்ப் போட்டிகளில் வடமராட்சி வலயத்தின் சார்பில் 13 இடங்கள் பெறப்பட்டுள்ளதோடு அவற்றில் நெல்லியடி மத்திய மகா வித்தியாலயம் 3 முதலாமிடங்கள் ஒரு இரண்டாமிடம் மற்றும் 3 மூன்றாமிடங்களென மொத்தமாக 7 இடங்களை பெற்றுக் கொண்டுள்ளது.

இதே கல்லூரி வடமராட்சி வலய மட்ட கணிதப் புதிர்ப் போட்டிகளிலும் 3 முதலாமிடங்கள் 5 இரண்டாமிடம் மற்றும் 2 மூன்றாமிடங்களென மொத்தமாக10இடங்களைபெற்றிருந்தது என்பதும் அண்மைய ஆண்டுகளில் வலயமற்றும்மாகாணமட்டக்கணிதப் புதிர்ப் போட்டிகளில் மேற்படி கல்லூரி அதிக இடங்களைப் பெற்று வருவதும் குறிப்பிடத்தக்கது.

தரம் 6 (ஆ.மொ) லக்சிகா சிவகுமார் (1ம் இடம்), தரம் 7 (த.மொ) அபிஷேகா தபேந்திரன் (3ம் இடம்), தரம் 8 (ஆ.மொ) துஷிதா மனோகரன் (3ம் இடம்), தரம் 9 (த.மொ) கலாமணி மதனாகரன் (1ம் இடம்), தரம் 9 (ஆ.மொ) விதுர்ஷா லிங்கரட்ண[illegible] (1ம் இடம்), தரம் 11 (ஆ.மொ) [illegible]சிகா செல்வராசா (2ம் இடம்), தரம் 11 (த.மொ) லக்ஷிப்பிரியா பாலச்சந்திரன் (3ம் இடம்) ஆகிய மாணவர்களே வெற்றிபெற்று பாடசாலைக்கு பெருமை சேர்த்ததாக அதிபர் எஸ்.சேதுராஜா தெரிவித்தார். (ச)


# கண்ணீர் அஞ்சலி



இளையவி அண்ணாமலை
(ஓய்வுபெற்ற நில அளவையாளர்)

தெல்லிப்பளை கிழக்கு
கோயிற்புலம் பாரதி
சனசமூக நிலைய நிர்வாக
உறுப்பினராகிய
அருட்குமரனின்
தந்தையார்
இளையவி அண்ணாமலை

12.11.2010 வெள்ளிக்கிழமை (நேற்று) காலமாகிவிட்டார்.
அன்னாரது பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு
எமது ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவித்துக் கொள்கின்றோம்.

கோயிற்புலம்
தெல்லிப்பளை கிழக்கு

பாரதி ச.ச.நிலைய
நிர்வாகத்தினர்

(2856)

# இன்று ஒரு தகவல்

## முதுமையில் இன்பம்

வயதான தாத்தா ஒருவர் இருந்தார். அவர் எதைக் கொடுத்தாலும் சாப்பிடுவார். வேண்டாமென்று சொல்லமாட்டார். அவருடைய உடல்வாகு அப்படி.

“என்ன தாத்தா இது? தள்ளாத வயதில் இப்படிக் கண்டதையெல்லாம் சாப்பிடலாமா?” என்று கேட்டால்,

“இது எதையும் தள்ளாத வயதடா கண்ணா” என்று சினிமா வசனம் பேசுவார்.

“அதுசரி வயதான காலத்தில் எல்லோருமே இப்படி உற்சாகமாக இருக்க முடியுமா?”

‘முடியும்’ என்று சொல்கிறார்கள் முதியோர் நல நிபுணர்கள்.

சரி! அதற்கு என்ன செய்ய வேண்டும்? என்று கேட்டால், 50 வயதிலேயே அதற்கான முன்னேற்பாடுகளை செய்ய ஆரம்பித்து விட வேண்டும் என்கிறார்கள்.

முதுமை என்பது நம் எல்லோருக்கும் வந்தே தீரக்கூடிய ஒன்று. ‘எனக்கு அது வேண்டாம்’ என்று யாரும் சொல்ல முடியாது. சொன்னாலும் அது ஒதுங்கிப் போய் விடாது. அப்படியிருக்கும் போது அந்தக் கடைசிக் காலத்தில் சந்தோஷமாக இருப்பதற்கு வழி இருக்கிறது என்று சொன்னால் அதைத் தெரிந்து வைத்திருப்பதில் தப்பில்லையே!

முதுமையில் இன்பமாக வாழ்வதற்கு என்ன வழியென்று கேட்டால் அதற்கு 3 வழிகள் உண்டு என்று சொல்கிறார்கள்.

ஒன்று– உடல் நலம், இரண்டாவது – மனநலம், மூன்றாவது – குடும்பத்திலும், சமுதாயத்திலும் நல்ல இடம். இவ்வளவு தான்.

முதலில் உடல் நலத்தை எப்படிக் காப்பாற்றுவது என்று பார்ப்போம். வயதான காலத்தில் பசியும் சுவையும் குறையும். அதனால் சாப்பிடும் ஆகாரத்தின் அளவும் குறையும். இப்படி நிலைமை இருப்பதனால் சாப்பிடும் கொஞ்ச ஆகாரமும் சத்துள்ள ஆகாரமாக இருக்க வேண்டியது அவசியம்.

வயதான காலத்தில் கேழ்வரகு நல்லது. இதில் கலோரிகள் நிறைய உண்டு. சுண்ணாம்புச் சத்தும் நார்ச்சத்தும் அதிகம். விரைவில் சமிபாடடையும். கோதுமை, கீரை, பருப்புவகை, பழங்கள் இவையெல்லாம் சாப்பிடலாம்.

இந்த வயதில் இரத்தச்சோகை வருவதற்கான சாத்தியங்கள் அதிகம். அதனால் இரும்புச்சத்து அதிகமாக இருக்கும் உணவு சாப்பிட வேண்டும். கீரைவகைகளில் அது நிறைய இருக்கிறது. அதனால் தினமும் ஒரு கீரை தவறாமல் சேர்த்துக் கொள்ள வேண்டும்.

வெல்லம், பேரீச்சம்பழம், தேன், கல்லீரல் இவற்றில் எல்லாம் இரும்புச்சத்து அதிகமாக இருக்கிறது.

முதுமையில் எலும்பு பலவீனமாக இருக்கும். அதனால் சுண்ணாம்புச் சத்து அதிகமாக உள்ள ஆகாரத்தைச் சாப்பிட வேண்டும்.

பால், முருங்கையிலை, வெந்தயக் கீரை, கேழ்வரகு இவற்றிலும் அதிகமாக இருக்கிறது.

அடுத்ததாக உடற்பயிற்சி மிகவும் அவசியம். அதனால் உடம்பும் மனமும் நன்றாக இருக்கும். முடிந்தளவுக்கு தினமும் 45 நிமிடம் உடற்பயிற்சி செய்யலாம். இல்லையெனில் தினமும் மூன்றிலிருந்து 5 கிலோமீற்றர் தூரம் நடக்கலாம்.

இரண்டாவது மனநலம்.

வயதாகிவிட்டதே என்று நினைத்து சும்மா உட்கார்ந்திருக்கக் கூடாது. அப்படி முடங்கிக் கிடந்தால் மூப்பின் விளைவு ஆறு மடங்கு அதிகமாகி விடும் என்று ஆராய்ச்சியாளர்கள் சொல்கிறார்கள்.

நடுத்தர வயதிலிருந்தே நல்ல பொழுதுபோக்கு ஒன்றை தேர்ந்தெடுக்கவேண்டும். புத்தகம் படிப்பது, ரேடியோ கேட்பது, நண்பர்களிடம் உரையாடுவது இப்படி ஏதாவது பொழுது போக்கை கொண்டிருக்க வேண்டும்.

முதுமைக்கு விரோதி தனிமை என்பதை புரிந்து கொள்ள வேண்டும். வீட்டில் சின்னச்சின்ன வேலைகளைச் செய்யலாம்.

மனநலம் நன்றாக இருக்க ‘தியானம்’ ஒரு நல்ல மருந்து.

மூன்றாவது விடயம் குடும்பத்திலும் சமுதாயத்திலும் ஒரு நல்ல இடத்தை பெறவேண்டும்.

கூட்டுக்குடும்பம் தான் நல்லது. குடும்பத்திலுள்ள பெரியவர்களுக்கு மரியாதை கொடுக்கவேண்டும். அவர்களுடைய அனுபவமே பெரிய சொத்து.

நேரம் கிடைக்கும் போதெல்லாம் கலகலப்பாக பேசவேண்டும்.

நடுத்தர வயதுக் காலத்திலேயே வயதான காலத்துக்கென்று கொஞ்சம் பணத்தை சேமிக்க வேண்டும். மற்றவர்களை நம்பி இருந்துவிடக் கூடாது. பணமிருந்தால்தான் பாசம் தானாக நெருங்கி வரும்.

இவற்றையெல்லாம் சென்னை அரசு பொதுமருத்துவமனையிலுள்ள “மூப்பியல் மருத்துவப்பிரிவில்” பணிபுரியும் டாக்டர் தான் கூறினார்.

அதனால் வரவர வயது அதிகமாகிக்கொண்டு வருகிறது என்று நினைத்து கவலைப்படதீர்கள். அது எல்லோருக்கும் வரும் ஒன்று தான்.

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

# வடமாகாண கணித வினாடிவினா போட்டியில் வெற்றியீட்டியோர்

(அல்வாய்)

வடமாகாண கணித வினாடி வினாப் போட்டிக்கு வடமராட்சி வலயப் பாடசாலைகளிலிருந்து பங்குபற்றிய 36 மாணவர்களில் 13 பேர் வெற்றியீட்டியுள்ளனர்.

அவர்களின் பெயர் விபரம் வருமாறு,

**தரம் 6**

கு.யான்சன் –முதலாம் இடம் உடுப்பிட்டி அ.மி.த. கல்லூரி (தமிழ் மொழி மூலம்), சி.லக்ஷிகா– முதலாம் இடம் நெல்லியடி ம.ம.வி. (ஆங்கில மொழி மூலம்)

**தரம் 7**

மோ.சங்கீர்த்தனா– முதலாம் இடம் வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரி (ஆங்கில மொழி மூலம்), வி.சாளினி – இரண்டாம் இடம் கரணவாய் ம.வி. (தமிழ் மொழி மூலம்), த. அபிஷேகா– மூன்றாமிடம் நெல்லியடி மத்திய மகா வித்தியாலயம் (தமிழ் மொழி மூலம்)

**தரம் 8**

ம.துஷிதா – மூன்றாம் இடம் நெல்லியடி மத்திய மகா வித்தியாலயம் (ஆங்கில மொழி மூலம்)

**தரம் 9**

வி.விதுர்ஷா – முதலாமிடம் நெல்லியடி மத்திய மகா வித்தியாலயம் (ஆங்கில மொழி மூலம்),க. மதனாகரன் –முதலாமிடம் நெல்லியடி மத்திய மகா வித்தியாலயம் (தமிழ் மொழி மூலம்)

**தரம் 10**

உ.கீர்த்தனா–இரண்டாமிடம் வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரி (ஆங்கில மொழி மூலம்)

**தரம் 11**

ம.கஸ்தூரி – முதலாமிடம் வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரி (தமிழ் மொழி மூலம்), செ. சஞ்சிகா– இரண்டாமிடம் நெல்லியடி மத்திய மகா வித்தியாலயம் (ஆங்கில மொழி மூலம்), பா.லக்ஷிப்பிரியா – மூன்றாமிடம் நெல்லியடி மத்திய மகா வித்தியாலயம் (தமிழ்மொழி மூலம்), க.கிருஷ்யாயினி– மூன்றா மிடம் வட இந்து மகளிர் கல்லூரி (ஆங்கில மொழி மூலம்). (ஸ்ரீ–19)

# இராசி பலன்

*13.11.2010*

*(ஐப்பசி 27, சனிக்கிழமை)*

*சப்தமி முற்பகல் 11.25 மணிவரை*

*திருவோணம் பிற்பகல் 4.49 மணிவரை*

*இராகுகாலம்9.07–10.37 மணிவரை*

*சுபநேரம் 3.07–4.37 மணிவரை*

*கோஷ்டாஷ்டமி*

**மேடம்** யோகமான நாள், யோசிக்காமல் செய்த காரியங்களில் கூட வெற்றி பெறுவீர்கள், தொழில் ரீதியாக புதிய திட்டங்கள் தீட்டுவீர்கள், தேவைகள் எளிதில் பூர்த்தியாகும்.

**இடபம்** நல்லவர்களைச் சந்தித்து நலம் காணும் நாள், தடைப்பட்ட காரியங்கள் தானாகவே நடைபெறலாம், சொத்துக்கள் தொடர்பில் எழுந்த தடை விலகும், பிரயாண அனுகூலமுண்டு.

**மிதுனம்** வரவைக் காட்டிலும் செலவு அதிகரிக்கும், எந்தக் காரியத்தையும் நிதானமாகச் செய்வது நல்லது, வேலைப் பழு அதிகரிக்கும், நண்பர்களை அனுசரித்துச் செல்ல வேண்டியேற்படலாம்.

**கடகம்** மங்கல நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டு மகிழும் வாய்ப்புண்டு, நீண்ட நாளைய நண்பர் ஒருவரின் நெருங்கிய நட்பு கிட்டும், செல்வாக்கான நாள்.

**சிங்கம்** சுவாரஸ்யமான நாள், தொழில் சம்பந்தமாக சில முக்கிய முடிவெடுப்பீர்கள், மறைமுக எதிர்ப்புகள் மாறும், பெண்களால் பெருமை சேர வேண்டிய நாள்.

**கன்னி** மன நிறைவு கூடும் நாள், பொது வாழ்வில் புகழ் கூடும், தொழில் முன்னேற்றம் உருவாகும், வருமானம் திருப்தி தரும், பிள்ளைகளால் பெருமைகள் ஏற்படும்.

**துலாம்** காலை நேரத்திலேயே இனிய செய்தி வந்து சேரும், பழைய வாகனத்தை திருத்தும் எண்ணம் உருவாகும், பெரிய மனிதரின் சந்திப்பு கிடைக்கும், உஷ்ண சம்பந்தமான உடல் நலக்குறைவு ஏற்படலாம்.

**விருச்சிகம்** பயணங்களால் பலன் கிடைக்கும், பொருட் சேர்க்கையுண்டு, திருமண முயற்சி வெற்றி தரும், சேமிப்பை உயர்த்துவதற்கான வழியைக் கண்டு கொள்வீர்கள், சகோதரர் உதவியுண்டு.

**தனுசு** நாவன்மையால் நற்பெயர் எடுக்கும் நாள், மாலையில் மங்கல நிகழ்ச்சிகள் நடைபெறுவதற்கான அறிகுறி தோன்றும், தொழிலில் எதிர்பார்த்த சலுகைகள் கிடைக்கலாம், கொடுக்கல், வாங்கல்கள் சீராகும்.

**மகரம்** பாராட்டும், புகழும் அதிகரிக்கும், பயணத்தால் பலனுண்டு, பொதுநல ஈடுபாட்டில் ஆர்வம் காட்டுவீர்கள், ஆற்றல் மிக்கவர்களின் சந்திப்பால் ஆச்சரியமான வேலையொன்றைச் செய்து முடிப்பீர்கள்.

**கும்பம்** வெளியூர் தொடர்புகள் விரிவடையும் நாள், சாப்பிடக் கூட நேரமில்லாமல் சில வேலைகளைச் செய்யலாம், பயணத்தால் பிரபலமானவர்களின் சந்திப்பு ஏற்படலாம்.

**மீனம்** பண வருவாய் அதிகரிக்கும் நாள், விலை உயர்ந்த பொருட்கள் வீடு வந்து சேரலாம், நீண்ட நாளைய ஆசையொன்று நிறைவேறலாம், ஆரோக்கியமான நாள்.

வளவன்

# புதிய கற்கைநெறிக்கான பதிவும் நாட்பாடசாலை நிகழ்வும்

(யாழ்ப்பாணம்)

இலங்கை திறந்த பல்கலைக்கழக யாழ்ப்பாணப் பிராந்திய நிலையத்தின் பட்ட மேற்கல்வி டிப்ளோமா நாட்பாடசாலை இன்றும் நாளையும் காலை 8.30 மணிக்கு யாழ். பிராந்திய நிலையத்தில் நடைபெறவுள்ளது.

★ ★ ★

இலங்கை திறந்த பல்கலைக்கழக யாழ்ப்பாணப் பிராந்திய நிலையத்தின் தொழிலுரிமைத்துவமும் சிறுவணிக முகாமைத்துவமும் கற்கைநெறிக்கான புதிய பதிவுகள் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு யாழ். பிராந்திய நிலையத்தில் இடம்பெறும்.

★ ★ ★

இலங்கை திறந்த பல்கலைக்கழக யாழ்ப்பாணப் பிராந்திய நிலையத்தின் ஆங்கில சான்றிதழ் கற்கை நெறிக்கு புதிதாக பதிவு செய்த மாணவர்களுக்கான முதலாவது நாட்பாடசாலை இன்று சனிக்கிழமை காலை 9 மணிக்கு யாழ். பிராந்திய நிலையத்தில் நடை பெறுமென இணைப்பாளர் அறிவித்துள்ளார். (ஸ்ரீ–2–7)

# காலாவதியான மென்பானங்கள் மற்றும் பிஸ்கட்டுக்கள் கண்டுபிடிப்பு


(சாவகச்சேரி)

சாவகச்சேரி வியாபார நிலையங்களில் சாவகச்சேரி பொதுச் சுகாதார பரிசோதகர் குழுவினரால் கடந்த 10 ஆம் திகதி புதன் கிழமை திடீர் பரிசோதனை நடத்தப்பட்டது.

இதன்போது காலாவதியான மென்பானங்கள் மற்றும் பிஸ்கட்டுக்கள் என்பன நான்கு வியாபார நிலையங்களில் இருந்து கைப்பற்றப்பட்டது. இவ்வியாபாரிகளுக்கு எதிராக விரைவில் நீதிமன்றத்தில் வழக் குத் தாக்கல் செய்யப்படவுள்ளதாக சாவகச்சேரி நகர் சுகாதாரப் பரிசோதகர் தெரிவித்துள்ளார். (ஸ்ரீ–29)

# குடாநாட்டு சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| | திருநெல்வேலி | யாழ்ப்பாணம் | சாவகச்சேரி |
|---|---|---|---|
| மரக்கறி வகைகள் | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 60 | 80 | 70 |
| உருளைக்கிழங்கு | 80 | 80 | 80 |
| பச்சைமிளகாய் | 60 | 70 | 60 |
| தக்காளி | 100 | 110 | 100 |
| மரவள்ளிக்கிழங்கு | 40 | 40 | 40 |
| கோவா | 70 | 60 | 60 |
| கரட் | 50 | 80 | 70 |
| பூசணி | 50 | 40 | 40 |
| புடோல் | 40 | 60 | 50 |
| வாழைக்காய் | 40 | 40 | 40 |
| சின்ன வெங்காயம் | 100 | 100 | 100 |
| பெரிய வெங்காயம் | 100 | 100 | 100 |
| பாகற்காய் | 180 | 160 | 160 |
| வெண்டிக்காய் | 50 | 70 | 60 |
| கருணைக் கிழங்கு | 50 | 60 | 50 |
| பயற்றங்காய் | 250 | 180 | 150 |
| லீக்ஸ் | 100 | 120 | 120 |
| பீற்றூட் | 60 | 70 | 60 |
| கறிமிளகாய் | 100 | 140 | 100 |
| முருங்கைக்காய் | 200 | -- | 190 |
| போஞ்சி | 160 | 120 | 160 |
| கத்தரிதம்புள்ள | 30 | 60 | 50 |
| கீரை – 1 பிடி | 25 | 30 | 30 |
| தேசிக்காய் | 80 | 120 | 90 |
| தேங்காய் (ஒன்று) | 40 | 40 | 40 |





இராமாவில் நலன்புரி நிலையப் பாடசாலைக்கு நேற்று விஜயம் செய்த வடமாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜி.ஏ.சந்திரசிறி அங்குள்ள குறைபாடுகளை ஆராய்ந்து 100 மாணவர்களுக்கு பாதணிகளை வழங்கினார். இந்நிகழ்வில் ஆளுநர் மாணவருக்கு பாதணி வழங்குவதையும் ஆளுநருடன் பாடசாலை அதிபர், தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் கு.பிறேமகாந்தன் மற்றும் பிராந்திய ஆணையாளர் திருமதி பத்மினி சிவலிங்கம் மற்றும் உயர் அதிகாரிகள் நிற்பதையும் கலந்துகொண்ட பாடசாலை மாணவர்களையும் படங்களில் காணலாம். (படங்கள்:-என்.குமார்)

## குருபூஜை

(யாழ்ப்பாணம்)

கந்தர்மடம் குமாரசுவாமி வீதியில் அமைந்துள்ள வேதாந்தமடத்தில் நாளை ஞாயிற்றுக்கிழமை ஸ்ரீமத் மகாதேவ சுவாமிகளின் குருபூஜை நடைபெறவுள்ளது.

நிகழ்வில் திருமுறை பாராயணங்களைத் தொடர்ந்து விசேட அபிஷேக ஆராதனைகள் இடம்பெறவுள்ளது. (ஸ்ரீ)

## மாமனிதர் ரவிராஜின் அஞ்சலி நிகழ்வு

முன்னாள் பாராளுமன்ற உறுப் பினர் மாமனிதர் நடராஜா ரவிராஜின் 4 ஆவது வருட நினைவு நிகழ்வு தமிழ் தேசிய மக்கள் முன்னணி யின் ஏற்பாட்டில் வரணி மாசேரி கிராமிய அபிவிருத்தி சங்க மண்டபத்தில் நாளை ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு நடத்தப்படவுள்ளது.

இந்நிகழ்வில் தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியின் முக்கிய பிரமுகர்கள் உரையாற்றவுள்ளனர். அன்னாரின் பணிகளை நினைவு கூர்ந்து இந்நிகழ்வில் அனைவரையும் கலந்து சிறப்பிக்கும் படி தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியினர் கேட்டுக் கொள்கின்றனர். (ஸ்ரீ)

## வவுனியா அரசினர் வைத்தியசாலையில் செயற்கை அவயவங்களை பொருத்தும் நிலையமொன்று திறந்து வைப்பு

(கொழும்பு)

விபத்துக்கள் மற்றும் யுத்தம் காரணமாக உடல் அவயவங்களை இழந்த மற்றும் போலியோ நோயினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு செயற்கை அவயவங்களைப் பொருத்தும் நிலையம் ஒன்று வவுனியா மாவட்ட அரசினர் பொது வைத்தியசாலையில் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

சுகாதார அமைச்சின் அனுமதியுடன் யப்பான் மற்றும் கம்போடியா நிதியம் ஆகியவற்றின் உதவியுடன் இந்த நிலையம் நிறுவப்பட்டுள்ளது.

இது தொடர்பாக வவுனியா வைத்தியசாலையின் அத்தியட்சகர் வைத்தியகலாநிதி எஸ்.சத்தியமூர்த்தி கூறுகையில்,

செயற்கை கால்களைக் கொண்டிருப்பவர்கள் அவற்றை சரிசெய்வதற்கும் மற்றும் அவற்றில் ஏற்படும் பிழைகளை திருத்திக்கொள்வதற்குமாக இந்த நிலையம் உபயோகிக்கப்படும்.

தினசரி 8 தொடக்கம் 10 வரையான பயனாளிகள் இந்த நிலையத்தில் சிகிச்சை மற்றும் செயற்கை உறுப்புக்களை புதிதாக செய்துகொள்ளலாம் மற்றும் சரி செய்தும் கொள்ளலாம் என்று குறிப்பிட்டார். (ஸ்ரீ)

## விஞ்ஞான வினாடி வினாப் போட்டி

(அல்வாய்)

உலக விஞ்ஞான தினத்தை முன்னிட்டு தொழிநுட்பவியல் மற்றும் ஆராய்ச்சி அமைச்சும் தேசிய விஞ்ஞான மன்றமும் இணைந்து வடமராட்சி வலய பாடசாலை மாணவர்களுக்கிடையே நடத்தவுள்ள விஞ்ஞான வினாடிவினா போட்டி எதிர்வரும் 17 ஆம் திகதி புதன்கிழமை முற்பகல் 10 மணிக்கு யா/நெல்லியடி மத்திய மகா வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது என பருத்தித்துறை விதாத வள நிலைய விஞ்ஞான தொழில்நுட்பவியல் உத்தியோகத்தர் அறிவித்துள்ளார். (ஸ்ரீ-19)

## வெளிநாட்டில் வேலை பெற்றுத்தருவதாக மோசடி செய்தவர் பொலிஸாரால் கைது

லெபனான் நாட்டில் வேலை வாய்ப்புப் பெற்றுத்தருவார் என்று கூறி ஐவரிடம் இருந்து ஒட்டுமொத்தமாக 12இலட்சம் ரூபாய் வரை மோசடி செய்த வழக்கில் கொழும்பு-வெள்ளவத்தையை வசிப்பிடமாகக் கொண்டிருந்த தமிழர் ஒருவரை எதிர்வரும் 18 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்க வேண்டும் என்று கல்கிசை நீதவான் நீதிமன்றம் நேற்று முன்தினம் உத்தரவிட்டது.

லெபனானில் அமெரிக்க இராணுவ முகாம் ஒன்றில் சமையல்காரராக வேலை பார்த்த சிறிதரன் தம்பித்துரை என்பவரே கல்கிசை மேலதிக நீதிவான் ருசிர வெல்வத்தயின் உத்தரவின் பேரில் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

இவர் லெபனானில் சாரதி வேலை பெற்றுத்தருவார் என்று வாக்குறுதி வழங்கி பணத்தை பெற்றுக்கொண்டு டுபாயில் உள்ள ஒரு பெண்ணை சந்திக்க அனுப்பியிருந்தார் என்றும் லெபனானுக்கு அனுப்பி வைப்பார் என்று வாக்குறுதி வழங்கி இருந்த பெண் அங்கு அவர்களை அறைகளில் அடைத்து வைத்தார் என்றும் பாதிக்கப்பட்டவர்கள் வெள்ளவத்தை பொலிஸ் நிலையத் தில் முறைப்பாடுகள் செய்துள்ளனர். இம் முறைப்பாடுகளை அடுத்தே இக் கைது இடம்பெற்றுள்ளது. (ஸ்ரீ-2)


## சென்னையில் போலி நோட்டுக்களுடன் இரு இலங்கை முஸ்லிம்கள் கைது

பாக். ஆதரவுத் தீவிரவாதிகள் அல்லது உளவாளிகள் என்ற கோணத்தில் இலங்கை முஸ்லிம்கள் இருவர் மீது தமிழ்நாடு பொலிஸார் புலனாய்வு விசாரணைகளை முடுக்கி விட்டுள்ளனர்.

கட்டுநாயக்க விமான நிலையத்திலிருந்து சென்னை விமான நிலையத்தை நேற்று முன்தினம் வந்தடைந்த உடன்பிறப்புக்க ளான இரு முஸ்லிம்கள் பாகிஸ்தானில் தயாரிக்கப்பட்ட கள்ளநோட்டுக்களுடன் விமான நிலையத்திற்கருகில் வைத்து விமானநிலையப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர்.

இவர்களிடம் இருந்த போலித்தாள்களின் ஒட்டுமொத்த பெறுமதி 21ஆயிரத்து 500 இந்திய ரூபாய் ஆகும். இவர்கள் விமான நிலையத்திற்கு அருகில் இருந்த கடைகளில் இப் போலிப் பணக்கட்டுக்களை அமெரிக்க டொலராக மாற்றமுயற்சித்தனர். இவர்கள் மீது சந்தேகம் அடைந்திருந்த வர்த்தகர்கள் விமானநிலையப் பொலிஸாருக்கு தகவல் வழங்கினர். விமான நிலையப் பொலிஸார் வந்து விசாரணை நடத்தியபோது இருவரும் முன்னுக்குப்பின் முரணான பதில்கள் வழங்கினர்.சோதனை செய்த பொலிஸார் இவர்கள் வைத்திருந்த நோட்டுக்கள் போலியானவை என்பதையும் பாகிஸ்தானில் தயாரிக்கப்பட்டவை என்பதையும் கண்டுபிடித்தனர்.

இதேவேளை இவர்கள் இருவரும் யாழ்ப்பாண முஸ்லிம்கள் என்றும் கொழும்பில் கடை நடத்துகின்றனர் என்றும் ஆரம்ப விசாரணைகளில் தெரியவந்துள்ளது. அண்ணனின் பெயர் இஸ்மாயில் (வயது 31), தம்பியின் பெயர் நசீர் (வயது 29) என்று தெரிய வருகிறது. (ஸ்ரீ-2)




## எமது அடிப்படை வசதிகள் நிறைவேற்றப்படுமா ?


மயிலிட்டி வாழ் மக்களாகிய நாம் 1990 ஆம் ஆண்டு யுத்தம் காரணமாக இடம்பெயர்ந்து கோண்டாவில் காரைக்கால் நலன்புரி நிலையத்தில் கடந்த இருபது வருடங்களாக வசித்து வருகின்றோம்.

இங்கு வீட்டு வசதி, மின்சார வசதி, மலசலகூட வசதிகள் போன்ற அடிப்படை வசதிகள் ஏதுமின்றி சொல்லொணாத் துயரங்களை அனுபவித்து வருகின்றோம். எமது இத்தேவைகளை நிறைவேற்றுமாறு பல வருடங்களாக கோரிக்கை விடுத்து வந்துள்ளோம்.இருப்பினும் எமது தேவைகள் நிறைவேற்றப்படவில்லை.

எமது நலன்புரி நிலையத்தில் 15 வீடுகளில் 18 குடும்பங்களைச் சேர்ந்த 70பேர் வசித்து வருகிறோம். ஆனாலும் எமது பாவனைக்கென இரண்டு மலசலகூடங்கள் இருந்தன. அவையும் செயலிழந்துள்ளன.

எனவே சம்பந்தப்பட்ட அதிகாரிகள் எமக்கு உடனடியாக மலசலகூடங்களினை அமைத்துத் தர வேண்டும் அல்லது எம்மை எமது சொந்த நிலத்தில் குடியமர்த்துவதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டுமென வேண்டுகோள் விடுக்கின்றோம்.

நலன்புரி நிலைய மக்கள்
(காரைக்கால்)



யாழ்.ஏழாலை வடக்கு அ.மி.த.க. பாடசாலையில் "உலக கைகழுவுதல்" தினம் அண்மையில் கொண்டாடப்பட்டது. யுனிசெப் நிறுவனத்தின் அனுசரணையுடன் சேவாலங்கா நிறுவனத்தின் ஒழுங்குபடுத்தலின் கீழ் நடைபெற்ற இந்நிகழ்வில் வழங்கப்பட்ட அறிவுறுத்தல்களுக்கு அமைய மாணவர்கள் செயற்படுவதைப் படத்தில் காணலாம்.

# யுத்தத்தினால் இழந்த காணிகளை மீள பெற்றுக்கொடுக்க அரசு புதிய திட்டம்

தமது பாரம்பரிய மற்றும் சட்டபூர்வமாக பெற்றுக்கொண்ட காணிகளை கடந்த 30 வருடகால யுத்தத்தினால் இழந்த மக்கள் காணி அபிவிருத்தி அமைச்சினால் எதிர் வரும் ஜனவரி மாதம் முதல் அமுல் படுத்தப் படவுள்ள *'பிம்சவிய* திட்டத்தின் மூலம் அக் காணிகளை மீளப் பெற்றுக்கொள்ளலாம் என அமைச்சர் ஜனக பண்டார தென்னகோன் தெரிவித்துள்ளார்.

யுத்தத்தினால் இடம்பெயர்ந்த மக்கள் தமது சொந்தக் காணிகளில் மீளக்குடியேறுவதில் எதிர்நோக்கும் பிரச்சினைகளை நாம் அறிவோம். மீள்குடியேற்றத் திட்டங்களை இது வெகுவாக பாதிக்கிறது. காணிகளின் சட்ட ரீதியான உரிமையாளர்களை இனங்கண்டு அவர்களின் காணி உரிமை ஆவணம் தவறவிடப் பட்டிருந்தால் அவர்களுக்கு காணி உரிமை சான்றிதழை வழங்கியபின் அவர்களை அக் காணிகளில் குடியேற்றுவதே எமது நோக்கம் என அமைச்சர் மேலும் கூறினார்.

அத்துடன் பிரதேச செயலகம், மாவட்ட செயலகம், காணி ஆணையாளர் திணைக்களம் மற்றும் பதிவாளர் நாயகம் அலுவலகம் ஆகியவற்றில் கிடைக்கக்கூடிய ஆவணங்களுக்கூடாக காணிகளின் உண்மையான உரிமையாளரை இனங்காண்பதற்கான சகல முயற்சிகளும் மேற்கொள்ளப்படும் என அவர் தெரிவித்தார். (ஸ்ரீ-2)

# அமைச்சரவைத் தீர்மானங்கள்

(கொழும்பு)

**தாதிகள் சேவை திருத்தச் சட்டம்**

தாதிகள் சேவையில் துரித பதவி உயர்வு வழங்குவதற்கான 2006ஆம் ஆண்டின் 6ஆம் இலக்க அரச நிருவாக சுற்றறிக் கையை 2010 நவம்பர் முதலாம் திகதி முதல் அமுலுக்குக்கொண்டுவர அமைச்சரவை தீர்மானித் துள்ளது.

இதற்கமைய தரம் மூன்றில் 6 வருடம் கடமையாற்றிய ஒருவர் தரம் இரண்டுக்கு உயர்த் தப்படுகின்றார். அதேபோன்று தரம் இரண்டில் 6 வருடம் கடமையாற்றிய ஒருவர் தரம் ஒன்றுக்கு உயர்த்தப்படுகின்றார்.

முன்னர் 10 வருடங்கள் கடமையாற்றிய பின்னரே இந்தப் பதவி உயர்வுகள் வழங்கப் பட்டமை குறிப்பிடத்தக்கது.

**விலங்கினங்கள் தொடர்பான திருத்தச் சட்டம்**

விலங்கினங்கள் தொடர்பான திருத்தச் சட்ட சரத்துக்களை பாராளுமன்றத்தில் சமர்ப்பிப் பதற்கு அமைச்சரவை முடிபு செய்துள்ளது.

1958ஆம் ஆண்டின் 29 ஆவது விலங்கினங்கள் சட்டத்தின் கீழ் 2009ஆம் ஆண்டு வர்த்தமானி மூலம் அமைச்சரால் அறிவிக் கப்பட்ட மேற்படி சட்டத்தின் திருத்தங்களே இவ்வாறு பாராளுமன்ற அங்கீகாரத்துக்கு விடப் படவுள்ளன.

இறைச்சிக்காக விலங்கினகளை அறுப்பது, விலங்கினப் போக்குவரத்து மற்றும் அவற்றை வளர்த்தல், வதைகொடுத்தல் போன்றவை தொடர்பாக சட்ட ஒழுங்கு முறைகளை வகுத்தல் உட்பட விலங்கினங்கள் பாதுகாப்பு மத்திய நிலையம் அமைத்தல் போன்றவை இந்த திருத்தச் சட்டத்தில் உள் ளடக்கப்பட்டுள்ளன.

**மொரட்டுவை தொழில் நுட்ப பிரிவு மாற்றம்**

உயர் கல்வி அமைச்சர் எஸ்.பி.திஸாநாயக்கவின் ஆலோசனைக்கு ஏற்ப மொரட்டுவை பல்கலைக்கழகத்தில் இயங்கி வரும் தேசிய தொழில் நுட்ப டிப்ளோமாப் பிரிவை ஹோமாகமைக்கு மாற்றியமைக்க அமைச் சரவை இணக்கம் கண்டுள்ளது.

இந்த மாற்றத்தின் மூலம் அங்கு பயிற்சி பெறும் மாணவர்களின் எண்ணிக்கையை ஆயிரமாக அதிகரிக்க எதிர்பார்க்கப்படுகிறது.

இதற்கு சீன அரசாங்கம் 60 மில்லியன் அமெரிக்க டொலரை நிதியுதவியாக வழங்குகிறது.

**பதுளையில் நீர்மின் உற்பத்தி நிலையம்**

பதுளை கந்தகெட்டிய பகுதியில் அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வாவின் அமைச்சர வைப் பத்திரத்துக்கு ஏற்ப சிறிய நீர் மின் உற்பத்தி நிலையம் ஒன்றை அமைத்துஅதன் மூலம் உற்பத்தி செய்யப்படும் மின்சாரத்தை இலங்கை மின்சார சபைக்கு விற்பனை செய்ய அமைச் சரவை முடிபு செய்துள்ளது.

**403.7 மில்லியன் செலவில் 3 குடிநீர் விநியோகத் திட்டங்கள்**

அமைச்சர் தினேஷ் குணவர்த்னவின் பிரேரணைக்கு அமைய 403.7 மில்லியன் ரூபா செலவில் ஹோமாகம காலி மற்றும் அநுராதபுரம் ஆகிய பிரதேசங்களில் மூன்று குடிநீர் விநியோகத் திட்டங்கள் மேற்கொள்ளப்படவுள்ளன.

**மீன் பிடி மற்றும் நீர்வளங்கள் சட்டத்தில் திருத்தம்**

அமைச்சர் டாக்டர் ராஜித சேனாரத்னவின் ஆலோசனைக்கு அமைவாக மீன்பிடி மற்றும் நீர்வளங்கள் சட்டத்தில் திருத்தம் கொண்டுவரும் வகையில் சட்டமூலம் இயற்றுவதற்கு ஆலோசனை வழங்க அமைச் சரவை தீர்மானித்துள்ளது.

சர்வதேச கடல்சார் கோட்பாடுகளை கண்டிப் பிடிக்கவும் அதனூடாக சர்வதேச கடற்பிரதேசங்களிலும் இலங்கை மீனவர்களுக்கு மீன் பிடிப்பதற்கான நிரந்தரத் தன்மையை ஏற்படுத்த இதன் மூலம் எதிர்பார்க்கப்படுகிறது.

**களனி பல்கலைக்கழக நூல் நிலையம்**

வரவு -செலவுத் திட்டத்தின் மூலம் ஒதுக் கப்படும் 180 மில்லியன் ரூபா செலவில் களனி பல்கலைக்கழகத்துக்கு நூல் நிலையம் ஒன்று அமைக்கப்படவுள்ளது.

இதேவேளை உயர் கல்வி அமைச்சர் எஸ். பி.திஸாநாயக்கவின் ஆலோசனைப் படி கிழக்கு பல்கலைக்கழக கலா பீடத்துக்கும் 44.6.மில்லியன் செலவில் கேட்போர் கூடம் ஒன்றும் விரிவுரை மண்டபம் ஒன்றும் அமைக்கப்படவுள்ளன.

**கொழும்பு பல் சிகிச்சை நிலையத்துக்கு 10 மாடிக் கட்டடம்**

சுகாதார அமைச்சர் மைத்திரிபால சிறிசேனவின் அமைச்சரவைப் பத்திரத்துக்கு எற்ப வரவு- செலவுத்திட்ட நிதி ஒதுக்கீட்டின் ஊடாக 694 மில்லியன் ரூபா செலவில் கொழும்பு பல் சிகிச்சை மத்திய நிலையத்துக்கு 10 மாடிக் கட்டடம் ஒன்றை அமைக்க அமைச்சரவை முடிபு செய்துள்ளது. (ஸ்ரீ)

# நல்லிணக்க ஆணைக்குழு முன்னிலையில் சாட்சியமளிக்க முஸ்லிம் காங்கிரஸ் தீர்மானம்

(கொழும்பு)

கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல் லிணக்க ஆணைக்குழு முன்னிலையில் சாட்சியமளிப்பதற்கு ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தீர்மானித்துள்ளதாக அந்தக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினரும் தவிசாளருமான பஷீர் சேகுதாவூத் தெரிவித்துள்ளார்.

முஸ்லிம் காங்கிரஸின் அதி உயர் பீடக் கூட்டம் நேற்று முன்தினம் இரவு கட்சித் தலைவர் ரவூப் ஹக்கீம் தலைமையில் கூடிய போதே தேசிய நல்லிணக்க ஆணைக் குழு முன்னிலையில் சாட்சியமளிப்பதற்கான தீர்மானம் எட்டப்பட்டதாக அவர் தெரிவித்துள்ளார்.

கடந்த 2002ஆம் ஆண்டிலிருந்து 2009ஆம் ஆண்டு மே மாதம் வரையிலான காலப் பகுதியில் நாட்டில் இடம்பெற்ற சம்பவங்களிலிருந்து கற்றுக்கொள்ள வேண்டிய பாடங்கள் குறித்து ஆராய்வதற்காக 8 பேரைக் கொண்ட நல்லிணக்க ஆணைக்குழுவொன்றினை ஜனாதிபதி நியமித்திருந்தார்.

ஆனால் கடந்த 2002 -2009 வரையிலான காலப்பகுதியினை விடவும் அதற்கு முற்பட்ட 1990 களிலேயே முஸ்லிம்களுக்கு மிகவும் மோசமான அழிவுகள் ஏற்பட்டதாகவும் அந்தக் காலத்தில் முஸ்லிம் சமூகத்துக்கு நிகழ்ந்தவை குறித்துப் பேச முடியாத ஆணைக் குழு முன்னிலையில் தாம் சாட்சியமளிக்கப் போவதில்லை எனவும் முஸ்லிம் காங்கிரஸ் முன்னர் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஸ்ரீ-2)

# திருச்சியில் இலங்கைத் தமிழரால் நிர்மாணிக்கப்பட்ட முருகன் ஆலயம்

இந்தியாவின் தமிழ்நாடு மாநிலத்தின் திருச்சி மாவட்டத்தில் இலங்கைத் தமிழரால் நிர்மாணிக்கப்பட்டிருக்கும் முருகன் ஆலயத்தில் சூரன் போர் உற்சவம் வெகு விமரிசையாக நேற்று இடம்பெற்றது.

கே.கே.நகரில் அமைந்துள்ள இவ்வாலயத்துக்கு தமிழ் நாட்டில் உள்ள இலங்கைத் தமிழர்கள் வழிபாடு இயற்ற வகை தொகை இன்றி வருகை தந்திருந்ததுடன் சாந்தி, சமாதானம் வேண்டி பக்தர்கள் முருகப்பெருமானை வழிபட்டனர். (ஸ்ரீ-2)

# வடக்கில் நீதிமன்றங்கள் மற்றும் நீதித்துறை கட்டடங்கள் அமைக்க ரூ.890 மில்.ஒதுக்கீடு

(கொழும்பு)

வடக்கில் 890 மில்லியன் ரூபா செலவில் புதிதாக நீதிமன்றங்கள் மற்றும் நீதித்துறை கட்டடங்களை அமைக்க அமைச்சரவை முடிவு செய்துள்ளது. நீதி அமைச்சர் அதாவுட செனவிரத்ன சமர்ப்பித்த அமைச்சரவைப் பத்திரத்துக்கு ஏற்ப இந்த முடிவு எடுக்கப் பட்டுள்ளது.

ஆசிய அபிவிருத்தி வங்கியால் வழங்கப்படும் 150 மில்லியன் அமெரிக்க டொலர் நிதி யிலிருந்து ஒருதொகுதி இத்திட்டத்துக் கென ஒதுக்கப்படு கிறது.

அதன்படி பருத்தித்துறை வடக்கு, முல்லைத்தீவு, மன்னார், கிளிநொச்சி, வேலணை மற்றும் மாங்குளம் உட்பட பல இடங்களில் ஒன்பது நீதிமன்றங்கள் அமைக்கப்படவுள்ளன.

மேலும் நீதவான்களுக்கான உத்தியோக பூர்வ இல்லங்களும் அமைக்கப்படவுள்ளன.

இத்திட்டத்தின் முதற்கட்டமாக 175 மில்லியன் ரூபா செலவில் சாவகச்சேரி மல்லாகம் மற்றும் ஊர்காவற்றுறை பகுதிகளில் நீதிமன்றக் கட்டடத் தொகுதிகள் அமைக்கப்படவுள்ளன. (ஸ்ரீ)


**யாழ்ப்பாண ஐக்கிய வியாபாரச் சங்கம்**
**(வரைவுள்ளது)**
**கேள்வி கோரல்**
**இடிபாடுகளினையும், பழைய கட்டடத் தொகுதிகளினையும் உடைத்து அப்புறப்படுத்தல்**

யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரி வீதியில் அமைந்துள்ள யாழ்ப்பாண ஐக்கிய வியாபாரச் சங்கம் (வரைவுள்ளது) கட்டடத்தின் இடிபாடுகளையும், பழைய கட்டடத் தொகுதிகளினையும் உடைத்து அப்புறப்படுத்துவதற்கு ஏற்ற விதத்தில் இயந்திர தளபாட வசதிகளைக் கொண்ட ஒப்பந்த காரர்களிடமிருந்து கேள்வி கோரப்படுகின்றது.

இதில் பங்குபற்ற விரும்புவோர் 420, ஆஸ்பத்திரி வீதியில் ஆஸ்பத்திரிக்கு முன்பாக - மகாத்மாகாந்தி வீதியில் அமைந்துள்ள எமது காரியாலயத்தில் பகல் 9.00 மணி முதல் 12.00 மணி வரையிலான நேரத்தில் கூரல் ஆவணங்களினை ரூபா 200/- இனை மீளப்பெறமுடியாத பணமாகச் செலுத்தி 15.11.2010ஆம் திகதி முதல் பெற்றுக் கொள்ளவும்.

கேள்வி கோரல் சமர்ப்பிக்கப்படும்

இறுதித் திகதி: 19.11.2010 ஆம் திகதி

காலை 11.00 மணிக்கு முன்னர்

மேலதிக விபரங்களுக்கு எமது மதியுரைஞருடன் கீழ்வரும் விலாசத்தில் தொடர்பு கொள்ளவும்.

**உருத்திரா பொறியியல் கட்டடக்கலை மதியுரை அகம்,**
**08, நல்லூர் குறுக்கு வீதி, யாழ்ப்பாணம்.**


**முகாமைத்துவப்பணிப்பாளர்,**
**யாழ்ப்பாண ஐக்கிய வியாபாரச் சங்கம். (வரைவுள்ளது)**

(2847)






புனித சென் சார்ள்ஸ் மகாவித்தியாலயத்தில் வறுமை கோட்டின் கீழ் கல்வி பயிலும் 40 சாரணிய மாணவர்களுக்கு சீருடைத் துணியை யாழ். மாநகர சபை உறுப்பினர் எஸ்.விஜயகாந்த் நேற்று வழங்கினார். இந்நிகழ்வில் எஸ்.விஜயகாந்த் பாடசாலை மாணருக்கு சீருடைத்துணி வழங்குவதையும் அதிபர் எம்.ஞானப்பிரகாசம் உப அதிபர் சி.கிறிஸ்தோபர், பாடசாலை சாரண பொறுப்பாசிரியர் எஸ்.இன்பகுமார் மற்றும் சாரண மாணவர்களையும் படங்களில் காணலாம்.


சண்டிலிப்பாய் பிரதேச செயலகத்தில் அண்மையில் நடைபெற்ற சிறுவர்தின விழாவில் மாதகல் சென்தோமஸ் முன்பள்ளி மாணவர்களின் பாண்ட் வாத்திய இசையுடன் பிரதம விருந்தினர்கள் அழைத்து வரப்படுவதையும் பிரதேச செயலக நிர்வாக உத்தியோகத்தர் மா.முரளி தலைமையுரையாற்றுவதையும் மற்றும் சென்.தோமஸ் முன்பள்ளி மாணவர்களின் கலைநிகழ்வையும் படங்களில் காணலாம். (படங்கள்:-தனங்கிளப்பு செய்தியாளர்)

## 43ஆவது ஆண்டுவிழாவும் பாலர் தின விழாவும்

(யாழ்ப்பாணம்)

வல்வெட்டித்துறை, நெடியகாடு கணபதி படிப்பகத்தின் 43 வது ஆண்டு விழாவும் பாலர் தின விழாவும் நாளை ஞாயிற்றுக் கிழமை மாலை 5மணிக்கு நெடியகாடு பிள்ளையார் கோயில் வீதியில் சமாதான நீதவான் பூ.அகமணிதேவர் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ் பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலக சனசமூக நிலைய அபிவிருத்தி உத்தியோகத்தர் திருமதி பரமேஸ்வரி யோக ராசா கலந்து சிறப்பிக்கவுள்ளார்.

சிறப்பு விருந்தினர்களாக வடமராட்சி கல்வி வலய முன்பள்ளி உதவிக்கல்விப் பணிப்பாளர் எஸ். தில்லைநாதன் பருத்தித் துறை பிரதேச செயலக அரச முகாமைத்துவ உதவியாளர் திருமதி திருத்தேவி ஏகாந்தன் ஆகியோரும் கலந்து சிறப்பிக்கவுள் ளனர். (ஸ்ரீ)

## பொதுக்கூட்டம்

கைதடி மேற்கு சரஸ்வதி சிக்கனக் கடன் வழங்கு கூட்டுறவுச் சங்கத்தின் மாதாந்த பொதுக்கூட்டம் நாளை ஞாயிற்றுக்கிழமை மாலை 4.30 மணிக்கு சி.கோவிந்தராசா தலைமையில் நடைபெறும்.

இதில் சகல உறுப்பினர்களையும் தவறாது சமுகமளிக்குமாறு இக் கூட்டுறவுச் சங்கத் தின் பொருளாளர் கந்த.ஞானமுத்து அறி வித்துள்ளார். (ஸ்ரீ-2)

## பாடசாலை மாணவர்களுக்கு விழிப்புணர்வு செயற்பாடுகள்

(கொழும்புத்துறை)

கோப்பாய் பிரதேசத்திற்குட்பட்ட பாட சாலை மாணவர்களுக்கு சுகவாழ்வு நிறுவ னத்தால் விழிப்புணர்வு செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

கடந்த 10 ஆம் திகதி அச்செழு சைவப் பிரகாச மாணவர்களுக்கு யாழ்.மாவட்ட பால்நிலை வன்முறைகளுக்கு எதிரான செயற் பாட்டு குழு இணைப்பாளர் திருமதி எவ்.ஆர்.ரஜனி ''கட்டிளமைப் பருவத்தில் பாடசாலை மாணவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் குறித்தும் அதற்கான தீர்வு கள்'' குறித்தும் மாணவர்களுக்கு தெளிவு படுத்தினார். (ஸ்ரீ-51)

## இறுவட்டு வெளியீடு

(யாழ்ப்பாணம்)

சொண்ட் நிறுவனத்தின் மாதாந்த ஆய்வரங்கில் பேராசிரியர் மா.சின்னத்தம்பி நிகழ்த்திய யாழ்.குடாநாட்டின் வேலையில் லாப் பிரச்சினையைத் தீர்க்கும் வழிமுறை கள் தொடர்பான உரை ஒலி வடி விலும் இறுவட்டு வடிவிலும் வெளியிடப்பட்டுள்ளது.

குடாநாடு தழுவிய பொதுத் தேவைகள் பிரச்சினைகளை மையமாகக் கொண்டு ஆய்வரங்கின் கருப்பொருள்கள் தெரிவு செய்யப்படும் இக் கருத்துக்கள் தொகுக்கப் பட்டுள்ளது.

இவ்விடயங்கள் தொடர்பான செயற் பாடுகளில் ஈடுபடும் நிறுவனங்கள், தனி நபர்கள் இவற்றினை சொண்ட், இல.-60, அரசடி வீதி என்ற முகவரியில் பெற்றுக் கொள்ளலாம் என அறிவிக்கப்பட்டுள் ளது. (ஸ்ரீ)

## ஸ்ரீ அம்மா பகவான் நன்றி நவிலல் நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

ஸ்ரீஅம்மா பகவானின் நன்றி நவிலல் நிகழ்வு நாளை ஞாயிற்றுக் கிழமை பிற் பகல் 2 மணிக்கு சுழிபுரம் ஸ்ரீ அம்மா பகவான் சற்சங்க ஆன்மீகப் பிரார்த்தனை மையத்தில் நடைபெறவுள்ளது. (ஸ்ரீ)

## சமய அறிவுப் போட்டி

(யாழ்ப்பாணம்)

இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தினால் நாவலர் குருபூசை தினத்தினை முன்னிட்டு அறநெறி பாட சாலை மாணவர்களுக்கிடையில் நடத்தப் படும் சமய அறிவுப்போட்டி இன்றும் நாளை யும் காலை 8.30 மணிக்கு நல்லூர் மங்கை யற்கரசி மகாவித்தியாலயத்தில் நடைபெறு மென இந்து கலாசார உத்தியோகத்தர் எஸ்.உதயபாலன் தெரிவித்துள்ளார். (ஸ்ரீ-2-6)

## ஒளிவிழா

(அல்வாய்)

பொலிகண்டி இந்து தமிழ்க்கலவன பாடசாலையின் ஒளிவிழா எதிர்வரும் 16ஆம் திகதி செவ்வாய்க்கிழமை முற்பகல் 9 மணி க்கு பாடசாலை அதிபர் வே.துரைசிங்கம் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வின் பிரதம விருந்தினராக பருத்தித்துறை சற்கோட்டை அருட்திரு அ. அகஸ்ரின் அடிகளார் கலந்து சிறப்பிக்கவுள் ளார்.

சிறப்பு விருந்தினராக பருத்தித்துறை கோட்டக் கல்வி அதிகாரி பா.இரகுநாதன் கலந்து கொள்ளவுள்ளார். (ஸ்ரீ-19)

## கருத்தமர்வு

(யாழ்ப்பாணம்)

இலங்கை சென்.ஜோன்ஸ் அம்புலன்ஸ் அமைப்பினால் ஆரம்பப் பாடசாலை ஆசிரியர்களுக்கான ''கிற்றி'' பயிற்றுவிப் பாளர் கருத்தமர்வு இன்றும் நாளையும் காலை 8.45 மணி தொடக்கம் மாலை 2.30 மணி வரை யாழ்.வேம்படி மகளிர் கல்லூரிக்கு அருகிலுள்ள சென்ஜோன்ஸ் அம்புலன்ஸ் பயிற்சி நிலையத்தில் நடைபெறவுள்ளது.

இக்கருத்தமர்வு இவ்வமைப்பின் தேசிய தலைமையகத்திலிருந்து வருகை தரவுள்ள விரிவுரையாளர்களால் நடாத்தப்படவுள்ள தாக இலங்கை சென்.ஜோன்ஸ் அம்பு லன்ஸ் மாவட்ட அலுவலகப் பொறுப்பாளர் அறிவித்துள்ளார். (ஸ்ரீ-2)




## அகில இலங்கை சைவப்புலவர் சங்க பொன்விழாச் சைவ மாநாடு

அகில இலங்கை சைவப்புலவர் சங்கத் தின் பொன் விழாச் சைவ மாநாடு எதிர்வரும் 17 ஆம் திகதி புதன்கிழமை காலை 8.30 மணிக்கு யா/வண்ணை நாவலர் மகாவித்தியாலய சைவப்புலவர் சச்சிதானந்த சிவம் அரங்கில் அகில இலங்கை சைவப் புலவர் சங்கத் தலைவர் சைவப்புலவர் மு. திருஞானசம்பந்தப்பிள்ளை தலைமையில் நல்லை திருஞான சம்பந்தர் ஆதீன குரு மகா சந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞான சம்பந்த பரமாச்சார்ய சுவாமி கள் அருளாசியுடன் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் நா. சண்முகலிங்கன், சிறப்பு விருந்தினராக வலம்புரி நிர்வாக இயக்குநர் சி.வெற்றி வேலாயுதம் ஆகியோர் கலந்து சிறப்பிக் கவுள்ளனர்.

இந்நிகழ்வில் சைவ நன்மக்கள் அனை வரையும் கலந்துகொள்ளுமாறு அகில இலங்கை சைவப்புலவர் சங்கம் அழைப்பு விடுத்துள்ளது. (ஸ்ரீ)

## காணி உறுதிகள் இன்மையால் வீட்டுத் திட்டம் பெறுவதில் சிரமம்

(கொழும்புத்துறை)

மணியந்தோட்டத்தில் வசித்து வரும் சிலருக்கு காணி உறுதிகள் இன்மையால் வீட்டுத்திட்டம் பெற்றுக்கொள்வதில் சிரமம் ஏற்பட்டுள்ளது.

யாழ். பிரதேசசெயலகத்தால் கடந்த காலங் களில் காணி உறுதிகள் தயாரிக்கப்பட்ட போது இடம்பெயர்வு காரணமாக சிலர் உறுதிகளை பெற்றுக்கொள்ளாமல் விட்டதால் தற்போது குடியிருப்பாளர்களாக இருந்தும் காணி உறுதிகள் இல்லாமையினால் சோஆ அகதிகளுக்கான மனிதாபிமான நிறுவனத் தின் வீட்டுத்திட்ட உதவிகளை பெறமுடி யாதுள்ளது.

இது தொடர்பாக யாழ் பிரதேச செயலகத் திடம் காணி உறுதிகளை தமக்கு வழங்கு மாறு கோரிக்கை விடுத்துள்ளனர். (ஸ்ரீ-51)

## நான்காம் கட்ட சுயதொழில் ஊக்குவிப்புக் கடன் வழங்கல்

(சாவகச்சேரி)

வாழ்வாதார கடன் முகாமைத்துவ சேவை க்கான மாகாண கூட்டுறவுச் சம்மேளத்தின ரால் சாவகச்சேரி நகர் மாதா கிராம அபிவி ருத்திச் சங்க அங்கத்தவர்களுக்கு நான்காம் கட்டமாக சுயதொழில் ஊக்குவிப்புக் கட னாக 3 இலட்சம் ரூபா பகிர்ந்து வழங்கப் படவுள்ளது.

இக் கொடுப்பனவு வழங்கும் நிகழ்வு நாளை மறுதினம் திங்கட்கிழமை பிற்பகல் 4 மணிக்கு சாவகச்சேரி டச்சு வீதியில் அமைந் துள்ள புவேந்தன் நினைவு மண்டபத்தில் சங்கத்தலைவி திருமதி ந.லோகேஸ்வரி தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் தென்மராட்சி பிரதேச கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் மற்றும் வாழ்வாதார கடன்முகாமைத்துவ சேவைக் கான மாகாண கூட்டுறவுச் சம்மேளனத்தின் யாழ்.பிராந்திய உதவிக் கல்விப் பணிப்பாளர் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர். (ஸ்ரீ-29)

## மரம் நாட்டு விழா

(சாவகச்சேரி)

ஜனாதிபதியின் 65ஆவது பிறந்த தினம் மற்றும் இரண்டாவது தடவை ஜனாதிபதி யாக பொறுப்பேற்பதை கௌரவிக்கும் முக மாக தேசிய மரநடுகைத் திட்டம் 2010 இன் கீழ் சாவகச்சேரி நகரசபை அலுவலக வளா கத்தில் நாளை மறுதினம் திங்கட்கிழமை காலை 10.07 நிமிடத்திற்கும் 10 மணி 18 நிமிடத் திற்கும் இடையில் மரம் நாட்டு விழா நகர சபைச் செயலாளர் செல்வி வீ. சிவக்கொழுந்து தலைமையில் நடைபெறவுள் ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக தென்மராட்சி கல்வி வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் கோ.வரதராஜமூர்த்தி சிறப்பு விருந்தினர்களாக சாவகச்சேரி மக்கள் வங்கி முகாமையாளர் க.சண்முகலிங்கம், சாவகச் சேரி நகர் கிராம அலுவலர் க. சிவசரணநாதன் ஆகியோர் கலந்து சிறப்பிக்கவுள்ளனர்.

கௌரவ விருந்தினர்களாக சாவகச்சேரி பொலிஸ் நிலைய உதவிப் பொலிஸ் அத்தி யட்சகர் எம்.டி.எல்.ஏ.குணதிலகா மற்றும் படை அதிகாரி ஆகியோர் கலந்து கொள் ளவுள்ளனர். (ஸ்ரீ-29)

# யாழ்ப்பாணத்தில் அரைவாய்மொழிப் பாடல்கள்

02

**கடந்த செப்ரெம்பர் மாதம் 13ஆம் திகதி யாழ். பல்கலைக்கழகத்தில் இடம்பெற்ற தமிழ்த்துறை கருத்தரங்கில் பேராசிரியர் எஸ்.சிவலிங்கராஜாவினால் சமர்ப்பிக்கப்பட்ட கட்டுரை இங்கு பிரசுரமாகின்றது.**

கல்வியாளர்கள் அங்கீகரித்தமைக்கு உதாரணமாக, முத்துக்குமார கவிராசரின் ஞானக் கும்மியை ஆறுமுகநாவலர் இரு முறை அச்சிட்டு வெளியிட்டமையைச் சுட்டிக் காட்டலாம். மதமாற்றத்தைக் கண்டித்து எழுதப்பட்ட இக் கும்மிப் பாடல் பொது மக்களை நோக்கியே எழுதப்பட்டுள்ளது. மதமாற்றத்தை நியாயப்படுத்திக் கிறிஸ்தவர்களும் கும்மிப் பாடல்கள் பாடியுள்ளனர். பொதுமக்களை நோக்கித் தமது கருத்துக்கள் செல்ல இப் பாடல் வடிவம் பெரிதும் உதவியது எனலாம். இன்றும் இப்பாடல்களில் சில வாய்மொழி மரபாகப் பேணப்படுவதைக் கண்டுகொள்ள லாம். "தெருவோரப் பாடல்களில் கோலோச்சிய வடிவங்களில் கும்மியும், சிந்தும் தலையா னவை என்று டாக்டர் ஆ.இரா.வேங்கடாசலபதி குறிப்பிடுவார். (முச்சந்தி இலக்கியம் பக்.41) அரைவாய்மொழிப் பாடல்களையே தெரு வோரப் பாடல்கள் என்று வேங்கடாசலபதி குறிப்பிடுகின்றார் என்பதும் மனங்கொள்ளத் தக்கது.

அரை வாய்மொழிப் பாடல்களின் முக்கி யமான பொருள் அமைதியினைப் பின்வரு மாறு வகைப்படுத்தலாம்.

1.ஊர்கள் தோறும் நிகழுகின்ற முக்கிய மான சம்பவங்கள்

கொலை , களவு, பெண்கடத்தல், கோட்டு வழக்குகள், தொற்று நோய்கள் முதலானவை.

2.சமூக சீர்திருத்தம்

மதுவிலக்கு, உடை நடை பாவனை

3. சமூகக் குறைபாடுகள்

சாதி, சமயம், பிரதேச வரலாற்றுச் செய்திகள், அரசியல்,பக்தி, வசைபாடுதல்

**ஊர்கள் தோறும் நிகழுகின்ற முக்கிய மான சம்பவங்கள்**

ஊர்கள் தோறும் நிகழுகின்ற முக்கிய மான சம்பவங்களை உடனுக்குடன் பாட லாக இயற்றி, மக்கள் கூடுமிடங்களிலே பாடிக் காட்டிப் பொதுமக்களுக்குக் கையளித்தனர். எழுத்து நிலைப்பட்ட ஆனால், வாய்மொழி யாகக் கையளிக்கப்பட்ட அரை வாய்மொழிப் பாடல்கள் இன்றும் சில முதியவர்களின் வாயில் தவழுவதைக் கண்டுகொள்ளலாம்.

ஊர்கள் தோறும் நிகழ்ந்த கொலைகள், கொள்ளைகள்,பெண்கடத்தல், கோட்டு வழக் குகள், தொற்றுநோய்கள் முதலானவை பற்றிய அரை வாய்மொழிப் பாடல்கள் பல யாழ்ப்பாணத்திலே தோற்றம் பெற்றுள்ளன. அவை முழுவதையும் இன்று தேடிப் பெறுவ தோ, கேட்டறிவதோ முடியாத காரியம் ஆகி விட்டது.

யாழ்ப்பாணத்தில் மிகவும் பரபரப்பாகப் பேசப்பட்ட சேனாதிராசா கொலை பற்றி, அரை வாய்மொழிப் பாடல்கள் பல தோற்றம் பெற் றுள்ளன. அக்ஷய வருஷம் பங்குனி மாதம் வெளிவந்த (1920) ஸ்ரீமான் சேனாதிராசா கொலை விசித்திரக் கவிகள் முதலாம் பாகம் என்னும் நூல் இருபது பக்கங்களைக் கொண்டது.

இதனை இயற்றியவர் திருநெல்வேலி M.R. வித்தியாவல்லி அம்மாள் என்பவர். இந்த நூலின் முன்னட்டையிலே பின்வரு மாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

"இது முன்னர் வெளிவந்த புத்தகங்களி லும் பார்க்கச் சரித்திரம் தொடர்பாக வீரம், சோகம்,தாபம் முதலிய சகல விபரங்களும் அடங்கிய வெண்பா, விருத்தம், கலித்துறை, கும்மி, சிந்து முதலிய நூதன மெட்டுக்களாற் பார்ப்பவர் மனதைப் பிரமிக்கச் செய்யத் தக்க விதமாகவியற்றியது"

இந்த முகப்பு வாசகத்திலிருந்து சேனாதி ராசா கொலைபற்றி இந்நூல் "வெளிவரு வதற்கு முன்னரே பாடல்களும் வெளி வந்துள்ளன என அறியமுடிகின்றது இன்றும் முதியோர் வாயில் வழங்கும்

"பண்டாரக் குளத்தடி முத்தன்
கொண்டனே சேனாதி ராசாவை"

என்ற பாடல் இந்நூலில் இடம்பெற வில்லை. இப்பாடல் இந்நூலுக்கு முன் தோன்றிய பாடலாக இருக்கவேண்டும்.

இந்த அரை வாய்மொழிப் பாடல் நூல் ஒரு பெண்ணினாற் பாடப்பட்டமை மிகவும் அவதானத்துக்குரியது.

ஈழத்து அரைவாய் மொழிப் பாடல் மரபில் "பெண்பாற் புலவர்களும்" இருந்தி ருக்கிறார்கள் என்பதும் மனங் கொள்ளத் தக்கது. இந்த நூலின் அவை யடக்கம் பின்வருமாறு,


"கண்மணியாகிய சேனாதிராசன்
கதைகளையோர்
பெண்மணியாகிய பேதை கவிவழி
பேசியதால்
பண்ணிசை குற்றம் பார்த்துப் பிடித்திடும்
பாவலர்கள்
விண்மணியாம் என விரும்பியுரைத்து
விளம்புவரே"

நல்லூர்த் திருவிழாக் காலங்களில் இப் புத்தகத்தை ஒருவர் பாடிக்காட்டி விற்பனை செய்தார் என்று முதியவர் ஒருவர் கூறினார்.

"சேனாதிராசா விசித்திரக் கவிகள்" என்னும் நூலிலிருந்து வகைமாதிரிக்குச் சில பாடல் களைச் சுட்டிக்காட்டலாம்.

**நொண்டிச் சிந்து**

*சற்சனரே சொல்லக் கேளும் - இந்த*
*தரணியெலாம் புகழும் கோவை நகரில்*
*சிற்பர னருளினாலே - சகல*
*செல்வமும் படைத்திலங்கும் நல்ல குலத்தில்*
*(சற்சனரே)*
*குன்றனைய குணம் படைத்தோன்- குமார*
*சூரிய குலத்துதித்த குழந்தை யென்பர்*
*வன்றிறல் சேனாதிராசா - என்று*
*வையகத்தார் சொல்லுவார்கள் ஐயா நேசர்கள்*
*(சற்சனரே)*



இவ்வாறு தொடங்கும் இப்பாடலைத் தொடர்ந்து,

"செந்நெல் செறி நல்லை நகர் வாசன்..."

என்ற வர்ண மெட்டு எனவரும் பாடல் அமை கின்றது.

அதைத் தொடர்ந்து " பச்சைமலை, பவள மலை என்ற வர்ண மெட்டு" எனப் பின்வரும் பாடல் அமைகின்றது.

"சாய வேட்டியொன்றெடுத்து
தானரையில் மாட்டி
தம்பி தானரையில் மாட்டி
தன்கையாற் சால்வைதனை
தலையினிலே சூட்டி
வாயினிலே தாம்பூலத்தை வாங்கியவர்
போட்டார்
தம்பி வாங்கியவர் போட்டார்"

**பேராசிரியர் எஸ்.சிவலிங்கராஜா**

இவ்வாறு அமையும் பல பாடல்கள் உள் ளன.

மக்கள் கூடுமிடங்களில் இசை யோடும் ஓரளவு அபிநயத்தோடும் பாடிக் காட்டத்தக்க வகையிலேயே அரை வாய்மொழிப் பாடல் கள் அமைந்தன. (தொடரும்)

# மேல் மாகாண பாடசாலைகளில் கல்வி நடவடிக்கைகள் பாதிப்பு

(கொழும்பு)

கொழும்பிலும் அதன் சுற்றுப் புறங்களி லும் நிலவும் சீரற்ற காலநிலை காரணமாக பாடசாலைகளில் கல்வி நடவடிக்கைகள் பாதிக்கப்பட்டுள்ளன.

மேல் மாகாணப் பாடசாலைகளில் நேற்று நடைபெறவிருந்த மூன்றாம் தவணைக்கான பரீட்சைகளை இரத்துச் செய்யுமாறு பாடசா லை அதிபர்களுக்கு கல்வி அமைச்சு வேண்டு கோள் விடுத்துள்ளது.

கொழும்பிலும் அதனை அண்டிய பகுதி களிலும் நிலவிய சீரற்ற காலநிலைக் காரண மாக பல வீதிகள் வெள்ளத்தால் மூழ்கியுள் ளதால் பாடசாலைகளுக்கு செல்லும் மாண வர்கள் பல்வேறு அசௌகரியங்களை எதிர் நோக்கியுள்ளனர். (ஸ்ரீ-2)

# கொழும்பில் 18 ஆண்டுகளின் பின்னர் அதிக மழை வீழ்ச்சி

கொழும்பில் கடந்த 18 ஆண்டுகளின் பின் னர் முதல் தடவையாக 400 மில்லிமீற்ற ருக்கும் அதிகமான மழைவீழ்ச்சி நேற்று முன்தினம் காலை 7 மணிவரை பெய்துள் ளமை பதிவாகியிருப்பதாக வானிலை அவ தான நிலையம் அறிவித்துள்ளது.

கொழும்பில் நேற்று முன்தினம் இரவு முதல் பெய்துவரும் பலத்த மழையினால் கொழும்பு நகரின் பெரும்பாலான வீதிகள் வெள்ளநீரில் மூழ்கிக் கிடப்பதைக் காணக் கூடியதாகவுள்ளது.

இதனால், கொழும்பின் எட்டியாவத்தை, கொட்டாஞ்சேனை,வஜிரா வீதி, ஹவ்லொக் வீதி, ஆயுர்வேத சந்தி, பௌத்தலோக மாவத் தையின் சில பகுதிகள், மருதானை, வோர்ட் பிளேஸ் மற்றும் புறநகர்ப் பகுதிகளிலும் பல வீதிகள் வெள்ளத்தினால் மூழ்கியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (ஸ்ரீ-2)

# தேசிய சம்பள சேவை ஆணைக்குழுவின் அறிக்கை ஜனாதிபதியிடம் கையளிப்பு

2006 ஆம் ஆண்டிலிருந்து 2010 ஆம் ஆண்டுவரை மேற்கொள்ளப்பட்ட மதிப்பீடுக ளின் படி தயாரிக்கப்பட்ட தேசிய சம்பள மற்றும் சேவை ஆணைக்குழுவின் அறிக் கை ஜனாதிபதியிடம் கையளிக்கப்பட்டுள்ளது.

அரச சேவைகள் குறித்து நடைமுறைப்ப டுத்தப்பட்ட சம்பளக் கொள்கையை அடிப்ப டையாகக் கொண்டு சம்பள முரண்பாடு நில வுகின்றதா என்பது தொடர்பாக ஆராய்வதற் காக நியமிக்கப்பட்ட குழுவின் அறிக்கை ஜனாதிபதியிடம் நேற்று முன்தினம் கைய ளிக்கப்பட்டதாக ஜனாதிபதி ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

அலரி மாளிகையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் ஆணைக்குழுவின் இணைச் செய லாளர்கள் , தொழிற்சங்க உறுப்பினர் கள் ஆகியோருடன் ஜனாதிபதியின் செய லாளர் லலித் வீரதுங்க நிதியமைச்சின் செய லாளர் கலாநிதி பீ பீ ஜயசுந்தர ஆகியோர் உள் ளிட்ட பலர் கலந்து கொண்டனர். (ஸ்ரீ)


# நீதவான்களுக்கு பயிற்சியளிப்பதற்கான பயிற்சி நிலையம் அமைக்கப்படவுள்ளது

(கொழும்பு)

நீதவான்களுக்குப் பயிற்சியளிப்பதற் கான பயிற்சி நிலையமொன்றை அமைப் பதற்குத் தேவையான ஆரம்ப நடவடிக்கை கள் முன்னெடுக்கப்பட்டு வருவதாக நீதி அமைச்சர் அதாவுட செனவிரத்ன தெரிவித் துள்ளார்.

பனாகொடப் பகுதியில் நகர அபிவிருத்தி அதிகார சபைக்குச் சொந்தமான இடமொன் றைப் பெற்று விடுதி வசதியுடன் இரண்டு வருடப் பயிற்சிகளை வழங்க எண்ணியுள் ளதாகவும் அமைச்சர் தெரிவித்தார்.

நீதவான்களைப் பயிற்றுவிக்கும் கல் லூரியொன்று இந்தியாவில் இருப்ப தாகவும் அவர்களுடன் புரிந்துணர்வு உடன்பாடிக்கை யொன்றைக் கைச் சாத்திட எதிர்பார்ப் பதாகவும் அதனூ டாக இங்குள்ள நீதவான்களை அங்கு அனுப்பி நீதித்துறை தொட ர்பில் அவர்க ளுக்குத் தேவை யான அறிவினைப் பெற்றுக் கொடுக்க முடியுமென அமைச்சர் சுட்டிக்காட்டினார்.இதனூடாக மிகவும் தைரி யத்துடன் சரியான தீர்ப்புக்களை விரைவில் எடுக்கக்கூடிய ஆற்றல் கிடைக்குமென அவர் மேலும் கூறினார். (ஸ்ரீ)






யாழ்.ஏழாலை வடக்கு அ.மி.த.க. பாடசாலையில் "உலக ஆசிரியர்" தினம் அண்மையில் கொண்டாடப்பட்டது. இந்நிகழ்வின்போது, பாடசாலை ஆசிரியர்கள் ஆசிரியர் கீதத்தை இசைப்பதையும், பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட உடுவில் கோட்டக் கல்விப் பணிப்பாளர் செ.குபேரநாதன் நிற்பதையும் படத்தில் காணலாம்.

# குருப்பெயர்ச்சி பலன்கள்

## 21.11.2010 தொடக்கம் 07.05.2011 வரை



### விருச்சிகம்

விசாகம் 4 ஆம் பாதம், அனுஷம், கேட்டை

செல்வாக்கு மேலோங்கும்! செல்வ நிலை உயர்வடையும்!

*"வெற்றி" ஒன்றையே குறிக் கோளாகக் கொண்டு செயல்பட்டு வியக்கும் வாழ்க்கையை அமைத்துக் கொள்ளும் விருச்சிக இராசி நேயர்களே!*

நீங்க்ள் விதியை மதியால் வெல்லலாம் என்பதற்கு எடுத்துக் காட்டானவர். விரைவில் வி.ஐ.பி. யாக மாறும் இராசிகளில் முதலாவது இடத்தை பிடிப்பது உங்கள் இராசி தான். உங்களுக்கு இந்த குருப் பெயர்ச்சி குதூகலத்தையும் கொண்டாட்டத்தையும் அதிகரித்துக் கொடுக்கும். மதிப்பையும் மரியாதையையும் மகத்தாக வழங்கும். செல்வத்தையும் செல்வாக்கையும் பெருக்கி கொடுக்கும். தேசத்தில் புகழ் பரவ வழி வகுக்கும். எதிர்வரும் 21 ஆம் திகதி முதல் நல்ல காரியங்கள் அனைத்தும் உங்கள் இல்லத்தில் நடை பெறப் போகின்றன. வெல்லம் போல் பேசும் உங்களுக்கு வி.ஐ.பி.க்கள் வீடு தேடி வந்து உதவுவர். சொல்லை செயலாக்கிக் காட்டும் குருவின் நேரடிப்பார்வை வழி வகுக்கும் .

உங்கள் இராசிக்கு தன பஞ்சமாதிபதியான குரு பகவான் பஞ்சம ஸ்தானத்தில் இருந்து கொண்டு அதன் பார்வையை மூன்று இடங்களில் செலுத்துகிறார். மூன்று இடங்களும் முத்தான இடங்களாகும். ஒன்று, ஒன்பது பதினொன்று (1, 9, 11) ஆகிய இடங்கள் குரு பார்வையால் புனிதமடைகின்றன. எனவே தொட்ட காரியங்கள் வெற்றி பெறும். தொகை வந்து கொண்டேயிருக்கும். வெற்றி தேவதை வீட்டில் குடியேறுவாள். சுற்றத்தார்களின் பாராட்டு மழையில் நனைவீர்கள்.

வங்கிச் சேமிப்பு வரலாறு காணாத அளவு உயரும். வளர்ச்சிப்பாதை நோக்கி அடியெடுத்து வைக்கும் இந்த நேரத்தில் ஆரோக்கியமும் சீராகி ஆனந்தப்படுத்தும். பஞ்சம ஸ்தானத்தில் குரு பலம் பெறுவதால் அது குருவிற்கு சொந்த வீடாகவும் இருப்பதால் பூர்வ புண்ணியத்தால் உங்களுக்கு எதுவெல்லாம் கிடைக்க வேண்டுமோ அவற்றை எல்லாம் அள்ளி வழங்கப் போகிறார்.

பொது வாக *அஞ்சும் ஒன்பதும் மிஞ்சும் பலன் தரும்* என்பதால் ஒன்பதாமிடத்தைப் பார்க்கும் குரு ஒளி மயமான எதிர் காலத்திற்கு உத்தரவாதம் கொடுக்க போகிறார். எனவே அந்த குரு பெயர்ச்சியாவதற்கு முன்னதாகவே் கும்பிட்டு கொண்டாடி வழிபட்டு வாருங்கள்.

சுய ஜாதகத்தில் குரு இருக்குமிடம் பார்க்கும் இடத்தை ஆராய்ந்து அது தரும் யோகம் செயல்பட சிறப்பு ஸ்தலங்களைத் தேர்தெடுத்து அனுகூல நட்சத்திரம் அமைந்த நாளில் வழிபாடு செய்து வாருங்கள் . யோகம் தரும் எண்களின் ஆதிக்கத்தில் உங்கள் பெயரையும் உங்கள் குடும்ப உறுப்பினர்களின் பெயர்களையும் அமைத்து செயற்பட்டால் பண மழையில் நனையும் வாய்ப்பு கிட்டும்.

குரு உங்கள் இராசியைப் பார்ப்பதால் உங்கள் இராசி புனிதமடைகிறது. மற்ற இராசிகளைக் குரு பார்ப்பதை விட உங்கள் இராசியை குரு பார்க்கும் போது தான் அதிக முக்கியத்துவம் கிடைக்கிறது. காரணம் தனாதிபதியாகவும் புத்திர ஸ்தானம் மற்றும் பாக்ய ஸ்தானத்திற்கு அதிபதியாகவும் அல்லவா விளங்குகிறார்.!

எனவே, ஆரோக்கியம் சீராகும். அடுக்கடுக்காய் நல்ல தகவல்கள் வந்து சேரும். சீராக தொழில்கள் அமைந்து செல்வ நிலையை உயர்த்திக் கொடுக்கும். கார், வாகனங்கள் வந்து சேரும். கரும்பு போல் பேசும் வாழ்க்கைத்துணை வந்தமையும். போராட்டமான மணவாழ்க்கை மாறி இனி பூந்தோட்டமாக காட்சி அளிக்கப் போகிறது.

இந்த நேரத்தில் தேரேறி பவனி வரும் தெய்வங்களை நீங்கள் வழிபடுவதோடு கூரான மதி வளர்த்தால் குமரனையும் குல தெய்வத்தையும் கும்பிட்டு வருவது நல்லது. எல்லையில்லாத நற்பலன்கள் இல்லம் வந்து சேரும். பாவஸ்தானத்திலும் குரு பார்வை பதிவதால் கிளைத் தொழில்களும் தொடங்கி கீர்த்தியடைவீர்கள். வளைக்காப்பு வைபவங்களும் இல்லத்தில் நடைபெறும்.

**நீங்கள் மூளை பலமே மூல பலமாகக் கொண்டவர்கள்!**

நீங்கள் செய்யும் ஒவ்வொரு செயலும் சாதனை நிகழ்த்தி சரித்திரத்தில் இடம் பிடிக்கும் வித்ததில் அமையும். காரணம் உங்கள் யோசனைகள் தான்.

ஆலோசனைகள் சொல் வதில் அசகாய சூரர்கள் என்று கூட உங்க ளைச் சொல்லலாம். விருச்சிக இராசி விருத்தி அம்சம் உங்கள் இராசி என்பதால் நீங்கள் செல்லும் இடமெல்லாம் செல்வம் தழைத் தோங்கும் .உங்கள் கால்பட்ட இடமெல்லாம் கற்பக விருட்சமாய் வளரும்.

உங்கள் கண்பட்ட இடங்களும் கரம்பட்ட இடங்களும் பொன்னாய் குவியும். எனவே வி.ஐ.பிக்கள் பலரும் உங்களை தங்கள் வீட்டிற்கு வரச்சொல்லி வலியுறுத்துவர். சிபாரிசு இல்லாமேலேயே பெரிய மனிதர்களைப் பார்த்து காரியத்தை முடித்துக் காட்டுவீர்கள். பேச்சாற்றலால் பிறரை ஆச்சரியப்பட வைப்பீர்கள். பெரும் ரசிகள் கூட்டம் உங்கள் பின்னால் இருக்கும்.

வாக்கு பலிதமும் கனவு பலிதமும் மிக்க உங்களுக்கு வாழ்க்கைத் துணையை தேர்ந்தெடுக்கும் பொழுது கணப் பொருத்தம் முதல் கச்சிதமான பொருத்தங்கள் ஆறும் இருந்தால் மண வாழ்க்கை மகிழ்ச்சிகரமானதாக அமையும்.

எல்லோரும் நன்றாக வாழ வேண்டுமென்று எண்ணும் உங்க ளுக்கு இந்த குருப் பெயர்ச்சி எந்தெந்த வழிகளில் எல்லாம் வளர்ச்சியைக் கொடுக்கும் என்பதைப் பற்றி பார்ப்போம்.

*ஐந்தினில் குருதான் வந்தால்*
*அனைத்திலும் வெற்றி கிட்டும்!*
*பைதனில் பணமும் சேரும்!*
*பாராளும் யோகம் வாய்க்கும்!*
*வையகம் போற்றும் வண்ணம்*
*வாழ்க்கையும் அமையும் உண்மை!*
*செய்தொழில் வளர்ச்சியாகும்!*
*செல்வாக்கும் அதிகரிக்கும்!* என்று ஜோதிட சாஸ்திரம் கூறுகிறது.

அந்த அடிப்படையில் பார்த்தால் ஐந்தாமிடத்தில் சஞ்சரிக்கும் குரு உங்களுக்கு அனைத்து வழிகளிலும் வெற்றியைக் கொடுக்கப் போகிறார். அடிப்படை வசதிகளைப் பெருக்கி கொள்வீர்கள் கொடுக்கல் வாங்கல்கள் சீராகும். கொற்றவர்களும் மற்றவர்களும் போற்றும் விதத்தில் வாழ்க்கை அமையும்.

**உங்கள் விருப்பங்களை நிறைவேற்றும் வியாழனின் பார்வை!**

குருவின் பார்வை பதியும் இடங்களான 1,9,11 ஆகிய இடங்களால் என்னென்ன காரியங்கள் நடைபெற வேண்டுமோ அந்தந்த காரியங்கள் எல்லாம் வெகுசிறப்பாக நடைபெறும் கடந்த காலத்தைப் பற்றி கவலைப்பட வேண்டாம். நிகழ்காலத் தேவைகள் எல்லாம் பூர்த்தியாகும். எதிர்காலத்திற்காக நீங்கள் தீட்டிய திட்டங்கள் வெற்றி பெறும்.

குடும்பச் சுமை கூடும். தாய், தந்தை பிள்ளை ,மாமியார்,மாமனார்,மைத்துனர், கொழுந்தன்,மைத்துனி போன்ற அத்தனை உறவுகளிலும் இருந்து வந்த பிரச்சினைகள் அகலும். பகை விலகி,பாசம் கூடும். நகை என்றும்,தொகை என்றும், கார் என்றும், நச்சரித்து வந்த உங்கள் மனைவிக்கும் மக்களுக்கும் உள்ளம் மகிழும் விதத்தில் இனி அவற்றை வாங்கிக் கொடுப்பீர்கள்.

குருவின் அருட்பார்வையால் ,தேடி வந்த சிக்கல்கள் எல்லாம் விலகும். கோடி கோடியாய் பணம் குவிக்க வாய்ப்புகள் வாயில் கதவைத் தட்டும். ஆரோக்கியத்தில் ஏற்பட்ட அச்சுறுத்தல்கள் அகலும். நீடித்த நோயிலிருந்து நிவாரணம் பெறுவீர்கள். உற்சாகத்தோடு உல்லாச பயணங்களை மேற்கொள்வதைப் போல தினந்தோறும் பயணங்களை மேற்கொள்வீர்கள். இனி தினம் தினம் திருவிழா ! என்று சொல்லும் அளவிற்கு நிகழ்ச்சிகள் அலைமோதப் போகின்றன.

குருவின் பார்வை பலம் ஒன்பதா மிடத்தில் பதிவதால் மண்ணைத்தொட்டாலும் பொன்னாகும் நேரமிது. என்ன நினைத்தாலும் அதைச் செய்ய இனி நண்பர்கள் ஒத்துழைப்புச் செய்வார்.

கூட்டு முயற்சிகளை விட்டு இனி தனி முயற்சிகளில் ஆர்வம் காட்டுவீர்கள். ஓடி உழைத்தும் உழைப்பிற்கேற்ற பலன் கிடைக்கவில்லையே உட்கார்ந்து பேசிக் கொண்டு ஒன்றும் செய்யாமல் இருப்பவர்களுக்கெல்லாம் உயர்ந்த சம்பளம் கிடைக்கிறதே என்று நீங்கள் நினைத்திருக்கலாம். இனி உங்களுக்கும் உத்தியோக உயர்வு ஊதிய உயர்வு அரசு வழிச்சலுகைகள் அனைத்தும் கிடைக்கப்பேகிறநது.

குருவின் பார்வை இலாப ஸ்தானத்தில் பதிவது மிகுந்த யோகம் தான். எதிர்பார்த்ததைக் காட்டிலும் இலாபம் தொழில் இரு மடங்காக வந்து சேரும்.

புதிய பங்கு தாரர்கள் வந்து இணைந்து பழைய தொழிலை தொடர்ந்து நடத்த ஒத்துழைப்பு கொடுப்பார்.

பூர்வீக சொத்துக்களை விற்று புதிய சொத்துகள் வாங்குவீர்கள் . ஆர்வத்தோடு கட்டப்பணியைத் தொடர்வீர்கள் பௌர்ணமி நாளில்

**சிவல்புரி சிங்காரம்**

கிரிவலம் வருவதன் மூலமும் பிரதோஷ நாளில் நந்தி வழிபாட்டை நீங்கள் மேற்கொள்வதன் மூலமும் அபூர்வ பலன்களை அதிகம் பெறமுடியும்.

நல்லவர்களின் சிநேகத்தால் பல சுப காரியங்கள் நடைபெறும் அந்நியத்தேசத்திலிருந்து வரும் அழைப்புகைள ஏற்றுக் கொள்ளுங்கள் பொன்னும் பொருளும் போற்றுகிற செல்வாக்கும் இன்னும் அதிகரிக்க இந்த குருவின் பார்வை பலம் உங்களுக்கு கைகொடுக்கப்போகிறது.

**செல்வம் வளம் தரும் சிறப்பு வழிபாடு**

ஐந்தாமிடத்துக் குருவால் அன்றாட வாழ்க்கை நன்றாக அமைய கற்பக விநாயகர், வைரவர், வடிவுடையம்மன், பெரிய நாயகி அம்மன், நந்தியையும் ஒரே நாளில் வழிபட்டு வாருங்கள் உன்னத வாழ்க்கை உங்களுக்கு வந்து சேரும்.

**விருச்சிக இராசி பெண்களுக்கு வியக்கும் செய்திகள் வந்து சேரும்.**

விருச்சிக இராசியில் பிறந்த பெண்களுக்கு இந்த குருப்பெயர்ச்சி வாழ்வில் இனிமையை சேர்க்கும் விதத்தில் அமையப் போகிறது. மீன குருவின் பார்வை பலத்தால் வருமானம் பெருகும்.

வசதி, வாய்ப்புகள் அதிகரிக்கும். கணவன் மனைவிக்குள் கனிவு கூடும். உச்சி முதல் உள்ளங்கால் வரை ஆபரணங்கள் அணிய வாய்ப்பு கிட்டும்.

உங்கள் பெயரிலேயே தொழில் தொடங்க இல்லத்தார் முன்வரு வார். முகராசி மிக்க மகராசி என்று ஊர் மக்கள் உங்களை பாராட்டுவர்.

ராகு-கேதுக்களுக்கு உரிய சிறப்பு வழிபாட்டை மேற்கொள்வதோடு நந்தி வழிபாட்டிலும் ஆர்வம் காட்டுங்கள் நல்லதே நடக்கும்.

(தொடரும்)



கிளிநொச்சி கரைச்சி பிரதேச சபை அலுவலகத்திற்கு நேற்று முன்தினம் வடமாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜி.ஏ.சந்திரசிறி விஜயம் ஒன்றை மேற்கொண்டார். இவ்விஜயத்தின் போது பிரதேச சபையால் முன்னெடுக்கப்படும் வேலைத்திட்டங்கள் தொடர்பாக கலந்துரையாடுவதையும் அருகில் பிரதி பிரதம செயலாளர் இராசநாயகம் மற்றும் கரைச்சி பிரதேச சபை செயலாளர் அமர்ந்திருப்பதையும் நிகழ்வில் கலந்து கொண்டவர்களையும் படங்களில் காணலாம்.(படங்கள் :- என்.குமார்)



யாழ்.பல்கலைக்கழக சித்திர வடிவமைப்பு பிரிவின் முன்னாள் மாணவர்கள் 7 பேர் இணைந்து நடத்தும் மூன்றுநாட்கள் ஓவியக்கண்காட்சி நேற்று முன்தினம் பல்கலைக்கழக கலைக்கூடத்தில் ஆரம்பமானது. இந்நிகழ்வில் யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர் என்.சண்முகலிங்கன் நாடாவெட்டி கண்காட்சியை ஆரம்பித்து வைப்பதையும் பார்வையிடுவதையும் மாணவர்களோடு துணைவேந்தர் நிற்பதையும் கண்காட்சியில் வைக்கப்பட்டிருந்த ஆக்கம் ஒன்றையும் படங்களில் காணலாம். (படங்கள்:-எஸ்.கரன்)

## இலங்கையிலேயே மிகப்பெரிய கட்டடம்;
## சீன அரச நிறுவனம் நிர்மாணிக்கவுள்ளது

(கொழும்பு)

இலங்கையில் மிகப்பெரிய கட்டடத்தை நிர்மாணிக்கும் வேலைகளை சீன அரச நிறுவனம் ஒன்று ஏற்றுக்கொண்டுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

தாமரைக்கோபுரம் என்ற பெயரில் 350 மீற்றர் உயரத்தைக் கொண்டதாக இந்தக் கட்டடம் அமைக்கப்படவுள்ளது. தாமரை வடிவத்தில் இந்தக் கோபுரம் சுமார் 20 ஏக்கர் மைதானத்தை உள்ளடக்கியதாகவும் அமைக்கப்படவுள்ளது.

200 மில்லியன் டொலர்ஸ் செலவில் இந்தக் கோபுரத்தை அமைக்கும் பணிகளை சீன அரச நிறுவனம் ஒன்று பொறுப்பேற்றுள்ளது. இது இலங்கையில் சீனா மேற்கொள்ளவுள்ள அடுத்த மிகப் பெரிய திட்டமாகும். இதன் முதலாவது மற்றும் இரண்டாவது தளங்கள் தொலைக்காட்சி,வானொலி போன்றவற்றின் ஒலி,ஒளி பரப்புக்கும் தொலைத்தொடர்பு சேவைகளுக்கும் பயன்படுத்தப்படவுள்ளன.

வணிக வளாகத்தையும் உள்ளடக்கியதாக அமையவுள்ள இந்தக் கோபுரத்தின் உச்சியில் சூதாட்ட மற்றும் இரவு விடுதிகள் என்பனவும் அமையவுள்ளன. (ஸ்ரீ-2)

## சீரற்ற காலநிலையின் காரணமாக தொற்றுநோய் பரவும் அபாயம்
## சுகாதார அமைச்சு எச்சரிக்கை

சீரற்ற காலநிலை காரணமாக தொற்றுநோய்கள் பரவக்கூடிய சாத்தியக் கூறுகள் உள்ளதாக சுகாதார அமைச்சு எச்சரிக்கை விடுத்துள்ளது.

மேல்மாகாணத்தில் மாத்திரமன்றி நாடாளவிய ரீதியில் சீரற்ற காலநிலையின் தாக்கம் காரணமாக இந்த நிலை ஏற்பட்டுள்ளதாக அமைச்சின் தொற்றுநோய் பிரிவின் பணிப்பாளர் சுதத் பீரிஸ் தெரிவித்துள்ளார்.

மக்கள் குடிநீரை பெற்றுக் கொள்ளும் போது சுகாதார பழக்கவழக்கங்களை முறையாக கடைப் பிடிக்க வேண்டும் எனவும் இதேவேளை மழை காரணமாக நீரில் அசுத்தம் மற்றும் மனித உடலுக்கு தீங்கிழைக்கக் கூடிய திராவகங்கள் கலந்திருப்பதால் போக்குவரத்துக்களின் போது பாதுகாப்பான முறையில் செயற்படுமாறும் பணிப்பாளர் மேலும் ஆலோசனைகளை வழங்கியுள்ளார். (ஸ்ரீ-2)

## வரவு- செலவுத் திட்ட விவாதம் நடைபெறும் நாட்களில் பாதுகாப்பு

(கொழும்பு)

வரவு-செலவுத்திட்ட விவாதம் நடைபெறும் நாட்களில் பாராளுமன்றிற்கு விசேட பாதுகாப்பு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாக சபாநாயகர் சமல் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

பாராளுமன்ற வளாகத்தின் சகல பகுதிகளும் தீவிர சோதனைக்கு உட்படுத்தப்படவுள்ளதாக குறிப்பிட்டுள்ளார்.

பாராளுமன்ற உறுப்பினர்களின் ஓய்வறைகள் மற்றும் காரியாலயங்கள் உள்ளிட்ட சகல இடங்களிலும் சோதனை நடத்தப்படவுள்ளது.

எதிர்வரும் 18மற்றும் 19ஆம் திகதிகளில் இந்த சோதனை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவுள்ளதாகத் தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் 22ஆம் திகதி நிதிய மைச்சர் பதவி வகிக்கும் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ வரவு- செலவுத் திட்ட யோசனையை பாராளுமன்றில் சமர்ப்பிக்க உள்ளதாகத் குறிப்பிட்டுள்ளார்.

வரவு- செலவுத்திட்டம் சமர்ப்பிக்கப்படும் தினத்தில் பாராளுமன்ற களரிக்குள் விசேட அதிதிகள் மட்டுமே அனுமதிக்கப்படுவர்வாகனத் தரிப்பிட வசதி தொடர்பான விடயங்களிலும் மாற்றங்கள் ஏற்படுத்தப் பட்டுள்ளன என்றார். (ச-5)



கிளிநொச்சி புனித திரேசா பெண்கள் கல்லூரியில் உயர்தர வகுப்பில் கல்வி பயிலும் யுத்தத்தால் பாதிக்கப்பட்ட 7 மாணவர்களுக்கு பருத்தித்துறை ஸ்ரீராமகிருஷ்ண சாரதாசேவாச்சிரமம் சார்பில் கிளிநொச்சி இலங்கை வங்கி முகாமையாளர் கோ.சேதுகாவலர் துவிச்சக்கர வண்டிகளை அன்பளிப்புச் செய்வதையும் அருகில் கல்லூரி அதிபர் திருமதி ஜெயந்தி தனபாலசிங்கம் நிற்பதையும் படத்தில் காணலாம்.

## இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

2010.11 13

- 1002 - இங்கிலாந்தில் வசிக்கும் அனைத்து டேன் பழங்குடிகளையும் கொல்லும்படி ஆங்கிலேய மன்னன் எத்தல்ரெட் உத்தரவிட்டான். (இது சென் பிறைஸ் நாள் படுகொலைகள் என அழைக்கப்பட்டது).
- 1851 - வோஷிங்டனின் சியாட்டில் நகரில் முதல் ஐரோப்பியக் குடியேற்றக்காரர்களான, ஆர்தர் ஏ.டென்னி என்பவரும் அவரது குழுவினரும் வந்திறங்கினர்.
- 1887 - மத்தி இலண்டன் பகுதியில் அயர்லாந்து விடுதலைப் போராட்ட ஆதரவாளர்களுக்கும் பொலிஸாருக்கும் இடையில் மோதல் ஏற்பட்டது.
- 1887 - நவம்பர் 11 இல் சிக்காகோவில் தூக்கிலிடப்பட்ட நான்கு தொழிலாளர் தலைவர்களின் இறுதி ஊர்வலத்தில் சுமார் 5ஆயிரம் பேர் கலந்து கொண்டனர்.
- 1918 - ஒட்டோமான் பேரரசின் தலைநகர் கொன்ஸ்டண்டீனப்போல் நகரை கூட்டுப் படைகள் கைப்பற்றின.
- 1950 - வெனிசுவேலாவின் ஜனாதிபதி ஜெனரல் கார்லொஸ் டெல்காடோ சால்போட் படுகொலை செய்யப்பட்டார்.
- 1957 - கோர்டன் கூல்ட் என்பவரால் லேசர் கண்டுபிடிக்கப்பட்டது.
- 1965 - அமெரிக்காவின் யார்மூத் காசில் என்ற பயணிகள் கப்பல் பகாமசில் மூழ்கியதில் 90 பேர் கொல்லப்பட்டனர்.
- 1970 - போலா சூறாவளி கிழக்குப் பாகிஸ்தானில் இடம்பெற்ற மிகப் பெரும் சூறாவளியில் 5 இலட்சம் பேர்கள் வரையில் உயிரிழந்தனர். இது 20ஆம் நூற்றாண்டின் மிகப் பெரும் இயற்கை அழிவு எனக் கருதப்படுகிறது.
- 1971 - ஐக்கிய அமெரிக்காவின் மரைனர் 9 விண்கப்பல் செவ்வாய்க் கோளை வலம் வந்தது. இதுவே பூமியை விட வேறொரு கோளைச் சுற்றி வந்த முதலாவது விண்கப்பலாகும்.
- 1985 - கொலம்பியாவில் நெவாடோ டெல் ரூஸ் என்ற எரிமலை வெடித்ததில் ஏற்பட்ட மண்சரிவினால் ஆர்மேரோ நகரம் அழிந்தது. இதில் 23 ஆயிரம் பேர் கொல்லப்பட்டனர்.
- 1990 - உலக வலைப் பின்னல் (WWW) ஆரம்பிக்கப்பட்டது.
- 1993 - யாழ்ப்பாணம் புனித ஜேம்ஸ் தேவாலயத்தின் மீது இலங்கை விமானங்கள் நடத்திய குண்டுத் தாக்குதலில் வணக்கத்தில் ஈடுபட்டிருந்த 9 பொதுமக்கள் கொல்லப்பட்டனர். பலர் படுகாயமடைந்தனர்.
- 1993 - தவளை நடவடிக்கை: யாழ்ப்பாணம், பூநகரி மற்றும் நாகதேவன்துறை இராணுவ, கடற்படைக் கூட்டுத்தளங்களை விடுதலைப் புலிகள் தாக்கினர்.
- 1994 - ஐரோப்பிய ஒன்றியத்தில் இணைய சுவீடன் மக்கள் முடிவு செய்தனர்.
- 1995 - சவுதி அரேபியாவில் ரியாத் நகரில் இடம்பெற்ற குண்டுத் தாக்குதலில் ஐந்து அமெரிக்கர்களும் இரண்டு இந்தியர்களும் உயிரிழந்தனர்.


### பிறப்புகள்

- 0354 - ஹிப்போவின் அகஸ்டீன், மெய்யியலாளர், இறையியலாளர் (இ. 430)
- 1934 - கமால் கமலேஸ்வரன், மேற்கத்திய இசைக் கலைஞர்
- 1969 - அயான் கேர்சி அலி, சோமாலியப் பெண்ணியவாதி
- 1979 - ரான் ஆர்டெஸ்ட், அமெரிக்க கூடைப்பந்து ஆட்டக்காரர்

### இறப்புகள்

- 2002 - கணபதி கணேசன், மலேசிய இதழாசிரியர் (பி. 1955)

**1989 - மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் ரோகண விஜயவீர இராணுவத்தினரால் கைது செய்யப்பட்டுச் சுட்டுக் கொல்லப்பட்டார்.**



# மிளகாயில் பீடைகளும் முகாமைத்துவமும்



**கலாநிதி கு.மிகுந்தன்**
தலைவர்
உயிரியல்துறை
விவசாய பீடம்
யாழ்.பல்கலைக்கழகம்

**பிளாஸ்ரிக் விரிப்பு**

மண்ணில் வாழும் கூட்டுப்புழுப் பருவத்தை அழிப்பதற்கு பிளாஸ்ரிக் துணியை நில மேற்பரப்பில் விரித்து விடுதல் நல்லது. இதனை Plastic Mulching என அழைப்பர். ஆரம்ப செலவு பிளாஸ்ரிக் விரிப்புக்கு அதிகமாக இருப்பினும் இதன்மூலம் அனைத்துக் கிளைகளும் கட்டுப்படுத்தப் படுவதுடன் பனிப்பூச்சியின் கூட்டுப்புழுப் பருவம் மண்ணினுள் செல்வது தடைப்படுகிறது. இதன் மூலம் இப் பூச்சிப் பீடையின் வாழ்க்கை வட்டம் தடைப்படுகின்றது. பிளாஸ்ரிக் விரிப்புக்கு பதிலாக இலை குழைகளையும் பயன்படுத்தலாம் . ஆயினும் பிளாஸ்ரிக் விரிப்பினால் இப் பூச்சிப் பீடையைக் கட்டுப்படுத்தும் திறனுக்கு இலை குழைகளால் முடியாது என்பதை கவனத்திற்கொள்க.

**பயிர் செய்கைத் தொகுதி**

மிளகாய் பயிர்செய்கையில் மிளகாயை தனியான பயிராக நடுகை செய்வது பனிப் பூச்சியின் விருத்திக்கு உதவி செய்வதாக அமையும். எனவே இங்கே கலப்புப் பயிர்ச் செய்கையின் தேவை எழுகின்றது. கலப்பு பயிர்ச்செய்கைக்காக மிளகாயுடன் வேறு பயிர்களைத் தெரிவு செய்யும்போது கலப்புப் பயிரானது (Comopanion crop) பனிப் பூச்சிக்கு விருந்து வழங்கியாக இருக்கக் கூடாது. அப்படியாயின் இருவித்திலை -ஒரு வித்திலை கூட்டு மிகவும் பொருத்தமானதாக அமையும். மிளகாய் இருவித்திலைப் பயிராக இருப்பதனால்ஒரு வித்திலைப் பயிர்களை கலப்புப் பயிர்ச்செய்கைக்கு தெரிவு செய்யலாம். மிளகாய் பனிப்பூச்சிக்கு பொதுவாகவே ஒரு வித்திலைப் பயிர்கள் விருந்தாக அமையாதது இயற்கையின் விசித்திரம் என்றே கூறவேண்டும். ஒரு வித்திலைப் பயிர்களாக சோளம், இறுங்கு, கம்பு, குரக்கன் ஆகியனவற்றை பயிரிடலாம். அதிலும் இவற்றை ஊடு பயிராக விளைவிக்கும் போது மூன்று நிரை மிளகாயிற்கு ஒரு நிரை பலவற்றினது கூட்டு அமைந்திருக்கின்றது.

பொதுவாகவே இலைச்சுருள் அதிகமாக இருக்கும் காலங்களில் மழை பெய்தால் பனிப்பூச்சியின் பருவங்கள் கழுவிச் செல்லப்படுவதையும் அதன்மூலம் மழை பெய்ததன் பின்னரான நாட்களில் இலைச்சுருள் தெளிவாவதையும் விவசாயிகள் அவதானித்திருப்பார்கள். இந்த செயற்பாட்டை ஒத்ததாக மிளகாய் பயிருக்கு வெறுமனே நீரைவிசுறுவதன் மூலம் இலைச் சுருளின் அளவை ஓரளவுக்குக் குறைக்க முடியும்.

ஆனாலும் பூக்கும் காலத்தில் நீரை பீச்சியடிப்பது உகந்ததல்ல. இதன்மூலம் பூவுதிர்ந்து விழ வாய்ப்புகள் அதிகம்.


வெறுமனே நீரை தெளிப்பதை விட இப் பயிர்களை விளைவிக்கும் போதும் சில இடங்களில் எல்லைப் பயிராக விளைவித்த போதும் மிளகாயில் இலைச்சுருளல் கணிசமான அளவிற்கு குறைக்கப்பட்டிருந்ததை ஆராய்ந்து அவதானிக்கமுடிந்தது.

**மிளகாயிற்கு சேதன திரவக் கரைசலைத் தெளித்தல்**

பனிப்பூச்சியின் தாக்கத்தின் அளவைக் குறைப்பதற்காக விவசாயிகள் மட்டத்தில் பல சேதனக் கரைசல்கள் பயன்படுத்தப்படுகின்றன. இவற்றினது அடிப்படை ஒன்றாக இருப்பினும் சேதனக் கரைசல்களாக

12-XII

## இனியொரு பசுமைப் புரட்சிக்கு...




மாட்டுச் சாணம் மற்றும் சிறுநீரை 1:3 எனும் விகிதத்தில் கலந்து ஒரு கிழமைக்கு நொதிக்க வைத்து அக் கரைசலை வடித்தெடுத்து 1:5 எனும் விகிதத்தில் நீர் கலந்து தெளிக்கலாம்.

இன்னும் மண்புழு திரவக் கரைசலை தெளிப்பதன் மூலம் இலைச்சுருளலைக் கட்டுப்படுத்த முடியும்.

பூக்களைப் பாதிக்காத வகையில் சேதனக் கழிவுகளை தயார் செய்து பயன்படுத்த முடியும். பூச்சிநாசினிகளால் ஆகாததை இச் சேதனக் கழிவுகள் செய்து காட்டும் விந்தையைப் பாரீர்.

**பூச்சி நாசினிகளை அளவுடன் அவதா னத்துடன் தெளிக்கவும்**

மிளகாய் பனிப்பூச்சியை கட்டுப்படுத்த பூச்சிநாசினி பயன்படுத்த விரும்பின் ஊடு புகுந்து தாக்கும் பூச்சிநாசினிகளைத் தெரிவு செய்யலாம். அவற்றிலும் ஒரே பூச்சி நாசினியைத் தொடர்ந்து பிரயோகிக்கக் கூடாது. டைமீதோயேற்று, இமிடா குளோர்பிறிற்று (அட்மயர்), பைபுரோனில் (றீஜென்ற்) ஆகிய பூச்சி நாசினிகளை ஒன்று மாற்றி ஒன்றாகப் பயன்படுத்தலாம்.

தேவையற்று பூச்சிநாசினிகளை தெளிக்க வேண்டாம். (தொடரும்)

# உலக மாற்று ஆற்றலுள்ளோர் தினப் போட்டி முடிவுகள்

(பண்ணாகம்)

வலிகாமம் கல்வி வலயத்திற்குட்பட்ட பாடசாலைகளுக்கிடையில் நடத்தப்பட்ட உலக மாற்று ஆற்றலுள்ளோர் தினப் போட்டி முடிவுகள் வலிகாமம் கல்வி வலயத்தால் அறிவிக்கப்பட்டுள்ளது.

இப் போட்டிகளில் முதல் மூன்று இடங்களைப் பெற்றவர்களின் விபரம் வருமாறு,

**பேச்சு**

பிரிவு I

ஜெ.லோகேஸ்வரி (யா/இராமநாதன் கல் லூரி), செ.சிவபாலன்(யா/அராலி முருகமூர்த்தி, கு.சாருஜன்(யா/சங்குவேலி அ.த.க. பாடசாலை)

பிரிவு II

க.பிரகான்(யா/யூனியன் கல்லூரி), சி. அனந்தினி (யா/ இராமநாதன் கல்லூரி), ம.சாளினி (யா/நவாலி அட்டகிரி வித்தி

பிரிவு III

வி.ஸ்ரீசுபாங்கி (யா/வட்டு மத்தியகல்லூரி), நா.ஜனனி (யா/இராமநாதன் கல்லூரி), கை. சுரேன் (யா/ வட்டு இந்துக் கல்லூரி)

பிரிவு IV

வி.ஸ்ரீமாதங்கி (யா/வட்டு இந்துக் கல்லூரி), க.ஜீவானந்தன் (யா/மெமோறியல் ஆங்கிலப் பாடசாலை), வி.சிவதர்ஷிகா(யா/மகாஜனாக் கல்லூரி)

**கட்டுரை**

பிரிவு I

தி.சதுர்ஷனா (யா/ இளவாலை மெய்கண்டான் வித்தி), சி.சுதச்செல்வன் (யா/மாரிசன் கூடல் றோ.க.த.க.பாடசாலை), கு.தணிகா (யா/அராலி முருகமூர்த்தி வித்தி.)

பிரிவு II

வி.கஜன்சிகா (யா/ ஏழாலை ஸ்ரீமுருகன் வித்தி.), சு.சகானா (யா/மகாஜனா கல்லூரி), க.மினுஜா (யா/ அட்டகிரி சைவ வித்தி.)

பிரிவு III

தே.நிரோஜினி (யா/ஆனைக்கோட்டை றோ.க.த.க.பாடசாலை), பு.கஜரூபி (யா/இளவாலை மெய்கண்டான் வித்தி.), மா.தர்ஷயா (யா/வட்டு.இந்துக் கல்லூரி)

பிரிவு IV

சொ.தருமதன்(யா/யூனியன் கல்லூரி), ர.மரிஸ்ரலா(யா/இராமநாதன் கல்லூரி), நா.மேதிநிலாஷா (யா/மகாஜனாக் கல்லூரி)

**தனிஇசை**

பிரிவு I

தி.சுகந்தினி (யா/வட்டு மத்திய கல்லூரி), ஜெ.இராஜ்குமார் (யா/ இராமநாதன் கல்லூரி), க.மதுஷா (யா/அளவெட்டி சதானந்தா வித்தி.)

பிரிவு II

த.அமலநிதுசன் (யா/யூனியன் கல்லூரி), ப.பிரியங்கன்(யா/சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி), சி.டனுசன்(யா/வட்டு. மத்திய கல்லூரி)

பிரிவு III

ப.சுகன்யா (யா/ஆனைக்கோட்டை பால சுப்பிரமணிய வித்தி.), க.செல்வவதி (யா/இராம நாதன் கல்லூரி),பா.டெசிந்தா (யா/சுழிபுரம் விக்ரோறியா)

பிரிவு IV

ஜெ.தேவரூபி (யா/ இராமநாதன் கல்லூரி), வி.விந்துகா (யா/சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி), ச.நிசாயினி (யா/வட்டு. மத்திய கல்லூரி)

**குழு இசை**

பிரிவு I

யா/இராமநாதன் கல்லூரி, யா/தெல்லிப்பளை சைவப்பிரகாச வித்தி., யா/ஏழாலை தெற்கு அ.மி.த.க.

பிரிவு II

யா/யூனியன் கல்லூரி, யா/இளவாலை கன்னியர் மடம்),யா/இராமநாதன் கல்லூரி.

பிரிவு III

யா/வட்டு.இந்துக்கல்லூரி, யா/ஆனைக் கோட்டை பாலசுப்பிரமணிய வித்தி., யா/ சுழிபுரம் விக்ரோறியா கல்லூரி)

பிரிவு IV

முதலிடம் யா/இராமநாதன் கல்லூரி

**தனிநடனம்**

பிரிவு I

ச.மயூரா(யா/இராமநாதன் கல்லூரி), க.கஸ்தூரி (யா/சில்லாலை றோ.க.த.க. பாடசாலை), மோ.டிலக்சனா(யா/உயரப்புலம் குணபாலன் வித்தி.)

பிரிவு II

கி.சிந்துஜா (யா/இளவாலை கன்னியர் மடம்),எஸ்.கெளசிகா (யா/இணுவில் மத்திய கல்லூரி),ச.சிந்துஜா(யா/சுழிபுரம் விக்ரோறியாக்கல்லூரி)

பிரிவு III

ந.உஷேனி (யா/இராமநாதன் கல்லூரி), க.யசோ்தா(யா/இளவாலை கன்னியர்மடம்), ச.அபர்ணா(யா/சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி)

பிரிவு IV

தி.சுஜித்தா(யா/ சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி), அ.ஜெஜீபா(யா/இளவாலை மெய்கண்டான் வித்தி

**குழுநடனம்**

பிரிவு I

யா/இளவாலை மெய்கண்டான் வித்தி. யா/ இளவாலை கன்னியர்மடம் ம.வி.

பிரிவு II

யா/இளவாலை கன்னியர்மடம் ம.வி., யா/இளவாலை மெய்கண்டான் ம.வி., (யா/ சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி

பிரிவு III

யா/சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி,யா/ கந்தரோடை தமிழ்க் கந்தையா வித்தி.

பிரிவு IV

யா/மெமோறியல் ஆங்கிலப் பாடசாலை

**நாடகம்**

யா/இளவாலை மெய்கண்டான்ம.வி., யா/ வட்டு இந்துக் கல்லூரி, யா/ இணுவில் மத்திய கல்லூரி

**வில்லுப்பாட்டு**

யா/யூனியன் கல்லூரி.

(ஸ்ரீ-12)

# அமைச்சுப் பதவிகளுக்காக போட்டியிடும் புதிய நாடாளுமன்ற உறுப்பினர்கள்

(கொழும்பு)

ஆளும் கட்சியில் அங்கம் வகிக்கும் மற்றும் அண்மையில் இணைந்து கொண்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள் அமைச்சுப் பதவிகளுக்காக போட்டியிட்டு வருவதாக தெரிவிக்கப்படுகிறது.

இதுவரையிலும் அமைச்சு அல்லது பிரதி அமைச்சுப் பதவிகளைப் பெற்றுக்கொள்ளாத நாடாளுமன்ற உறுப்பினர்களும் தற்போது பிரதி அமைச்சுப் பதவிகளை வகித்து வருவோரும் இவ்வாறு போட்டியிட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

அமைச்சு அல்லது பிரதி அமைச்சுப் பதவியை வழங்குமாறு அனைவரும் கோருவதாக ஜனாதிபதி தெரிவித்துள்ளார்.

இவ்வாறு அனைவருக்கும் அமைச்சு அல்லது பிரதி அமைச்சுப் பதவிகளை வழங்க முடியாது எனவும் அழுத்தங்களுக்கு அஞ்சி பதவிகளை நிர்ணயிக்கப்போவதில்லை என்றும் ஜனாதிபதி அண்மையில் அலரி மாளிகையில் நடைபெற்ற நாடாளுமன்ற உறுப்பினர் சந்திப்பில் குறிப்பிட்டுள்ளார்.

இவருக்கு பதவி வழங்கினால் எனக்கும் பதவி வழங்கப்படவேண்டும். நான் இதனைச் செய்திருக்கின்றேன் என பலர் பதவிக்காக போராடி வருவதாகவும் கட்சியின் கதவு எப்போதும் திறந்திருக்கும் என்றும் எந்த நேரத்திலும் உள்ளே வரலாம் எந்த நேரத்திலும் வெளியேறிச் செல்லலாம் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (ஸ்ரீ-2)

# ரெலிகொம் நிறுவனத்தில் 324.4 மில்.ரூபா ஊழல் மோசடி

## புலனாய்வுப் பிரிவினர் விசாரணை

(கொழும்பு)

ரெலிக்கொம் நிறுவனத்தில் இடம்பெற்ற 324.4 மில் லியன் ரூபா ஊழல் மோசடி குறித்து புலனாய்வுப்பிரிவினர் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

ஐ.பி.ரீ.வி.தொழில் நுட்பத்தை கொள்வனவு செய்த போது இந்த மோசடி இடம் பெற்றுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

குறிப்பிட்ட சிலர் திட்டமிட்ட வகையில் மேற்கொண்ட ஊழல் மோசடியினால் இந்த நட்டம் ஏற்பட்டதாக ஆரம்பக்கட்ட விசாரணைகளின் மூலம் தெரியவந்துள்ளது.

சுங்கத் திணைக்கள சட்ட திட்டங்களுக்கு புறம்பான வகையில் இவ் நிறுவனம் கொடுக்கல் வாங்கல்களை மேற்கொண் டுள்ளதாகவும் இதனால் 324.4. மில்லியன் ரூபா நட்டம் ஏற்பட்டதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

கொடுக்கல் வாங்கல் பற்றிய தரவுகளை புலனாய்வுப் பிரிவினருக்கு சமர்ப்பிக்குமாறு தனியார் வங்கியின் முகாமையாளர் ஒருவருக்கு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. (ஸ்ரீ-2)

# நல்லிணக்க ஆணைக்குழுவின் விசாரணைகள் குறித்த செய்தி சேகரிப்பு வரையறுக்கப்பட்டுள்ளது

## ஊடக அமைச்சர் தெரிவிப்பு

(கொழும்பு)

உண்மையைக் கண்டறியும் ஆணைக்குழுவின் விசாரணைகள் தொடர்பான செய்திகளை சேகரிப்பதற்கு சகலருக்கும் அனுமதியளிக்கப்பட மாட்டாது என ஊடக அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல தெரிவித்துள்ளார்.

பாராளுமன்ற அமர்வுகள் தொடர்பான செய்தி சேகரிப்பின் போதும் இவ்வாறான ஓர் நடைமுறை பின்பற்றப்பட்டு வருவதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.


உண்மையைக் கண்டறியும் ஆணைக்குழு யாழ்ப்பாணத்தில் தற்போது மேற்கொண்டு வரும் விசாரணைகள் தொடர்பாக செய்திகளை சேகரிப்பதற்கு பி.பி.சீ ஊடகத்திற்கு ஏன் அனுமதி மறுக்கப்பட்டது என எழுப்பப்பட்ட கேள்விக்கு பதிலளித்த போது அவர் இத்னை கூறினார்.

உண்மையைக் கண்டறியும் ஆணைக்குழுவின் நடவடிக்கைகள் குறித்த செய்தி சேகரிப்பு வரையறுக்கப்பட்டுள்ளதாகவும் பாராளுமன்ற செய்தி சேகரிப்பு தொடர்பிலும் இவ்வாறான கட்டுப் பாடுகள் விதிக்கப்படுவது வழமையானதென்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

நீதிமன்ற வழக்கு விசாரணை தொடர்பான செய்திகளை சேகரிக்கும் ஊடகவியலாளர்கள் நீதிமன்றிற்குள் அனுமதிக்கப்படுவதில்லை எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை செய்தி சேகரிப்பதற்கு பி.பி.சீ ஊட்கவியலாளருக்கு ஏன் அனுமதி மறுக்கப்பட்டது என்பதற்கான விளக்கத்தை அளிக்க வேண்டிய அவசியமில்லை என தேசிய பாதுகாப்புத் தொடர்பான ஊடக மத்திய நிலையத்தின் பணிப்பாளர் லக்ஸ்மன் ஹுலுகல்ல தெரிவித்துள்ளார்.

குறித்த ஊடகவியலாளருக்கு அனுமதி மறுக்கப்பட்டமைக்காக எந்த விதமான விளக்கத்தையும் வெளியிட வேண்டிய அவசியமில்லை என்றும் அவர் சுட்டிக்காட்டியுள் ளார்.



இதேவேளை உண்மையைக் கண்டறியும் ஆணைக்குழுவின் விசாரணைகள் தொடர்பில் செய்தி சேகரிக்கச் சென்ற ஊடக வியலானர்கள் இரண்டாவது தடவையாக திருப்பி அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகவும் கடந்த இரண்டு மாதங்களில் இரண்டாவது தடவையாக அரசாங்கம் தமது ஊடகத்திற்கு தடையை ஏற்படுத்தியதாகவும் பி.பி.சி. செய்தி வெளியிட்டுள்ளது. (ஸ்ரீ-2)

# அல்-ஜசீரா மீது இலங்கை சீற்றம்

(கொழும்பு)

இலங்கையின் நற்பெயருக்கு களங்கத்தை ஏற்படுத்த அல்-ஜசீரா தொலைக்காட்சி முயற்சிக்கிறது என்று அரசு குற்றம் சாட்டியுள்ளது.

யுத்தத்தின் இறுதி நாட்களில் இடம் பெற்றதாக கூறப்படும் மனிதப் படுகொலை களுக்கான ஆதாரங்களாக இருக்கலாம் என்று தெரிவித்து இத் தொலைக்காட்சி புகைப் படங்கள் சிலவற்றை கடந்த புதன்கிழமை வெளியிட்டிருந்தது.

இதையடுத்தே இலங்கைக்கு எதிரான அவதூறு பிரசாரத்தில் அல்-ஜசீரா ஈடுபட்டுள்ளது என பாதுகாப்பமைச்சு நேற்று முன்தினம் கண்டன அறிக்கை ஒன்று வெளியிட்டுள்ளது. (ஸ்ரீ)

# நாடு முழுவதும் 20 இலட்சம் மரக்கன்றுகளை நடுவதற்கு சுற்றாடல் அமைச்சு திட்டம்

நாட்டுக்கு கீர்த்தியை பெற்றுத்தந்த ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கு கௌரவம் வழங்கும் வகையில் நாடு பூராவும் 11 இலட்சம் மரக்கன்றுகளை நடதிட்டமிடப்பட்டுள்ளது.

இந்நிலையில் அரச நிறுவனங்கள், அரச சார்பற்ற நிறுவனங்கள் மற்றும் பொது மக்கள் உட்பட பெருமளவானவர்கள் இதற்கு அதிக ஒத்துழைப்பு வழங்குவதால் மரக்கன்று நடும் தொகை 20இலட்சத்தை தாண்டியுள்ளதாக சுற்றாடல் அமைச்சர் அநுரபிரியதர்சன யாப்பா கூறியுள்ளார்.

அரசாங்க தகவல் திணைக்களத்தில் கடந்த புதன்கிழமை நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டிலே அமைச்சர் மேற்கண்டவாறு கூறினார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

கடந்த காலங்களில் மேற்கொள்ளப்பட்ட மர நடுகை நிகழ்வுகள் போலன்றி நடத்தப்படும் ஒவ்வொரு மரத்தையும் போசித்து பாதுகாக்கவும் திட்டமிடப்பட்டுள்ளதோடு இந்தப் பொறுப்பு மாகாண முதலமைச்சர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

இது தவிர ஒவ்வொரு மரத்திற்கும் பிறப்புச் சான்றிதழ் ஒன்று வழங்கப்பட்டு மரத்தின் வளர்ச்சி குறித்தும் கவனிக்கப்படவுள்ளது. புவி வெப்பமடைவது குறித்து பரவலாகப் பேசப்படும் நிலையில் 11 இலட்சம் மரக்கன்றுகள் நடும் நடவடிக்கை எதிர்கால சந்ததிக்காகவே மேற்கொள்ளப்படுகிறது. இந்த முயற்சியை கின்னஸ் சாதனையாக பதிவு செய்யவும் நடவடிக்கை எடுக் கப்பட்டுள்ளது.

இது அரசியல் நோக்கத்திற்காக மேற்கொள்ளப்படும் நடவடிக்கையல்ல எனவே அரசியல் கட்சி பேதமின்றி சகலரும் இதற்கு ஒத்துழைப்பு வழங்குமாறு அழைப்பு விடுக்கிறேன்.

பலன் தரும் மரங்கள் வணிக ரீதியாக நடும் மரங்கள் அலங்கார மரங்கள் மட்டு மன்றி சகல விதமான மரங்களும் நாளை மறு தினம் சுப நேரத்தில் நடப்படும் எனக் கூறினார். (ஸ்ரீ-2)

# வெலிக்கடைச் சிறையில் பாதுகாப்பு கமராக்கள் பொருத்தப்படவுள்ளன

(கொழும்பு)

வெலிக்கடைச்சிறைச்சாலையில் பாதுகாப்பு கமராக்களை பொருத்துவதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளதகத் தெரிவிக்கப்படுகிறது.

கைதிகளின் நடவடிக்கைகள் குறித்து கண்காணிப்பு நடாத்தும் நோக்கில் இந்த பாதுகாப்பு கமராக்கள் பொருத்தப்படவுள்ளதாக சிறைச்சாலைதலைமையகம் அறிவித்துள் ளது.

கமராக்களை பொருத்துவது குறித்து விரைவில் பகிரங்க விலைமனுக் கோரல் விடப்பபடும் என சிரேஷ்ட சிறைச்சாலை அதிகாரியொருவர் தெரிவித்துள்ளதுடன் கண்காணிப்புக் கமராக்களை பொருத்துவதன் மூலம் சட்டவிரோத நடவடிக்கைகளை தடுக்க முடியும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை வெலிக்கடைச் சிறைச்சாலை மட்டுமன்றி நாட்டின் ஏனைய முக்கிய சிறைச்சாலைகளிலும் பாதுகாப்பு கமராக்கள் பொருத்துவது குறித்து ஆராயப்பட்டு வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (ஸ்ரீ-2)

# எதிர்க்கட்சி எம்.பி.க்கள் சிலர் சிறுபிள்ளைத்தனமாக செயற்படுகின்றனர்

## சபாநாயகர் குற்றச்சாட்டு

சில எதிர்க்கட்சி பாராளுமன்ற உறுப்பினர்கள் சிறுபிள்ளைத்தனமாக செயற்பட்டு வருவதாக சபாநாயகர் சமல் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றில் எப்படி நடந்து கொள்ள வேண்டும் என்பது குறித்து ஆளும் மற்றும் எதிர்க்கட்சி பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு விசேட பயிற்சி வழங்கப்படவுள்ளது.

விவாதங்களின் போது ஆளும் எதிர்க்கட்சி உறுப்பினர்கள் பொருத்தமற்ற வசனங்களைப் பயன்படுக்குவகாகவும் கூகாட்ட நிலையங்கள் தொடர்பான சட்டப் பிரேரணை பாராளுமன்றில் சமர்ப்பிக்கப்பட்ட தருணத்தில் ஆளும், எதிர்க்கட்சி பாராளுமன்ற உறுப்பினர்கள் கடுமையான விவாதத்தில் ஈடுபட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

பாராளுமன்ற பொதுக் களரியிலிருந்து அவை நடவடிக்கைகளை பாடசாலை மாணவர்கள் பார்வையிடுவதனால் பயன்படுத்தப்படும் மொழிப் பிரயோகம் நிதானமாக பயன்படுத்தப்பட வேண்டுமென்றும் அவர் வலியுறுக்கியுள்ளார். (ஸ்ரீ-2)

# ஆபாச இணையத்தளங்களில் தோன்றிய 3 பெண்கள் அடையாளம் காணப்பட்டனர்

(கொழும்பு)

ஆபாச இணைய தளங்களில் தோன்றிய மூன்று பெண்கள் அடையாளம் காணப்பட்டுள்ளதாகவும் அவர்களில் ஒரு பெண்ணைக் கைது செய்துள்ளதாகவும் பொலிஸார் அறிவித்துள்ளனர்.

கைது செய்யப்பட்ட பெண் நீதிமன்றில் ஆஜர்படுத்தியதன் பின்னர் பிணையில் விடுதலை செய்யப்பட்டுள்ளார்.

கையடக்கத் தொலைபேசிகளின் மூலம் பார்வையிடக்கூடிய ஆபாச இணைய தளங்களில் குறித்த பெண்கள் தோன்றியிருந்ததாக தெரிவிக்கப்படுகிறது.

அடையாளம் காணப்பட்ட ஏனைய இரண்டு பெண்களையும் கைது செய்வதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாகவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

ஆபாச இணைய தளங்களில் தோன்றிய 83 பேரின் புகைப்படங்கள் அண்மையில் ஊடகங்களில் வெளியிடப்பட்டதாகவும் இதன் அடிப்படையில் குறித்த பெண்கள் கைது செய்யப்பட்டதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதேவேளை ஆபாச இணைய தளங்களில் தோன்றிய நபர்களின் புகைப்படங்களை பிரசுரிக்குமாறு பொலிஸார் விடுத்த கோரிக்கையை ஊடகங்கள் நிராகரித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஸ்ரீ-2)







யாழ். மாநகரசபை எல்லைக்குட்பட்ட பகுதியில் டெங்குநோய் ஒழிப்பு தொடர்பான கலந்துரையாடல் நேற்று யாழ்.மாநகரசபை மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது. இந்நிகழ்வில் யாழ்.மாநகரசபை முதல்வர் திருமதி.யோகேஸ்வரி பற்குணராஜா, தலைமை பொலிஸ் அதிகாரி சமன் சிசேரா மற்றும் யாழ்.மாநகரசபை ஆணையாளர் மு.செ. சரவணபவ ஆகியோர் உரையாற்றுவதையும் நிகழ்வில் கலந்து கொண்டவர்களையும் படங்களில் காணலாம். (படங்கள்-எஸ் கரன் )

### 18ஆவது திருத்தச் சட்டமூலம்

# நீதிமன்றக் கட்டமைப்பின் சுயாதீன தன்மைக்கு மாபெரும் அச்சுறுத்தல்!

## முன்னாள் பிரதம நீதியரசர் தெரிவிப்பு



(கொழும்பு)

18ஆம் திருத்தச் சட்ட மூலம் நீதிமன்றக் கட்டமைப்பின் சுயாதீனத் தன்மைக்கு மாபெரும் அச்சுறுத்தலாகும் என முன்னாள் பிரதம நீதியரசர் சரத் என் சில்வா தெரிவித்துள்ளார்.

18ஆம் திருத்தச் சட்ட மூலத்தின் அடிப்படையில் ஜனாதிபதியின் கைகளில் சகல அதிகாரங்களும் மையப்படுத்தப்பட்டுள்ளதாகவும் நீதிமன்றக் கட்டமைப்பு மட்டுமன்றி ஏனைய சகல சுயாதீன ஆணைக்குழுக்களும் புதிய திருத்தச் சட்ட மூலத்தினால் பாதிப்பு ஏற்படும் என அவர் தெரிவித்துள்ளார்.

அரசாங்கத்தின் உள்ளூராட்சித் தேர்தல் திருத்தச் சட்ட மூலம் வரவேற்கப்பட வேண்டியதெனவும் புதிய தேர்தல் திருத்தங்களின் மூலம் தொகுதி வாரியாக சிறு சிறு அலகுகளை வேட்பாளர்கள் பிரதிநிதித்துவப் படுத்த முடியும் என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

சிறுபான்மை கட்சிகளும் தொகுதிவாரி முறைமையின் மூலம் நன்மை அடையும் எனவும் இந்தத் திட்டம் வெற்றியடைவதற்கு தாம் பூரண ஒத்துழைப்பு வழங்க உள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

ஜனநாயகத் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் சரத் பொன்சேகாவினால் வேறும் சர்வதேச நீதிமன்றங்களில் முறைப்பாடு செய்ய முடியாது என அவர் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கையின் உச்ச நீதிமன்றின் தீர்ப்பை வேறு எந்தவொரு நீதிமன்றக் கட்டமைப்பும் எதிர்க்க முடியாது எனவும் இலங்கையின் அரசியல் சாசனத்தின் அடிப்படையில் இந்த நிலைமை காணப்படுவதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

எனினும் சரத் பொன்சேகாவிற்குநியாயம் கிட்டவில்லை எனவும் இலங்கை நீதிமன்றக் கட்டமைப்பு சரத் பொன்சேகாவிற்கு நியாயத்தை பெற்றுக்கொடுக்கும் என தாம் எதிர்பார்ப்பதாக அவர் குறிப்பிட்டுள்ளார். (ஸ்ரீ-2)

# பயிற்சிப் பட்டறை

(கொழும்பு)

கரித்தாஸ் கியூடெக் நிறுவனமும் திருமறைக் கலாமன்றமும் இணைந்து நடத்தும் இலங்கையிலுள்ள இருபது கலைசார் மன்ற இணைப்பாளர் மற்றும் நிகழ்ச்சி அலுவலகர்களுக்கான செயற்றிட்ட முகாமைத்துவம் என்னும் பயிற்சிப் பட்டறை நேற்றும் இன்றும் நாளையும் காலை 9 மணி தொடக்கம் மாலை 7.30 வரை மட்டக்குளி வசாலியன் கல்வி சமூக சேவை மண்டபத்தில் வளவாளர் என்.எவ்.மௌறூப் தலைமையில் நடைபெற்று வருகிறது.

இதில் மன்னார்,திருகோணமலை, வவுனியா,புத்தளம்,கண்டி,மொனராகலை, பாணந்துறை, மட்டக்களப்பு, வன்னி, யாழ்ப்பாணம், இளவாலை, பொலனறுவை, அம்பாந்தோட்டை, அபிசாவளை மற்றும் ஹப்புத்தளை ஆகிய இடங்களைச் சேர்ந்தவர்கள் சமுகம் அளித்துள்ளதாக பயிற்சி ஒருங்கிணைப்பாளர் வள்ளுவன் சுவாமிநாதன் தெரிவித்தார். (ஸ்ரீ-51)

# ஜி-20 மாநாட்டில் பங்கேற்ற நாடுகளுக்கு இடையில் கருத்து வேறுபாடு

சர்வதேச பொருளாதார மந்தநிலையை சீராக்குவதற்கு நடவடிக்கை எடுப்பதில் ஜி-20 மாநாட்டில் பங்கேற்ற நாடுகளுக்கு இடையே கருத்துவேறுபாடு எழுந்துள்ளது. எனவே சியோல் மாநாட்டில் தீர்வு கிடைக்குமா என்ற கேள்விக்குறி எழுந்துள்ளது.

உலகளவில் ஏற்பட்டுள்ள பொருளாதார மந்தநிலை பல நாடுகளை திக்குமுக்காட செய்துள்ளது. இதற்கு உலக நாடுகள் ஒன்று கூடி தீர்வு காண வேண்டும் என கோரிக்கை எழுந்தது. இதற்கு சியோலில் நடக்கும் ஜி-20 மாநாட்டில் சுமுக தீர்வு காணப்படும் என எதிர்பார்க்கப்பட்டது.

உலக பொருளாதார மந்தநிலை அமெரிக்காவுக்கு பிரச்சினையை ஏற்படுத்தியுள்ளது. எனவே அமெரிக்காவுக்கு சாதகமான முறையில் அதே சமயம் உலகளவில் பொருளாதாரத்தில் சமச்சீராகக் கொண்டு வர ஜனாதிபதி ஒபாமா முயற்சிகளை மேற்கொண்டார். இதற்கு சீனா, ஜெர்மனி உட்பட பல நாடுகளுடன் பேச்சுவார்த்தை நடத்துவதில் ஆர்வம் காட்டினார்.

இம்மாநாட்டில் பங்கேற்க பிரதமர் மன்மோகன் சிங்குடன் வந்த திட்டக்கமிஷன் துணைத் தலைவர் மான்டேக் சிங் அலுவாலியாக் கூறுகையில், ஒவ்வொரு நாடுகளும் தனித்தனியாக பொருளாதார கொள்கைகளை வகுத்துள்ளன. இதை எப்படி ஒருங்கிணைப்பது என்ற கேள்வி எழுந்தது. இப்படிப் பட்ட சூழ்நிலையில் உலக பொருளாதாரத்தில் சீரான நிலையை தோற்றுவிப்பது கஷ்டமான காரியமாக உள்ளது. குறிப்பாக நாணயம் மற்றும் நடப்பு கணக்கு இருப்பு விடயத்தில் தான் வேறுபாடுகளே வந்தன. இது குறித்து விவாதிப்பதற்காக துணை நிதி அமைச்சர்கள் மற்றும் மூத்த அதிகாரிகள் மட்டத்தில் பேச்சுவார்த்தை நடந்தது.

இதிலும் முடிவு ஏற்படாமல் வேறுபாடு தொடர்ந்து கொண்டுள்ளது. இருப்பினும் கொள்கைகளை ஒருங்கிணைக்கும் விடயத்தில் ஒப்பந்தம் ஏற்படும் என நம்புகிறேன். இதற்கு சிறிது காலம் ஆகலாம். இவ்வாறு அலுவாலியா கூறினார். சீன நாணய மதிப்பை அதிகரிக்க வேண்டாம் என அமெரிக்கா வலியுறுத்துகிறது.

ஆனால் சீனா மறுத்துவிட்டது. இது தொடர்பாக ஜி-20 உறுப்பினர் நாடுகளுக்கு அமெரிக்கா எழுதிய கடிதத்தில் ஏற்றுமதி வர்த்தகத்தில் வேகமாக வளர்ந்து வரும் சீனா போன்ற நாடுகள் தங்கள் நாட்டு நாணயத்தின் மதிப்பை குறைத்துக் காட்டுவதை முடிவுக்கு கொண்டு வரவேண்டும் என கேட்டுக் கொண்டுள்ளது என்றார்.

இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங் கூறுகையில், சர்வதேச பொருளாதார சூழ்நிலை வெளிப்படையாகவும், நிலையாகவும் நெறிமுறைகளை கொண்டதாகவும் இருக்க வேண்டும். வர்த்தகம், முதலீட்டு வாய்ப்புகள், தொழில்நுட்ப பரிமாற்றல் மற்றும் வெளிச்சந்தை ஆகிய எதுவாக இருந்தாலும் தடையற்ற சவால்களை சந்திக்கக் கூடிய வகையில் இருக்க வேண்டும். வர்த்தக ஒத்துழைப்பில் தங்கள் நாட்டு நலனை மட்டுமே குறிக்கோளாகக் கொண்டு செயற்படும் தற்காப்பு கொள்கை குறித்த எச்சரிக்கை வேண்டும் என்று குறிப்பிட்டுள்ளார். (ஸ்ரீ-2)

# வெற்று எறிகணைத் தோட்டா மோசடியில் ஈடுபட்ட பொலிஸ் அதிகாரிக்கு விளக்கமறியல்

வெற்று எறிகணைத் தோட்டா மோசடியில் ஈடுபட்ட பொலிஸ் அதிகாரியை தொடர்ந்தும் விளக்கமறியலில் வைக்குமாறு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

இந்த மோசடியான கொடுக்கல்- வாங்கல்கள் தொடர்பில் பாதுகாப்பு அமைச்சு அதிகாரிகளிடமும் விசாரணை நடத்தப்பட உள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

குறித்த ஊழல் மோசடி தொடர்பில் பாதுகாப்பு அமைச்சு அதிகாரிகளிடம் வாக்கு மூலங்களை பதிவு செய்து கொள்ள நீதிமன்றம் அனுமதியளித்துள்ளது.

பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷ மற்றும் அவரது பாரியாரின் பெயரைப் பயன்படுத்தி இந்த மோசடி இடம் பெற்றுள்ளது.

இரண்டாயிரம் தொன் வெற்று எறிகணைத் தோட்டாக்கள் மோசடியான முறையில் விற்பனை செய்ய முயற்சிக்கப்பட்டுள்ளது.

ஜயலத் காமினி மெண்டிஸ் என்ற ஓய்வு பெற்ற உயர் பொலிஸ் அதிகாரியே இந்த மோசடியுடன் தொடர்புடைய சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டுள்ளதுடன் இவரை எதிர் வரும் 24 ஆம் திகதி வரையில் விளக்கமறியலில் வைத்து விசாரிக்குமாறு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. (ஸ்ரீ-2)




யாழ்.மாவட்டகிராம அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் மற்றும் நிகழ்ச்சி திட்ட உதவியாளர்கள் ஊடாக முன்னெடுக்கப்படும் வேலைத்திட்டம் தொடர்பான கலந்துரையாடல் நேற்று முன்தினம் யாழ். உள்ளூராட்சி திணைக்கள கேட்போர் கூடத்தில் நடைபெற்றது. இதில் வட மாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜி.ஏ.சந்திரசிறி, பிரதிபிரதம செயலாளர் எஸ்.இராசநாயகம், வடமாகாண கிராம அபிவிருத்தி பணிப்பாளர் எஸ். பெலிசியன் ஆகியோர் அமர்ந்திருப்பதையும் நிகழ்வில் கலந்து கொண்டவர்களையும் படங்களில் காணலாம். (படங்கள்-என்.குமார்)

தமிழர்களே! தமிழர்களே! நீங்கள் என்னைக் கல்லோடு கட்டி கடலில் போட்டாலும் நான் கவிழ்ந்துவிடமாட் டேன். கட்டுமரமாகத்தான் மிதப்பேன். நீங்கள் அதில் ஏறிப் பயணம் செய்யலாம். -கலைஞர் தொலைக்காட்சி

வலம்புரி
T.P. 021 567 1530
Web: www.valampurii.com
e-mail: editor@valampurii.com

## காகிதத்தில் கப்பல் செய்வார் கலைஞர் அதில் எங்களை ஏற்றுவார் சோனியா

1983 யூலைக் கலவரம் நடந்த போதெல்லாம் தமிழகத்தின் மாநிலச் செய்திகள், மாகாணச் செய்திகள், ஆகாசவாணி இவற்றுக்காக வானொலி முன் காத்திருக்கும் மரபொன்று எம்மிடம் இருந்ததை மறந்துவிட முடியாது.

இந்த மரபோடு இலண்டன் பி.பி.சி. தமிழோசையும் வெரித்தாஸும் இணைந்துகொண்டதை மறுப்பதற்கில்லை. இப்படியெல்லாம் வானொலிக்குமுன் குந்தியிருந்து எங்கள் தமிழகத் தலைவர்கள் என்ன சொல்கிறார்கள் என்பதை அறியும் ஆவல் மிகுதியாலாகும்.

கலைஞர் கருணாநிதியின் குரலைக்கேட்டாலே மெய் சிலிர்க்கும். அவரின் பேச்சு ஈழத் தமிழனின் குருதியில் 'அயன்' சேர்க்கும்.

அட! எங்கள் ஐயா கலைஞர் இருக்கிறார் என்ற நம்பிக்கை தரும்.

ஒருமுறை அவரின் பேச்சில் ஈழத்தமிழர்களுக்கு ஆபத்தென்றால் காகமாய் பறந்தேனும் ஈழம் சென்று அவர்களைக் காப்பாற்றுவோம் என்று கூறினார்.

அவரின் கூற்றினால் காகங்களும் தாம் பெருமை பெற்றதாக எண்ணின எனலாம்.

1983இல் எங்களுக்காக பேசிய கலைஞர் இருபத்தேழு வருடங்கள் கடந்து இப்போது பேச்சை அடக்கி கடிதம் எழுதுகிறார்.

ஆம், சோனியா காந்திக்கு எழுதும் கடிதங்களே அவை. கலைஞரின் கடிதத்திற்கு சோனியா அம்மையார் 'ஈழத்தமிழர்களின் விடயத்தை மத்திய அரசு கவனித்துக் கொண்டிருக்கிறது' எனப் பதில் தருவார்.

சிலகாலம் கடக்கும். கால ஓட்டத்தில் எம்மவர்கள் இந்தியா செல்லும் வேளையில் கலைஞரைச் சந்திப்பர். அந்தச் சந்திப்புக்குப் பின்பும் ஒரு கடிதம் எழுதப்படும். அதற்கும் சோனியா அம்மையார் பதில் கடிதம் எழுதுவார்.

'ஈழத்தமிழர்களின் விடயத்தில் மத்திய அரசு உன்னிப்பாக கவனித்து வருகிறது' என அந்தப் பதில் இருக்கும்.

ஓ! கலைஞரின் முதற்கடிதத்திற்கு மத்திய அரசு கவனிக்கிறது எனப் பதில். இரண்டாவது கடிதத்திற்கு உன்னிப்பாகக் கவனிக்கிறது.

ஆக! ஏதோ நடக்கப் போகிறது என்ற நப்பாசையில் எங்கள் ஊடகங்களும் அதனை ஊதிப் பெருப்பித்து செய்தியாக்கிக்கொள்ள,

பேதை மனம்மாறா எங்கள் மக்கள் இந்தியா ஏதோ செய்யப்போவதாக நினைத்துக்கொள்வர்.

கடிதம் எழுதுவதில் கைதேர்ந்த கலைஞர் மீண்டும் அம்மாவுக்கு கடிதம் அனுப்புவார். அதற்குப் பதில் 'மிகவும் உன்னிப்பாக அவதானிக்கின்றோம்' என்பதாக இருக்கும்.

கடவுளே! 1983 யூலையில் தொடங்கி புதுமாத்தளன்- நந்திக் கடலென எல்லாம் இழந்து, கடந்து முட்கம்பி வேலிதாண்டி சீனரும் பாகிஸ்தானியரும் இலங்கைக்கு ஊடுருவி இந்திய உயர்ஸ்தானிகர் யாழ்ப்பாணத்தில் குடியிருக்க முன்னதாக நாவற்குழியில் குடியேற்றமும் நடந்து முடியும் போது,

சோனியா அம்மையார் எதை உன்னிப்பாக அவதானிக்கிறார். அட! எல்லாம் பராசக்தி படம் போல கதைவசனம் அவ்வளவுதான்.

கலைஞர் காகிதத்தில் கப்பல் செய்ய, சோனியா அதில் ஈழத்தமிழரை ஏற்றி கரை சேர்ப்பாராம் இது நடக்கின்ற காரியமோ?

# ஆயிரம் பாடசாலை அபிவிருத்தித் திட்டத்தில் இணைக்கப்பட்ட மேலும் சில பாடசாலைகள்

மகிந்த சிந்தனையில் நாட்டில் ஆயிரம் பாடசாலைகள் அபிவிருத்திசெய்யும் கூட்டத்தில் வடமாகாணத்தில் தெரிவு செய்யப்பட்ட 90 பாடசாலைகளில் மன்னார், முல்லைத்தீவு, வவுனியா மாவட்டப் பாடசாலைகளின் விபரம் வருமாறு,

**மன்னார் மாவட்டம்**

மன்/பற்றிமா ம.மகாவித்தி, மன்/புதுக்குடியிருப்பு அ.த.க.பாடசாலை, மன்/தலைமன்னார் அ.த.க. பாடசாலை, மன்/அல்-மீனா மகா.வித்தி, மன்/முசலி. மகா.வித்தி, மன்/அரிப்பு.றோ.க.த.க. பாடசாலை, மன்/நானாட்டான் மகா. வித்தி, மன்/பரிகாரக்கண்டல் அ.த.க. பாடசாலை.

மன்/அடம்பன் ம.மகாவித்தி, மன்/இலுப்பைக்கடவை அ.த.க.பாடசாலை, மன்/பெரியமடு மகாவித்தி, மன்/இரணை இலுப்பைக் குளம் அ.த.க. பாடசாலை, மன்/பெரிய பண்டிவிரிச்சான் மகாவித்தி.

**முல்லைத்தீவு மாவட்டம்**

முல்/முல்லைத்தீவு மகாவித்தி, முல்/வித்தியானந்தா கல்லூரி, முல்/செம்மலை மகாவித்தி, முல்/புதுக்குடியிருப்பு மத்தியகல்லூரி, முல்/விசுவமடு மகாவித்தி, முல்/உடையார்கட்டு மகாவித்தி, முல்/பாண்டியன் குளம் மகாவித்தி,முல்/ மல்லாவி மத்தியகல்லூரி, முல்/யோகபுரம் மகா வித்தி, முல்/மாங்குளம் மகாவித்தி, முல்/முத்தையன் கட்டு றோ.க.த.க பாடசாலை.

**வவுனியா மாவட்டம்**

வவு/நெடுங்கேணி மகாவித்தி, வவு/புளியங்குளம் இந்துக்கல்லூரி, வவு/கனகராயன் குளம் மகாவித்தி, வவு/ஓமந்தை மத்தியகல்லூரி, வவு/கணேஷாவித்தி, வவு/புதுக்குளம் மகாவித்தி.

வவு/ மடுக்கந்தை மகாவித்தி, வவு/பரகும்பா மகாவித்தி, வவு/பூவரசம் குளம் மகாவித்தி, வவு/பெரியகோமரசன்குளம் மகாவித்தி, வவு/திருஞானசம்பந்த வித்தி, வவு/வீரபுரம் மணிவாசகர் வித்தி, வவு/செட்டிகுளம் மகாவித்தி, வவு/அல்இக்பால் வித்தி, வவு/பாவற்குளம் கணேஷ்வரா மகாவித்தி. (ச-2)

## மோட்டார் சைக்கிள் விபத்து குடும்பஸ்தர் படுகாயம்

(யாழ்ப்பாணம்)

கனரக வாகனத்துடன் மோட்டார் சைக்கிள் மோதி விபத்துக்குள்ளானதில் குடும்பஸ்தர் ஒருவர் படுகாயமடைந்தார்.

இச்சம்பவம் நேற்றுக்காலை 8.30 மணியளவில் மண்கும்பான் பிள்ளையார் கோவிலுக்கு அருகில் இடம்பெற்றுள்ளது.

இதில் அளவெட்டியைச் சேர்ந்த கனகசபை பரராஜசிங்கம் (வயது 55) என்பவரே படுகாயமடைந்தவராவார். படுகாயமடைந்த அவர் யாழ்.போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார். (ச-6)

## மூலிகைத்தோட்ட திறப்புவிழா

(யாழ்ப்பாணம்)

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் இரண்டாவது பதவிப்பிரமாணத்தை முன்னிட்டு யாழ்.பிராந்திய சுகாதாரப் பணிமனையின் நவக்கிரி மூலிகைத் தோட்ட திறப்புவிழாவும் மரநாட்டு வைபவமும் நாளை மறுநாள் திங்கட்கிழமை காலை 9.00 மணிக்கு நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக பாரம்பரிய கைத்தொழில் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, வடமாகாண ஆளுநர் ஜீ.ஏ.சந்திரசிறி ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளனர். (ச-7)

## ஆக்க இலக்கிய நூல்களின் கண்காட்சியும் விற்பனையும்

(யாழ்ப்பாணம்)

ஆக்க இலக்கிய படைப்பாளிகளின் மறுபாதியும் புத்தகக் கூடமும் இணைந்து நடத்தும் ஆக்க இலக்கிய நூல்களின் கண்காட்சியும் விற்பனையும் இன்று சனிக்கிழமையும் நாளை ஞாயிற்றுக்கிழமையும் நாவலர் கலாசார மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இதில் மறுபாதி முதலாம் ஆண்டுச் சிறப்பிதழ் வெளியீடு இன்று மாலை மூன்றுமணிக்கும், மலையகப் படைப்பாளி எஸ்.பி.பாலமுருகனின் கலந்துரையாடல் நாளை ஞாயிற்றுக்கிழமை மாலை மூன்றுமணிக்கும் இடம்பெறவுள்ளது.

எனவே இக்கண்காட்சியில் ஆர்வமுள்ள அனைவரும் கலந்துகொள்ளுமாறு கேட்கப்படுகிறார்கள். (ச-5)

## மட்டக்களப்பு மாநகரசபையின் உறுப்பினர்கள் இருவர் மீது தாக்குதல்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாநகர சபையின் உறுப்பினர்கள் இருவர் நேற்று மாலை தாக்குதலுக்கு உள்ளாகியுள்ளனர். 8 வாகனங்களில் சென்ற குண்டர்கள் மாநகரசபை உறுப்பினர்களைத் தாக்கியதாக மட்டக்களப்பிலிருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

மட்டக்களப்பு மாநகர சபையில் ஈரோஸ் சார்பாகத் தெரிவான பிரபா மற்றும் சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் பிரதிநிதியான அருமைலிங்கம் ஆகியோரே அவ்வாறு தாக்குதலுக்குள்ளாகியுள்ளனர்.

இருவரும் மட்டக்களப்பு மாநகர சபை மேயர் சிவகீதாவின் வீட்டில் நடைபெற்ற கலந்துரையாடல் ஒன்றில் கலந்து கொண்டிருந்தபோதே தாக்கப்பட்டுள்ளனர்.

தாக்குதலின் காரணமாக படுகாயமடைந்த இருவரும் மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

இவர்கள் தற்போது ஓரளவு நிலைமை தேறியுள்ளதாகவும் மருத்துவமனைவட்டாரங்கள் தெரிவிக்கின்றன. (ச-5)

## டெங்குநோய் பரவுவதைத் தடுக்க பொதுமக்களின் ஆதரவு வேண்டும்

### யாழ்.பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி அறிவுறுத்தல்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்தில் டெங்கு ஒழிப்ப நடவடிக்கையானது யாழ்.மாநகரசபை பிராந்திய சுகாதாரப்பிரிவு மற்றும் யாழ். பொலிஸ் பிரிவினராலும் முன்னெடுக்கப்பட்டு வருகிறது. எனினும் மக்களின் ஒத்துழைப்பு இல்லாமல் அந்நடவடிக்கைகளை தொடர்ந்து முன்னெடுக்க முடியாமல் தடைப்பட்டுள்ளது என யாழ்.பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி சமன் சிகேரா கவலை வெளியிட்டுள்ளார்.

டெங்குநோய் பரவுவதைத் தடுப்பதற்கு மக்களின் ஆதரவு மிக அவசியம் எனவும் அவர் சுட்டிக்காட்டினார்.

யாழ்.மாநகரசபையில் நேற்று நடைபெற்ற டெங்கு நோய் பரவுவதைத் தடுப்பதற்கான விசேட கலந்துரையாடலில் உரையாற்றுகையில், யாழ்.பொலிஸ் நிலைய தலைமைப் பொலிஸ் அதிகாரி சமன் சிகேரா மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் உரையாற்றுகையில், யாழ்.நகரை சுத்தமாக வைத்திருக்க வேண்டியது எமது கடமையாகும். ஒவ்வொரு பொதுமகனும் நகர் மீது பற்றுடையவர்களாக இருத்தல்வேண்டும்.

இலங்கையின் பொலிஸ்மா அதிபர் மகிந்த பாலசூரியதெரிவித்ததற்கமைய யாழ்.மாவட்டத்தில் டெங்கு ஒழிப்பு நடவடிக்கைக்காக 15 பேர் கொண்ட பொலிஸ் குழு உருவாக்கப்பட்டு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

இவைதவிர யாழ்.நகரில் அண்மையில் நாவாந்துறைப் பகுதயில் 15 பேர் டெங்கு நோயாளர்களாக இனங்காணப்பட்டுள்ளனர் என சுகாதார அதிகாரிகளால் எமக்குத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இப்பகுதயில் நீண்ட நாட்களாக சில இடங்களில் நீர் தேங்கிநிற்பதால் இத்தகைய நிலை ஏற்பட்டுள்ளது.

இதனை மிக விரைவில் சீர் செய்து இத்தகைய நோய்கள் பரவுவதைத் தடுக்க எமது பொலிஸ் பிரிவினால் போதியளவு ஒத்துழைப்புக்கள் வழங்கப்படும் என மேலும் அவர் தெரிவித்தார். (எ-2-6)

## சுவாமி விவேகானந்தரின் சிக்காக்கோ சொற்பொழிவுகள்



நான் சிறுவனாயிருந்த போது, கிறிஸ்தவ பாதிரி ஒருவர், ஒரு கூட்டத்தில் பிரசாரம் செய்து கொண்டிருந்த நிகழ்ச்சி என் நினைவிற்கு வருகிறது. பல சுவையான செய்திகளைச் சொல்லிக்கொண்டே வந்த அவர் இடையில், 'நான் உங்கள் விக்கிரகத்தை என் கைத்தடியால் ஓங்கி அடித்தால் அது என்னை என்ன செய்துவிடும்?' என்று கேட்டார். அதனைக் கேட்டுக்கொண்டிருந்தவர்களுள் ஒருவர் சற்றும் தாமதியாமல், 'உங்கள் ஆண்டவரை நான் ஏசினால் அவர் என்னை என்ன செய்வார்?' என்று கேட்டார். 'இறந்ததும் நீ தண்டிக்கப்படுவாய்' என்று பதிலளித்தார் பாதிரி. 'அப்படியே எங்கள் விக்கிரகமும் நீர் இறந்ததும் உம்மைத் தண்டிக்கும்' என்று திருப்பிச் சொன்னார் அந்த இந்து!

# மெராபி எரிமலை சீற்றத்தால் பலியானோர் 191 ஆக உயர்வு



(ஜகார்த்தா)

இந்தோனேசியாவில்மெராபி எரிமலை வெடித்துச் சிதறியதில் பாதிக்கப்பட்டு உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 191 ஆக அதிகரித்துள்ளது.

கடந்த மாதத்தில் இருந்து தொடர்ந்து ஜகார்த்தாவில் உள்ள மெராபி எரிமலை சீற்றத்துடன் காணப்படுகிறது. சில நாட்களாக எரிமலை சீற்றம் குறைந்து காணப்பட்டது. இந்நிலையில் நேற்று முன்தினம் முதல் சீற்றம் மீண்டும் அதிகரிக்கத் தொடங்கியுள்ளது. அதனால் மெராபி மலையை சுற்றி 2.5 கி.மீ. தொலைவில் கரும்புகை மற்றும் சாம்பல் காற்றில் கலந்து விட்டதுடன், வெப்ப சலனமும் அதிகமாக இருக்கிறது.

இந்தச் சூழல் விமான போக்குவரத்துக்கு பாதிப்பை உண்டாக்கும் என்பதால், பெரும்பான்மையான சர்வதேச விமான சேவைகள் இரத்துச்செய்யப்பட்டுள்ளன. அத்துடன் ஜகார்த்தா அடிசுசிப்டோ சர்வதேச விமானநிலையம் மூடப்பட்டுள்ளது. மேலும் மெராபியில் இருந்து 20 கி.மீ. தூரம் வரை வசிப்பவர்கள் பாதுகாப்பு கருதி வெளியேற்றப்பட்டுள்ளனர். அவ்வாறு வெளியேற்றப்பட்ட 3.4 இலட்சம் மக்கள் அவசர கால பாதுகாப்பு முகாம்களில் தங்க வைக்கப்பட்டு அவர்களுக்குத் தேவையான அடிப்படை வசதிகள் செய்து கொடுக்கப்பட்டுள்ளன.

மெராபி எரிமலை சீற்றத்தில் சிக்கி இதுவரை 191 பேர் இறந்துள்ளனர். ஜகார்த்தா நகரில் 25 கிலோமீற்றர் சுற்றளவில் புகை, சாம்பல் பரவியுள்ளதால் தற்போது சுற்றுலாவும் பாதித்துள்ளது. (ஸ்ரீ)

# பாக். புலனாய்வுப்பிரிவு தலைமையகத்தில் நடத்தப்பட்ட தாக்குதலில் 20 பேர் பலி;



பாகிஸ்தானின் புலனாய்வுப் பிரிவு தலைமையகத்தின் மீது நடத்தப்பட்ட குண்டுத் தாக்குதலில் 20 பேர் கொல்லப்பட்டுள்ளனர்.

பாகிஸ்தானின் முக்கிய நகரங்களின் ஒன்றான கராச்சியில் அமைந்துள்ள புலனாய்வுப் பிரிவு தலைமையகத்தை இலக்கு வைத்து இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

இதன் போது தீவிரவாதிகளுடன் பொலிசார் கடுமையான துப்பாக்கிச் சமரில் ஈடுபட்டதாகக் குறிப்பிடப்படுகிறது. ஆயுததாரிகள் புலனாய்வுப் பிரிவுத் தலை மையகத்திற்குள் ஊடுருவியதுடன் வெடிபொருட்கள் நிரப்பப்பட்ட ட்ரக் ஒன்றை வெடிக்கச் செய்துள்ளனர்.

இந்தத் தாக்குதல் சம்பவத்தினால் புலாய்வுப் பிரிவு தலைமையகம் முற்று முழுதாக சேதமடைந்துள்ளது. குண்டுத் தாக்குதல் இடம்பெற்ற பிரதேசத்தில் நாற்பது அடி ஆழமான குழியொன்று ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. உயிரிழந்தவர்களின் ஐந்து பொலிஸ் உத்தியோகத்தர்களும் அடங்குவதாகக் குறிப்பிடப்படுகிறது. உயர் புலனாய்வுப் பிரிவு அதிகாரிகளை இலக்கு வைத்து இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. லக்ஸர் ஈ ஜான்கவி அமைப்பைச் சேர்ந்த முக்கிய தீவிரவாதிகள் சிலர் கைது செய்யப்பட்டு சில தினங்களின் பின்னர் இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. (ஸ்ரீ)

# ஹஜ் பயணத்தின் போது சவுதிஅரேபியா மீது தாக்குதல் நடத்த அல்கொய்தா திட்டம்

(ரியாத்)

சவுதி அரேபியாவில் உள்ள புனித நகரங்களான மக்கா, மதீனா ஆகியவற்றுக்கு இலட்சக்கணக்கான முஸ்லிம்கள் உலகம் முழுவதும் இருந்து ஹஜ் புனிதப் பயணமாக ஆண்டுதோறும் செல்வது உண்டு.

இந்த புனிதப்பயணம் நாளை மறுதினம் திங்கட்கிழமை தொடங்குகிறது. அடுத்த வாரம் இந்த பயணத்துக்காக உலக நாடுகளில் இருந்து முஸ்லிம்கள் இந்த நாட்டுக்கு வரும் போது அல்கொய்தா தாக்குதல் நடத்த திட்டமிட்டு இருப்பதாக அந்த நாட்டுக்கு தகவல் கிடைத்து உள்ளது.

இதைத்தொடர்ந்து அந்த நாட்டில் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டு உள்ளது.

இது தொடர்பாக இளவரசர் நயெப் கூறுகையில்,

எந்த தாக்குதலையும் முறியடிக்கும் வல்லமை சவுதி அரேபியாவுக்கு இருக்கிறது என்று குறிப்பிட்டார். அவர்மேலும் கூறுகையில்,

ஹஜ் புனிதப் பயணம் வருவபர்களின் பாதுகாப்புக்கு எந்த குந்தகமும் ஏற்படாமல் பாதுகாப்பு அதிகாரிகள் நடவடிக்கை எடுப்பார்கள். மோசமான விளைவு எதுவும் நடக்க இறைவன் விடமாட்டார் என்று குறிப்பிட்டார். (ஸ்ரீ)






ஜி-20 நாடுகளில் உச்சி மாநாடு தென்கொரியாவின் தலைநகர் சியோலில் நடைபெற்று வருகிறது. இதில் அமெரிக்கா, கனடா, பிரிட்டன், ரஷ்யா, தென்னாபிரிக்கா உள்ளிட்ட உலகத்தலைவர்கள் ஒன்று கூடி விவாதிப்பதைப் படத்தில் காணலாம்.

# சீனாவுடன் முரண்பாடா? மறுக்கிறார் ஒபாமா

அமெரிக்கா -சீனா இடையே பொருளாதார விடயங்கள் தொடர்பான பேச்சு வார்த்தையில் நல்ல முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது. எவ்வித முரண்பாடும் இல்லை என்று அமெரிக்க அதிபர் ஒபாமா தெரிவித்தார்.

தென்கொரிய தலைநகர் சியோலில் நடக்கும் ஜி-20 மாநாட்டில் பங்கேற்றுள்ள அமெரிக்க அதிபர் ஒபாமா சீன அதிபர் ஹூ ஜிண்டாவோவை சந்தித்துப் பேசினார். இச்சந்திப்பு முக்கியத்துவம் வாய்ந்ததாகக் கருதப்படுகிறது. அமெரிக்காவுக்கு சீனப் பொருட்களை ஏற்றுமதி செய்வதற்கும் வேலை வாய்ப்பை பெறவும் சீனா பகீரத பிரயத்தனம் செய்கிறது.

இதற்காக அமெரிக்க டொலரை விட சீனாவின் யுவான் மதிப்பு குறைந்து இருப்பது போல் செயற்கைத் தனமாகக் காட்டி அமெரிக்காவிடம் ஏற்றுமதி ஓடர்களைப் பெறப் பார்க்கிறது என குற்றச்சாட்டு எழுந்துள்ளது.

அமெரிக்க அதிபராக ஒபாமா பதவியேற்றபின் சீன அதிபருடன் ஆறு முறை பேசியுள்ளார். இந்நிலையில் நேற்று முன்தினம் ஏழாவது முறையாக சந்தித்துப் பேசியுள்ளார். உலகளவில் ஏற்பட்டுள்ள பொருளாதார பின்னடைவை சரி செய்யவும் அமெரிக்காவில் ஏற்பட்டுள்ள பொருளாதார பற்றாக்குறையை சரி செய்வதற்கும்'ஜி-20 மாநாட்டில் பங் கேற்கும் பிற நாட்டுத் தலைவர்களுடன் சந்தித்துப் பேச ஒபாமா திட்டமிட்டிருந்தார். இருப் பினும் சீன அதிபருடன் சந்தித்துப் பேச அதிக முக்கியத்துவம் கொடுத்தார். (ஸ்ரீ-2)

# அமெரிக்க இராணுவத்தில் தலைப்பாகையுடன் பணிபுரியும் முதல் சீக்கிய இளைஞர்

(வோஷிங்டன்)


அமெரிக்க இராணுவத்தில் பணிபுரியும் வீரர்கள் தங்களின் மத அடையாளங்களை பயன்படுத்தக்கூடாது என்ற சட்டம் உள்ளது. ஆனால் அதில் சீக்கியர்களுக்கு மட்டும் தற்போது விதிவிலக்கு அளிக்கப்பட்டுள்ளது. அவர்கள் மட்டும் தங்களின் மத அடையாளமான தலைப்பாகை அணியவும் தாடிவளர்த்துக்கொள்ளவும் அனுமதி அளிக்கப்பட்டுள்ளது.

அதன்படி மேற்கண்ட மத அடையாளங்களுடன் சீக்கிய இளைஞர் ஒருவர் பணிபுரிய அனுமதிக்கப்பட்டுள்ளார். அவரது பெயர் சிம்ரன் பிரீத் சிங் லம்கா (26). இந்திய வம்சாவழியை சேர்ந்த அமெரிக்கர் கடந்த 2009 ஆம் ஆண்டு இராணுவத்தில் சேர்ந்தார்.

பயிற்சியின் போது இவர் தனது மத அடையாளங்களுடன் பங்கேற்றார். இதற்கு கடந்த மார்ச் மாதம் எதிர்ப்புத் தெரிவிக்கப்பட்டது. இதை எதிர்த்து அவர் நீதிமன்றில் வழக்குத் தொடர்ந்தார். வழக்கை விசாரித்த நீதிமன்றம் அவர் சீக்கிய மத அடையாளமான தலைப்பாகை அணியவும் தாடி வைத்துக்கொள்ளவும் அனுமதி அளித்தது.

இதைத் தொடர்ந்து அவர் த்னது பயிற்சியை முழுமையாக முடித்து அமெரிக்க இராணுவத்தில் பணிபுரிகின்றார். கடந்த 20 ஆண்டுகளில் மத அடையாளத்துடன் அமெரிக்க இராணுவத்தில் பணிபுரியும் முதல் சீக்கியர் என்ற பெருமையை இவர் பெற்றுள்ளார்.

சீக்கியர்கள் மீதுள்ள உண்மை மற்றும் நம்பிக்கை அடிப்படையில் தனக்கு இந்த வாய்ப்பு கிடைத்துள்ளதாக லம்பா தெரிவித்துள்ளார். (ஸ்ரீ)



ஈராக்கில் ஆட்சியில் பங்கு ஏற்படும் சூழ்நிலை உருவாகியுள்ளதால் முன்னாள் பிரதமர் அயோத் அலாவி (இடது) தலைமையில் குழு தற்போதைய பிரதமர் நௌரி அல்-மாலிக்கை (வலது) பக்தாத்தில் சந்தித்து பேசியுள்ளது. இதனால் எட்டு மாத அரசியல் சிக்கலுக்கு ஈராக்கில் தீர்வு ஏற்பட்டுள்ளது.

# உலக நீரிழிவு தினத்தையொட்டி மாபெரும் சைக்கிள் ஓட்டப்போட்டி

## யாழ்.போதனா வைத்தியசாலை நீரிழிவுப் பிரிவு ஏற்பாடு

(யாழ்ப்பாணம்)

யாழ். போதனா வைத்தியசாலையின் நீரிழிவு சிகிச்சைப் பிரிவினரால். உலக நீரிழிவு தினத்தை முன்னிட்டு நாளையதினம் மாபெரும் சைக்கிள் ஓட்டப் போட்டி நடத்தப்படவுள்ளது.

ஆண்கள் பிரிவுக்கான போட்டிகள் நல்லூர், சண்டிலிப்பாய், கோப்பாய், அளவெட்டி, சாவகச் சேரி, பருத்தித்துறை, அல்லைப்பிட்டி ஆகிய இடங்களில் இடம் பெறும்.

இதற்கான பதிவுகளை நல்லூர் பிரதேசத்தைச் சேர்ந்தவர்கள் கிராம சேவையாளர் அலுவலகங்களிலும் சண்டிலிப்பாய்ப் பிரதேசத்தைச் சேர்ந்தவர்கள். சந்திரன் பான்சி கவுஸ், அன்ரன் கல்விநிலையம், கரைப்பிரான் பிள்ளையார் கோவிலிலும்; கோப்பாய் பிரதேசத்தைச் சேர்ந்தவர்கள் புத்தூர் சூர்யா பார்மசியிலும், கலைமதி சனசமூகநிலையத்திலும், நீர்வேலி வடக்கு மக்கள் வைத்திய சாலையிலும்;

அளவெட்டிப பிரதேசத்தைச் சேர்ந்தவர்கள் அளவெட்டி மகாஜன சபையிலும், கஜமுகன் பல்பொருள் விற்பனை நிலையத்திலும், சாவகச்சேரி பிரதேசத்தைச் சேர்ந்தவர்கள் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையிலும் பருத்தித்துறையைச் சேர்ந்தவர்கள் கற்கோவளம் வாசகர் நிலையத்திலும் நெல்லியடி கஜமுகன் பார்மசியிலும் பருத்தித்துறை றோயல் மெடிக்கல் கிளினிக்கிலும் அல்லைப்பிட்டியைச் சேர்ந்தவர்கள் அல்லைப்பிட்டி பராசக்தி வித்தியாலயத்திலும்.

இன்று மாலை 4.00 மணிக்கு முன்னதாக மேற்கொள்ளுமாறும் கேட்கப்பட்டுள்ளது.

நாளை ஞாயிற்றுக் கிழமை நடைபெறும் இப்போட்டிக்கான பரிசளிப்பு அன்றைய தினம் காலை 8.45 மணிக்கு நடைபெறவுள்ளது.

ஆண்கள் பிரிவிற்கான பரிசளிப்பு விழா நல்லூர் திவ்ய ஜீவன சங்க மண்டபத்திலும். பெண்கள் பிரிவிற்கான பரிசளிப்பு நிகழ்வு திருநெல்வேலி இந்து வாலிபர்சங்கத்திலும் இடம் பெறும்.

இதேவேளை இந்நிகழ்வில் நீரிழிவு சம்பந்தமான கருத்தரங்கும் நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (ந-7)

# மைக்கின்தோஸ் சிறப்பான சதம்; நியூசிலாந்து வலுவான ஆரம்பம்

(ஹைதராபாத்)

மைக்கின்தோஸின் சிறப்பான சதத்தின் மூலம் நியூசிலாந்து அணி நேற்றைய முதல் நாள் ஆட்டநேர முடிபில் முதலாவது இன்னிங்ஸில் 4 விக்கெட்டுக்களை இழந்து 258 ஓட்டங்களை எடுத்தது.

இந்தியாவுக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள நியூசிலாந்து அணி 3 டெஸ்ட், 5 ஒரு நாள் போட்டிகள் கொண்ட தொடரில் விளையாடுகின்றது.

இதில் முதலாவது டெஸ்ட் சமனிலையான நிலையில் இரண்டாவது டெஸ்ட் நேற்று ஹைதராபாத்தில் ஆரம்பமானது.

இப்போட்டியில் நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்று முதலில் துடுப்பெடுத்தாடிய நியூசிலாந்து அணி 04 ஓட்டங்களை எடுத்த போது மக்குலம் 04 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்க அதிர்ச்சி அடைந்தது.

எனினும் இரண்டாவது விக்கெட்டுக்காக இணைந்த மைக்கின்தோஸ்- குப்தில் ஜோடி பலமான இணைப்பாட்டத்தை வழங்கினர்.

இந்த ஜோடி இரண்டாவது விக்கெட்டுக்காக 147 ஓட்டங்களை இணைப்பாட்டமாக எடுத்தபோது குப்தில் 160 பந்துகளில் (09 பவுண்டரிகள், ஒரு சிக்ஸர் உட்பட) 85 ஓட்டங்களை எடுத்து ஆட்டமிழந்தார்.

அடுத்துவந்த ரோஸ் ரெய்லர் 24 ஓட்டங்களை எடுத்து ஆட்டமிழந்து நிலைத்து நின்று ஆடத்தவறினார்.

அடுத்து ரைடர் களமிறங்க மறுமுனையில் ஆரம்பத்துடுப்பாட்டவீரர் மைக்கின் தோஸ் 238 பந்துகளில் சதமடித்து அசத்த நியூசிலாந்து அணி 258 ஓட்டங்களைத் தொட்டது.

எனினும் மைக்கின்தோஸ் 254 பந்துகளில் (10 பவுண்டரிகள், ஒரு சிக்ஸர் உட்பட) 102 ஓட்டங்களை எடுத்து ஆட்டமிழந்தார்.

அடுத்து ஹோப்கிங்ஸ் களமிறங்க நேற்றைய முதல்நாள் ஆட்டநேர முடிபில் நியூசிலாந்து அணி முதலாவது இன்னிங்ஸில் 4 விக்கெட்டுக்களையிழந்து 258 ஓட்டங்களை எடுத்தது.

இதில் ரைடர் 22 ஓட்டங்களையும் ஹோப்கிங்ஸ் தனது கணக்கை ஆரம்பிக்காத நிலையில் ஆட்டமிழக்காமல் களத்திலிருந்தார்.

பந்துவீச்சில் சகிர்கான் 02 விக்கெட்டுக்களையும் சிறிசாந், பிரஜன் ஓஜா ஆகியோர் தலா ஒரு விக்கெட்டையும் சாய்த்தனர்.

இப்போட்டியின் இரண்டாம் நாள் ஆட்டம் இன்றாகும்.

## 512 ஆவது படையினரால் அழைத்துச்செல்லப்பட்ட

# ‘எனது மகனை விடுவிக்காவிடின் தற்கொலை செய்துகொள்வேன்’

## சாட்சியத்தில் தாயார் கதறல்

(யாழ்ப்பாணம்)

512 ஆவது படையினரால் 2007 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 23 ஆம் திக்தி கடத்திச் செல்லப்பட்ட எனது மகன் நிர்மலநாதன் மயூரனை மீட்டெடுத்துத்தாருங்கள் என கற்றுக் கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக் குழு முன் தாயார் கதறி அழுதார்.

இல்லாவிடின் நான் தற்கொலைசெய்து கொள்வேன் எனவும் அவர் கூறினார்.

யாழ்ப்பாண பிரதேச செயலகப்பிரிவு மக்களிடம் சாட்சியங்களைப் பதிவதற்காக கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு நேற்றிரவு குருநகர் கலாசார மண்டபத்தில் கூடியது.

இதன்போது சாட்சியமளிக்கையிலேயே நிர்மலநாதன் மேரிரஞ்சினி மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் தனது சாட்சியத்தில்,

2007 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 23 ஆம் திகதி பகல் 12.00 மணிக்கு மூன்று மோட்டார் சைக்கிளில் வீட்டுக்கு வந்த 512-வது படைப்பிரிவைச் சேர்ந்த இராணுவத்தினர் எனது மகன் நிர்மலநாதன் மயூரனை அழைத்துச்சென்றனர்.

இது தொடர்பில் உடனடியாக நான் மனித உரிமை ஆணைக்குழு, யாழ்ப்பாணப் பொலிஸ் நிலையம் என்பவற்றில் முறைப்பாடு செய்தேன்.

மேற்படி இடங்களில் நான் முறைப்பாடுகளை பதிவுசெய்துவிட்டு வருவதற்குள் எனது மகனை மாலை 4.00 மணிக்கு இராணுவத்தினர் வீதியால் இழுத்துச்சென்றதை அயலவர்கள் கண்டுள்ளார்கள்.

இதனை நான் மீண்டும் மனிதஉரிமை ஆணைக்குழுவிடம் நேரில் சென்று தெரிவித்தேன்.

அத்துடன் எனது மகனை அழைத்துச் சென்ற இராணுவத்தினர் பயன்படுத்திய மோட்டார்சைக்கிள் இலக்கத்தையும் முறைப்பாட்டில் குறிப்பிட்டிருந்தேன்.


இது தொடர்பில் யாழ்ப்பாணம் வருகை தந்த வாசுதேவ நாணயக்கார, ரணில் விக்கிரம சிங்க, அமைச்சர் டியூ குணசேகர ஆகியோருக்கு கூறியுள்ளேன். ஆனால் எதுவித பலனும் கிடைக்கவில்லை என்றார்.

எனவே எனது மகனை மீட்டெடுத்துதாருங்கள் இல்லாவிடின் நான் தற்கொலை செய்வேன்.

இவ்வாறு நிர்மலநாதன் மேரிரஞ்சினி தனது சாட்சியத்தில் குறிப்பிட்டார். (ச-5)

# குறிகாட்டுவான்-நெடுந்தீவு பயணிகளுக்கான பாரிய படகு

## அமைக்கும் பணியைப் பார்வையிட்டார் அமைச்சர்



(யாழ்ப்பாணம்)

குறிகாட்டுவான்- நெடுந்தீவு பயணிகளின் போக்குவரத்தினை கருத்திற் கொண்டு பாரிய படகொன்று நிர்மாணிக்கப்பட்டு வருகின்றது. இப்படகு நிர்மாணிப்பினை ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகமும் பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறு தொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா நேற்று நேரில் சென்று பார்வையிட்டார்.

குறிகாட்டுவான், நெடுந்தீவு பயணிகளின் நன்மைகருதி புதிய படகொன்றின் அவசி யத்தை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் கவனத்திற்கு கொண்டுவந்திருந்தார்.

இதன் பயனாக வீதிஅபிவிருத்தி அதிகாரசபையின் மூலம் இப்படகு கொழும்புத்துறைமுகத்தில் டொக்யார்ட் நிறுவனத்தின் மூலம் 80 மில்லியன் பெறுமதியில் நிர்மாணிக்கப்பட்டு வருகிறது. இப்படகின் நிர்மாணப்பணிகள் பாதி பூர்த்தியாகியுள்ள நிலையில் மீதிப் பணிகள் வெகுவிரைவில் முடிபுக்கு வரும் என தெரியவந்துள்ளது. இப்படகின் மூலம் குறிகாட்டுவான்- நெடுந்தீவு இடையிலான பயணிகள் மிகுந்த பயனை அடைவர் என்பதுடன் இப்படகு இலவசப் போக்குவரத்தில் ஈடுபடுத்தப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இந்நிகழ்வில் யாழ்.மாவட்ட ஈபிடிபி நாடாளுமன்ற உறுப்பினர் சில்வேஸ்திரி அலெண்டின் (உதயன்) அமைச்சரின் பிரத்தியேக செயலாளர் தயானந்தா உட்பட உயரதிகாரிகள் பலரும் கலந்துகொண்டனர். (ச)

# வலைபந்தாட்ட சுற்றுப்போட்டி

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியின் உயர்தர மாணவர் மன்றத்தின் ஏற்பாட்டில் வலைபந்தாட்டச் சுற்றுப்போட்டி இன்று காலை 8.30 மணிக்கு கல்லூரியின் வலைபந்தாட்ட மைதானத்தில் ஆரம்பமாகவுள்ளது.

இப்போட்டியில் ஆண்கள் பிரிவு காலை 8.30 மணிக்கு யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியை எதிர்த்து கொக்குவில் இந்துக்கல்லூரியும், 9.30 மணிக்கு சண்டிலிப்பாய் இந்துக்கல்லூரியை எதிர்த்து யாழ்.புனித பத்திரிசியார் கல்லூரியும், 10.30 மணிக்கு யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரியை எதிர்த்து யாழ்ப்பாணக் கல்லூரியும் மாலை 3.00 மணிக்கு யாழ். மத்தியகல்லூரி பி பிரிவினை எதிர்த்து புனித பத்திரிசியார் கல்லூரியும் மாலை 4.00 மணிக்கு யாழ்.மத்தியகல்லூரி எ பிரிவினை எதிர்த்து சண்டிலிப்பாய் இந்துக்கல்லூரியும் மாலை 5.00 மணிக்கு யாழ்ப்பாணக்கல்லூரியை எதிர்த்து கொக்குவில் இந்துக்கல்லூரியும் மோதவுள்ளன.

இதேவேளை பெண்கள் பிரிவிற்கான போட்டியில் இன்றையதினம் காலை 8.00 மணிக்கு திருக்குடும்ப கன்னியர் பாடசாலையை எதிர்த்து பண்டத்தரிப்பு பெண்கள் உயர்தரப்பாடசாலையும் மோதவுள்ளன. (ச-7)

# தமிழரின் அரசியல் அபிலாசைக்கு...

நேற்று பேராசிரியர் சி.க. சிற்றம்பலம், பேராசிரியர் ஜீவன் கூல், பேராசிரியர் பொ.பாலசுந்தரம்பிள்ளை, முன்னாள் மாநகரசபை ஆணையாளர் சீ.வீ.கே.சிவஞானம் உள்ளிட்டோர் நேற்று சாட்சியமளித்தனர்.

சாட்சியத்தின் போது ஒரே கருத்துக்களை முன்வைத்திருந்தனர். யாழ்ப்பாணத்தில் விசாரணைகளை நடத்திவருகின்ற கற்றறிந்த பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக் குழுவின் முன்னால் இரண்டாவது நாளாக நேற்று அளிக்கப்பட்ட சாட்சியங்களில் பெரும்பாலானவை இனப்பிரச்சினைக்கு ஓர் அரசியல் தீர்வு காணப்படவேண்டும் என்பது வலியுறுத்தப்பட்டது.

கைது செய்யப்பட்டு காணாமல் போனவர்கள் மற்றும் இராணுவத்தினரால் கூட்டிச் செல்லப்பட்டவர்கள், இறுதி யுத்தத்தின் போது இராணுவத்தினரிடம் சரணடைந்த விடுதலைப் புலிகள் அமைப்பை சேர்ந்த முக்கியஸ்தர்கள் மற்றும் உறுப்பினர்கள் போன்றவர்களின் கதி என்ன என்பது தெரியாதிருப்பதாக நேற்று முன்தினம் அளிக்கப்பட்ட சாட்சியங்களில் உறவினர்களால் தெரிவிக்கப்பட்டிருந்தது.

நேற்று அளிக்கப்பட்ட சாட்சியத்தின் போது தமிழர்களது இன அடையாளம் உறுதிப்படுத்தப்பட்டு அவர்களுக்கு ஆட்சியதிகாரங்கள் பகிர்ந்தளிக்கப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என பேராசிரியர் சி.க.சிற்றம்பலம் மற்றும் யாழ்.மாநகர சபையின் முன்னாள் ஆணையாளர் சீ.வீ.கே.சிவஞானம் ஆகியோர் வலியுறுத்தியிருக்கின்றார்கள்.

கடந்த காலங்களில் மிதவாதத் தலைவர்கள் தொடக்கம் விடுதலைப்புலிகள் வரையில் தென்பகுதி அரசியல் தலைவர்கள், அரசாங்கங்களுடன் நடத்தப்பட்ட சமாதானப் பேச்சு வார்த்தைகள் தொடர்ச்சியாக தோல்வியிலேயே முடிபடைந்ததாகவும் ஆயினும் தமிழ் மக்களின் அரசியல் அபிலாசைகளுக்கு முடிபு காணப்படவில்லை என்றும் நல்லிணக்க ஆணைக்குழுவிடம் நேற்று சுட்டிக் காட்டப்பட்டிருக்கின்றது.

### அரசியல் தீர்வு அவசியம்

தமிழர் தாயகமாகிய வடகிழக்கு மாகாணங்களை உள்ளடக்கிய மொழி வழித் தமிழ் அரசின் அமைப்பில்தான் தமிழ் மக்களின் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண முடியும் என பேராசிரியர் சி.க.சிற்றம்பலம் நேற்று நல்லிணக்க ஆணைக்குழு முன்னிலையில் சாட்சியமளிக்கையில் கூறினார்.

இத்தகைய அரசுபிராந்திய அடிப்படையிலே வடகிழக்கு மாகாணங்களில் செயற்படுகின்ற நேரத்தில் மத்தியில் போதியளவு அதிகாரங்கள் பகிரப்படவேண்டும்.இவ்வாறான நிலைப்பாட்டிலேயே இனப்பிரச்சினைக்கு தீர்வு காணமுடியும்.

இதற்கான அடிப்படை காரணங்களைப் பார்க்கும் போது அரசியல் திருத்தங்களிலே அனைத்து மக்களையும் உள்ளடக்கியதாக அமைகின்ற அரசியல் அபிலாசைகள் உள்ளடக்கப்படவில்லை. இவ்வாறான அரசியல் திருத்தச் சட்டங்களை மாற்றி அமைக்கின்ற போதே பல்லின மக்கள் பரந்து வாழ்கின்ற நாடாக இலங்கை புதுப்பொலிவு பெறும் என்றார்.

### ஆயுதப் போராட்டம் ஏற்படலாம்

யுத்தம் முடிவடைந்துள்ள போதும் தமிழ் மக்களின் அபிலாசைகள் முழுமை பெறவில்லை. சாத்வீக வழியில் அதனை பெற்றுக்கொள்ள முயற்சிகள் எடுக்கப்படும். இல்லையேல் மீண்டும் ஒரு ஆயுதப் போராட்டம் வருவதை எவராலும் தடுக்கமுடியாது என நல்லிணக்க ஆணைக்குழு முன் சீ.வீ.கே சிவஞானம் அளித்த சாட்சியத்தில் தெரிவித்துள்ளார்.

அடிப்படையான கட்டுமானப் பணிகளை செய்வதன் மூலம் தமிழ் மக்கள் பிரச்சினைகளுக்கு முடிவை எட்டமுடியாது என்றும் அவர் தெரிவித்தார்.

### அரச கரும மொழியாக தமிழை உள்ளடக்க வேண்டும்

அரசியல் அமைப்புகளில் குறிப்பிடப்பட்டுள்ளது போன்று தமிழ் மொழியை அரச கருமமொழியாக அறிவிக்க வேண்டும் என பேராசிரியரும் சமாதானத்துக்கும் நல்லெண்ணத்துக்குமான மக்கள் குழுவின் தலைவருமான பொ.பாலசுந்தரம்பிள்ளை தெரிவித்தார்.

விசாரணை ஆணைக்குழுக்கு முன் சாட்சியமளிக்கும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

தமிழ்க் கைதிகளின் விடுதலை, மீள் குடியேற்றம் போன்றவை குறித்து பேராசிரியர் பொ.பாலசுந்தரம்பிள்ளை தெரிவித்தார். (ச-5)

# அல் ஜெஸீ...

பேச்சாளருமான பந்துல்ல ஜெயசேகர தெரிவித்துள்ளார். இலங்கையில் நடைபெற்ற யுத்தத்தின் கடைசிக் கட்டத்தில் எடுக்கப்பட்டதெனக்கூறி பலர் சுட்டுக்கொல்லப்படுவதை சித்திரிக்கும் புகைப்படங்களை கடந்த புதன் கிழமை அல் ஜெஸீரா தொலைக்காட்சி ஒளிபரப்பியமை குறிப்பிடத்தக்கது. மேற்படி புகைப் படங்கள் உண்மையானவை அல்ல எனவும் இலங்கை அரசாங்கம் கூறியுள்ளது. (ச-5)

# விடுதலைப்புலிகளா...

விசாரணையின் முடிவில் விடுதலைப் புலிகள் இயக்கத்தின் மீதான தடை மேலும் 2 ஆண்டுகளுக்கு நீடிக்கப்பட்டது என்று நீதிபதி தீர்ப்பளித்தார்.

இந்த தீர்ப்பையளித்த நீதிபதி விக்ரம்ஜித் சென், விடுதலைப் புலிகள் இயக்கத்தை சேர்ந்தவர்களில் எஞ்சியுள்ளவர்கள் இந்திய மண்ணை சட்டவிரோத நடவடிக்கைகளுக்கு பயன்படுத்தி வருகின்றனர்.

இந்தியாவில் விடுதலைப் புலிகள் இயக்கத்தை தடை செய்வதற்கு போதுமான ஆதரங்கள் உள்ளன.

எனவே அந்த இயக்கத்தின் மீதான தடையை மேலும் இரண்டு ஆண்டுகளுக்கு நீடித்து, கடந்த மே 14ஆம் திகதி மத்திய அரசு வெளியிட்ட அறிவிப்பு உறுதி செய்யப்படுகிறது என்றார்.

புலிகள் மீதான தடை நீடிப்பை இரத்து செய்யக் கோரி ம.தி.மு.க. பொதுச் செயலாளர் வைகோ. இலங்கைத் தமிழர் பாதுகாப்பு இயக்கத் தலைவர் பழ.நெடுமாறன் உள்ளிட்டோர் தீர்ப்பாயத்தில் வாதிட்டு வந்தது குறிப்பிடத்தக்கது.

இதற்கிடையே இலங்கை அரசாங்கத்திற்கு எதிரான கருத்துக்கள் காரணமாக அங்கிருந்து தப்பியோடி இந்தியாவில் தஞ்சம் புகுந்திருக்கும் ஊடகவியலாளர்கள் மற்றும் வர்த்தகர்களின் புகைப்படங்களுடனான விபரங்கள், கடவுச்சீட்டு இலக்கம் என்பன தற்போதைக்கு இந்திய அரசாங்கத்தின் பிரதான உளவுப் பிரிவிடம் இலங்கை அரசாங்கத்தால் கையளிக்கப்பட்டுள்ளதாக உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

அதன் பிரகாரம் குறித்த நபர்கள் இந்தியாவில் இருந்து எந்த நாட்டுக்கும் வெளியேறிச் செல்லமுடியாதவாறு தடுக்கப்படுவதுடன் புலிகளுக்கு ஆதரவான நடவடிக்கைகளில் ஈடுபட்ட குற்றச்சாட்டுக்களின் பேரில் கைது செய்யப்பட்டு இலங்கைக்கு நாடு கடத்தப்படவுள்ளனர் என்றும் தெரியவருகிறது. (ச-5)





ஸ்ரீ அம்மா பகவான் சரணம்

**நன்றிகள் தினம்**

மற்றும்

வரதீட்சை மாலை விரதாரம்பம்

வித்யா மாலை விரதாரம்பம்

காலம் :14 /11/ 2010 ஞாயிறு மு.ப. 10 மணி

இடம்: யா/வைத்தீஸ்வரக் கல்லூரி-யாழ்ப்பாணம்

- ஐஸ்வரியம் ,ஆரோக்கியம் ,குடும்பஷேமம் பெற்று சிறப்புறவும்
- மாணவ மாணவிகள் கல்வியில் உன்னத நிலை அடையவும்

21 தினங்கள் விரதமிருந்து சம்பூர்ண அவதாரமாகிய ஸ்ரீ அம்மா பகவானின் பூரண அருளைப் பெற அன்புடன் அழைக்கின்றோம்.

(2855) ஏகத்துவ நிலையம் - யாழ்.மாவட்டம்


# சிங்கள...

இதேவேளை வலி.வடக்கின் உயர் பாதுகாப்பு வலயத்தில் இருந்து வெளியேற்றப்பட்ட நிலையில் கொழும்பு உயர் நீதிமன்றத்தில் வழக்கை தாக்கல் செய்த ஒருவர் இங்கு சாட்சியமளிக்கையில்,

தாம் தாக்கல் செய்த வழக்குக்கு உயர்நீதிமன்றம் உடனடியாக தம்மை குடியமர்த்துமாறு தீர்ப்பு வழங்கியது.

எனினும் அந்தத் தீர்ப்பை இலங்கை அரசாங்கம் இன்றுவரை செயற்படுத்தவில்லை.

அதேவேளை தாம் வழக்கு தாக்கல் செய்த நேரத்தில் தாக்கல் செய்யப்பட்ட, வடக்கையும் கிழக்கையும் பிரிக்குமாறு உயர்நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பை அரசாங்கம் உடனடியாக அமுல்படுத்தியதாக அவர் சுட்டிக் காட்டினார்.

நாட்டின் நீதிமன்றத்தின் தீர்ப்பை அரசாங்கமே மதிக்காதபோது யாரிடம் முறையிடுவது என்றும் அவர் கேள்வி எழுப்பினார். (ந-5)

# சரணடைந்த முக்கிய புலி...

கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு நேற்று நண்பகல் சண்டிலிப்பாய், சங்கானை பிரதேச செயலர் பிரிவு மற்றும் காரைநகர் உதவி அரசாங்க அதிபர் பிரிவு மக்களிடம் சாட்சியங்களை பதிவு செய்தது.

சித்தன்கேணி தொழிற்பயிற்சி நிலையத்தில் நடைபெற்ற இவ் விசாரணைகளின் போது சாட்சியமளித்த வட்டுக்கோட்டை அராலி மத்தியைச் சேர்ந்த ரவிச்சந்திரன் அறிவொளி தெரிவித்ததாவது,

2009ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் புதுமாத்தளனை நெருங்கிய இராணுவத்தினர் மக்களின் குடியிருப்புக்கள் மீது ஷெல் தாக்குதலை அகோரமாக மேற்கொண்டனர்.

இதன்போது ஏப்ரல் 2ஆம் திகதி ஷெல்வீச்சில் காயமடைந்த நான் ஐ.சி.ஆர்.சி. கப்பல் மூலம் திருகோணமலைக்கு சிகிச்சைக்காக சென்றுவிட்டேன்.

எனினும் விடுதலைப்புலிகள் அமைப்பில் துணை அரசியல் துறைப் பொறுப்பாளராக இருந்த விஜிதரன் என்று அழைக்கப்படும் சிவசிதம்பரப்பிள்ளை ரவிச்சந்திரன் 2009 ஆம் ஆண்டு மே மாதம் யுத்தம் நிறைவடைந்த பின் யூனில் ஓமந்தை இராணுவத்திடம் எனது சகோதரனுக்கு முன் சரணடைந்தார்.

எனினும் இராணுவத்தினரிடம் சரணடைந்த பின்னர் எனது கணவர் தொடர்பான எதுவித தகவல்களும் கிடைக்கவில்லை.

எனது கணவரைத்தேடி பூஸா, வெலிக்கந்தை முகாம்களுக்கு நேரில் சென்றதுடன் ஐ.சி.ஆர்.சி., மனித உரிமைக்குழு என எல்லாவற்றிலும் முறைப்பாடு செய்தும் தகவல்கள் எதுவும் கிடைக்கவில்லை.

ஆனால் விடுதலைப்புலிகளின் முக்கிய உறுப்பினர்களை அரசாங்கம் சுட்டுக் கொன்றுவிட்டதாக எனக்கு தகவல்கள் கிடைத்தது.

எனவே எனது கணவர் தொடர்பான தகவல்களை பெற்றுத் தாருங்கள் என கேட்டுக் கொள்கின்றேன். இவ்வாறு அறிவொளி ரவிச்சந்திரன் தனது சாட்சியத்தில் குறிப்பிட்டார். (ச-5)


**புலமைப் பரிசில்–2011**

பயிற்சிப் பரீட்சை ①ல் அதிகூடிய புள்ளி பெற்ற பரிசுக்குரிய மாணவர்கள்

- சு.யசோதரன் -177 (யா/மத்திய கல்லூரி)
- க.ரேணுகா-175 (அச்சுவேலி தெ. திரேசா ம.க.)
- பி.ஆரணன்-172 (யா/புனித ஜோன் பொஸ்கோ)

(சி-1620)

அடுத்த பயிற்சிப் பரீட்சை ②
14.11.2010 (ஞாயிறு)
காலை 8.00 / 9.00 / 10.00
மாலை 2.00 / 3.00 / 4.00
விரும்பிய நேரங்களில் வெளி மாணவர்களும் பரீட்சைக்குத் தோற்றலாம்.

**நாவலர்**
ஆனைப்பந்தி,
யாழ்ப்பாணம்


# ஸ்ரீலங்கா முஸ்லிம்...

செய்து கொண்டதன் பின்னர் முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் தலைவர் ரவூப் ஹக்கீமிற்கு முக்கிய அமைச்சுப் பொறுப்பொன்று வழங்கப்பட உள்ளதாக உறுதிப்படுத்தப்படாத தகவல்கள் தெரிவிக்கின்றன.

எதிர்வரும் 22ஆம் திகதி சமர்ப்பிக்கப்படவுள்ள வரவு செலவுத் திட்ட யோசனைக்கு முஸ்லிம் காங்கிரஸ் ஆதரவளிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

ஸ்ரீலங்கா முஸ்லிம்காங்கிரஸ்கட்சி கடந்த பொதுத் தேர்தலில் ஐக்கிய தேசிய கட்சியுடன் இணைந்து யானைச் சின்னத்தில் போட்டியிட்டிருந்தமையும் ஐக்கிய தேசியக் கட்சி ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸுடன் தேசியப் பட்டியல் ஆசனங்களைப் பகிர்ந்து கொண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ந-5)


**விற்பனையாளர்,திருத்துநர் தேவை**

யாழ் நகரில் இயங்கும் மொபைல் சொப்பிற்கு விற்பனையாளர், மொபைல் போன் திருத்துநர், பழக விரும்புவோர் தேவை.

- A/L படித்தவர்கள் விரும்பத்தக்கது.
- சம்பளம்- ரூபா 12 000/=

(Bio-Data வை SMS செய்யுங்கள்)

வயதெல்லை 18-25

தொடர்பு : 0771937062

(2848)

**ஆக்க இலக்கிய படைப்பாளிகளின் நூல் காட்சியும், விற்பனையும்**

இடம் : நாவலர் கலாசார மண்டபம்
இன்றும் நாளையும்
காலை 9.00 மணி - மாலை 5.00 மணி

மாலை நேர நிகழ்வுகள்

- சனி மாலை 3.00 மணி - மறுபாதி சஞ்சிகை (காலாண்டு இதழ்) வெளியீடு
- ஞாயிறு மாலை 3.00 மணி - மலையக எழுத்தாளர் திரு.S.P. பாலமுருகனுடனான கலந்துரையாடல்

(2846)

BOOK LAB புத்தகக் கூடம் T.p:-0212227290, 0771285749

**ALLIANCE FRANCAISE DE JAFFNA**

The Only Official French Language Centre in Jaffna

*Learn French the French Way*

சர்வதேச மொழியான French மொழி வகுப்புகள் French Embassy இன் அனுசரணையுடன் பிரெஞ்சு கலாசார மையத்தின் ஊடாக கற்பிக்கப்படுகின்றது.

மாணவர்கள் ,சிறுவர்கள் ,வெளிநாட்டிற்கு போகிறவர்கள் எவரும் கற்றுக் கொள்ளலாம்...

புதிய பிரிவுகள் மிக விரைவில் ஆரம்பிக்கப்படவுள்ளன.

61, Kachcheri-Nallur Road, Jaffna. Phone: 021 2228093

E-mail: alliancejaffna@yahoo. com

மேலதிக விபரங்களை நேரில் / தொலைபேசியினூடாகப் பெறலாம்.

(2850)


இப்பத்திரிகை வலம்புரி அன்.கோஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 13.11.2010 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.